www.tamilarangam.net

# களத்தில்

ஒடுக்கப்படும் எமது மக்களின் சுபீட்சத்திற்காக போராடி வரும் எமது தேசிய விடுதலை இயக்கத்திற்கு, சர்வதேசத் தமிழ்ச்சமூகம் தொடர்ந்தும் தனது ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்குமென உறுதியாக நம்புகின்றேன்.

**- தமிழீழத் தேசியத் தலைவர்**

திருவள்ளுவர் ஆண்டு 2027 விடை 1 (15.05. 1996) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் அன்பளிப்பு: 60 p

**உள்ளே... ☞**


- விடுதலை நோக்கிய பயணத்தில் ...
- தாயகம் நோக்கிய பயணம்
- பேருள் மனிதன்
- சிகப்பி (சிறுகதை)
- மலையக மக்களே ...
- எத்தனை எத்தனை வித்துக்கள்...
- கையளவு நாடு...
- தமிழீழ மக்களின் பசியை போக்கவும்...


# தமிழ் மக்களுக்கு அமைதியையும் பாதுகாப்பையும் வழங்கும் ஆற்றல் சிறிலங்காவுக்கு இல்லை

## ❁ ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான தலையீடு உடன்தேவை !
## ❁ மக்களின் அமைப்பை அங்கீகரிப்பது மக்களுக்கு உதவும் ஒருவழியே !

**யாழ்** குடாநாட்டில் தொடர்ந்து கொண்டிருக்கும் சம்பவங்கள் தமிழ் மக்களுக்கு அமைதியையும் பாதுகாப்பையும் வழங்கும் ஆற்றல் சிறிலங்காவுக்கு இல்லை என்பதை மீண்டும் மீண்டும் தெளிவாக்குகின்றது. இதனால் துன்பப்படும் மக்களுக்கு உதவும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாயத் தலையீடு உடன்தேவையாக உள்ளது.

தற்போது சிறிலங்கா மேற்கொண்ட 'சூரியக்கதிர்' இராணுவ ஆக்கிரமிப்புக்கு முன் சித்திரைத் திங்கள் 10ஆம் நாள் தமிழ் மக்கள் மேற்கொண்ட பிரமாண்டமான மனிதச்சங்கிலி ஆர்ப்பாட்டத்தின் பின்னர் ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளர் அலுவலருக்கும், அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்க அலுவலருக்கும் ஊடாக ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளருக்கு அனுப்பி வைக்கப்பட்ட மகஜரில், ஐக்கிய நாடுகள் பொதுச்செயலாளரை உடனடியாகத் தலையீடு செய்து சிறிலங்கா நடத்தும் இன அழிப்புப் போரை நிறுத்தச்செய்து தமக்கு உதவும்படியாகக் கேட்டிருந்தனர். இதேகருத்தை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன், கடந்த கார்த்திகை மாதத்தில், ஐக்கிய நாடுகள் பொதுச்செயலாளர் மேன்மைதங்கிய திரு. பூட்ரஸ் பூட்ரஸ் காலி அவர்கள், பாரிய அளவில் இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு உதவும்படி அனைத்துலக நாடுகளுக்கு விடுத்த அவசர அழைப்பை ஏற்று பாராட்டி எழுதிய கடிதத்திலும் வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய நாடுகளின் சட்டக்கோவை 2(7)வது பிரிவு ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் ஐக்கிய நாடுகளின் தலையீட்டினை தடை செய்கிறது என்பது உண்மையே. ஆனால் இந்த 2(7)வது பிரிவை அமுல் நடாத்துவதற்கு அரசின் செயற் திறன் (Effectiveness) முன் நிபந்தனையாக உள்ளது. ஒரு அரசின் ஆற்றலின்மை (In effectiveness) வெளிப்படும் பட்சத்தில் அதனால் துன்புறும் மக்கள் சார்பாகத் தலையீடு செய்வதற்கான உரிமையை ஐக்கிய நாடுகள் சட்டக்கோவையின் 39வது பிரிவு ஐக்கிய நாடுகள் அமைப்புக்கு வழங்குகின்றது. மேலும் 1992ல் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் பாதுகாப்புச் சபைத்



தீர்மானம் 794ன்படி மனித உரிமைகளுக்கு ஏற்படும் பாரதூரமான பாதிப்புகளும், சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்புக்கும் எதிரானவையே எனக் கூறி மனித உரிமைகள் பாதிப்புறும் வேளையிலும் ஐக்கிய நாடுகள் சபை மனிதாயத் தலையீட்டினை (Humanitarian Intervention) மேற்கொள்ள ஐக்கிய நாடுகள் சபைக்கு உரிமை வழங்கியுள்ளது. இந்த மனிதாயத் தலையீடு என்பது, பாதிப்புற்ற மக்களுக்கான நேரடி உதவிகளை வழங்குவதும் – அவ்விதமான நேரடி மனிதாய உதவிகளை வழங்குவதற்கான பாதுகாப்பான சூழ்நிலையை உருவாக்குவதும் ஆகும். சமீபத்தில் வெளியான 'ஐக்கிய நாடுகளின் அமைதியினை நிலைநாட்டல்' சம்பந்தமான ஆய்வில் ஆய்வாளர்கள் "சிறிலங்கா ஐக்கிய நாடுகள் சபையினை தமிழர்களுக்கு உதவுமாறு அழைக்காது" என்று திட்டவட்டமாகக் கூறப்பட்டு, அதேவேளை தமிழர்களுக்கு உதவவேண்டிய தேவையின் நியாயத்தன்மை வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் பிராந்திய அமைப்புக்களை அமைதியைப் பேணுமாறு கோரும் மரபிலும், சிறிலங்காவில் தமிழர் பிரச்சினையில் இந்திய அமைதிகாக்கும் படை, 'அமைதியைக் காத்தல்' எனும் நோக்குடன் தலையிடவில்லை எனவும் ஆதிக்க முனைப்புக்களுடன் தலையீடு இடம்பெற்றதினால் பாதிப்புக்களே அதிகரித்தது எனவும் அவ்ஆய்வில் தெளிவு படுத்தப்பட்டுள்ளது. இதனை விடுதலைப் புலிகள் அன்று கூறியபொழுது ஏற்கமறுத்த அனைத்துலக சமூகம் இன்று விடுதலைப் புலிகளின் அரசியல் தீர்க்க தரிசனத்தின் ஆழத்தையும் ஆளுமையையும் உணர்கிறது.

இதைப்போலவே இலங்கைத் தமிழர் பிரச்சினை சிறுபான்மை–பெரும்பான்மைப் பிரச்சினையல்ல, உள்நாட்டு விவகாரமுமல்ல. பன்முனைத்தேசிய (Pluralistic Society) மக்களின் பிரச்சினையுமல்ல. காலனித்துவத்தின் எச்ச சொச்சத்தினால் சிங்களப் பெரும்பான்மை இலங்கைத்தீவில் உருவாக்கப்பட்டு பாராளுமன்ற பெரும்பான்மைக் கொடுங்கோன்மை (Tyranny of the majority) என்பது காலனித்துவத்தினால் தோற்றுவிக்கப்பட்டு ஏற்பட்ட காலனித்துவப் பிரச்சினை. சிங்கள அரசு, தமிழ் மக்கள் ஜனநாயக ரீதியாக ஒற்றையாட்சியில் இணைக்கப்படுவதற்கு பிரித்தானியாவின் சோல்பரி அரசியல் அமைப்பு விதித்த "சேர்க்கை நிபந்தனைகள் சிங்கள பெரும்பான்மை அரசால் 1972ல் பௌத்த சிங்கள இனவாதப் பிரகடனத்தால் மீறப்பட்டுவிட்டதினால் அரசற்ற நாட்டினமாக்கப்பட்டுவிட்ட (Nation Without State) தமிழ் மக்களின் அனைத்துலகப் பிரச்சினை. இதனை இந்தக் குடியரசுக்கு எதிரான தமிழ் மக்களின் நேரடித்தீர்ப்புக்கான வழியாக தமிழ் மக்களின் அரசியற் தலைவராக அன்று திகழ்ந்த தந்தை செல்வநாயகம், காங்கேசன்துறை பாராளுமன்றத் தொகுதியை இராஜினாமாச் செய்து தேர்தலுக்கு வழிசமைத்து, மூன்றாண்டு கால சிறிலங்காவின் இழுத்தடிப்புக்குப் பின்னர் நடத்தப்பட்ட தேர்தலில் அறுதிப் பெரும்பான்மையுடன் வெற்றி பெற்றதன் மூலம் நிரூபித்தார். பின்னர் அவர் (1975இல்) இத் தேர்தல் வெற்றியை அடுத்து சிறிலங்காப் பாராளுமன்றத்தில் விடுத்து அறிக்கையில், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையினை பிரகடனப்படுத்தி ஒற்றையாட்சியில் இருந்து தமிழ் மக்கள் விலகுவதற்கான காரணங்களைத் தெளிவுபடுத்தினார். அதன்

தொடர்ச்சி 12 ம் பக்கம்...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழீழ தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ மக்களின் பசியைப் போக்கவும் மானத்தைக் காக்கவும் அள்ளிக் கொடுங்கள்

இம்முறை சங்க காலக் காட்சியொன்றினை தரிசிக்க உங்களை அழைத்துப் போக ஆசைப்படுகிறேன்.

இது போர்க்களக் காட்சியல்ல. போரோடு சம்பந்தப்பட்ட காட்சி.

இந்தக் காட்சியை தீட்டிய சங்கப் புலவரது பெயர் கோவூர் கீழார்.

புறநானூற்றில் இப் புலவரது பாடல்கள் மொத்தம் பதினைந்து சேர்க்கப்பட்டிருக்கின்றன. இந்தப் பாடல்கள் பதினைந்தில் ஒன்றில் வரும் காட்சியைத்தான் இப்போது பார்க்கப் போகிறோம்.

சோழன் நெடுங்கிள்ளியின் தலைநகர் ஆவூர். அந்த ஆவூரை நலங்கிள்ளி படைகொண்டுதாக்கி முற்றுகைக்கு உள்ளாக்கி விடுகிறான்.

முற்றுகைக்கு உள்ளான சோழன் நெடுங்கிள்ளி ஆவூரின் கோட்டைக் கதவுகளை சாத்திக்கொண்டு அரண்மனைக்குள் அமைச்சர்கள், தானைத் தலைவர்கள் சகிதம் உள்ளிருந்து விடுகிறான்.

சோழன் நலங்கிள்ளியை எதிர்த்து நிற்பவன் பனம்பூச்சூடிய சேர மன்னன் அல்ல. வேப்பந்தார் அணிந்த பாண்டியனும் அல்லன். இருவருமே ஆத்திப் பூவாலான மாலைகள் அணிந்த சோழ மன்னர்களே!

இரும்பனை வெண்தோடு
மலைந்தோன் அல்லன்.
கருஞ்சினை வேம்பின்
தெரியலோன் அல்லன்.
நின்ன கண்ணியும் ஆர்மிடைந்
தன்றே, நின்னொடு பொருவோன்
கண்ணியும் ஆர்மிடைந்தன்றே!

(புறம் 45, 1–4)

(1)இரும்பனை வெண்தோடு மலைந்தோன்–சேரன்
(2)கருஞ்சினை வேம்பின் தெரியலோன்–பாண்டியன்
(3)ஆர்மிடைந்தன்று–ஆத்திப் பூவால் செறிவாகக் கட்டப்பட்ட மாலை
(4)ஆர்–மாலை

இந்தப் பாடல் வரிகளைப் பாடிய புலவர் கோவூர் கிழார்தான். கோவூர் கிழார் கூழுக்குப் பாடாத புலவர்.

**எமது மக்களின் பசிப்பிணியைப் போக்கவும் அவர்கள் மானத்தைக் காக்கவும் கிள்ளிக் கொடுக்காமல் அள்ளிக் கொடுக்க புலம்பெயர்வாழ் தமிழ் மக்கள் முன்னரைவிட பத்துமடங்கு வேகத்தோடு முன்வரவேண்டும்.**

"நீங்கள் இருவருமே சோழ மன்னர்கள். இதில் ஒருவர் வென்று மற்றவர் தோற்றாலும் தோற்பது சோழர் குலமே! ஆதலால் இருவரது செயலும் சோழர் குடிப்பெருமைக்கு தக்கதன்று" என்று புலவர் கோவூர் கிழார் இரு மன்னர்களையும் விழித்து இடித்துரைக்கின்றார்.

இனி ஆவூருக்கு வருவோம். ஆவூர் போர் முற்றுகைக்கு உள்ளானாலும் அது பொருளாதார முற்றுகைக்கும் உள்ளாகிவிடுகிறது.

கோட்டைக்குள் அடைபட்டுக் கிடக்கும் சோழன் நெடுங்கிள்ளியைக் கண்டு புலவர் கோவூர் கிழார் நாட்டு மக்கள் பொருளாதார முற்றுகையினால் படும் அல்லல்களையும் அனர்த்தங்களையும் எடுத்துச் சொல்கிறார்.

பசிமிகுந்த யானைகள் உணவு இல்லாது கட்டிய கம்பம் வருந்துமாறு சாய்ந்து நிலத்தில் புரண்டு இடியேறுபோல் பிளிறுகின்றனவாம்.

பாலில்லாத பச்சிளங்குழந்தைகள் அழுகின்றனவாம். மகளிர் பூவில்லாத வெறுந்தலையை முடிக்கின்றனராம்.

நல்ல வீட்டிலும் குடிதண்ணீர் இன்றி வருந்தி மக்கள் கதறுகின்றனராம்.

இரும்பிடித் தொழுதியொடு
பெருங்கயம் படியா
நெல்லுடைக் கவளமொடு
நெய்ம்மிதி பெறஅ,
திருந்திரை நோன்வெளில்
வருந்த ஒற்றி,
நிலமிசைப் புரளும் கைய,
வெய்துயிர்த்து,
அலமரல் யானை உருமென
முழங்கவும்
பாலில் குழவி அலறவும்,
மகளிர்
பூவில் வறுந்தலை முடிப்பவும்,
நீரில்
வினைபுனை நல்லில்
இனைகூஉக் கேட்பவும்
இன்னாது அம்ம ஈங்கு இனிது
இருத்தல்

(புறம் 44, 1–9)

(1)நெய்ம்மிதி–நெய்யால் மிதித்துத் திரட்டப்பட்ட கவளம்.
(2)பெறாஅ–பெறாவாய்
(3)அரை–மருங்கு
(4)நோன் வெளில்–வலிய கம்பம்
(5)இனைகூஉக் கேட்பவும்–வருந்திக் கூப்பிடும் கூப்பாட்டைக் கேட்கவும்

போர் முற்றுகையாலும், பொருளாதார முற்றுகையாலும் அழும் குழந்தைகள், வருந்தும் மகளிர், குடிதண்ணீரின்றி தவிக்கும் சோழநாட்டு குடிமக்கள் இவர்கள் எல்லோரையும் புலவர் கோவூர் கிழார் சொல்லோவியமாகத் தீட்டி எம் கண்முன் நிறுத்தியுள்ளார்.

புலவர் கோவுர் கிழார் பாட்டில் தீட்டியிருக்கும் இக்காட்சி போரினாலும், பொருளாதார முற்றுகையாலும் அல்லல்பட்டு ஆற்றாது கண்ணீர்விட்டு அழும் தமிழீழ தாயக மக்களின் அவலத்தை, சோழநாட்டுக் குடிமக்களின் துன்பத்தைவிட பன்மடங்கு துயரத்தை அனுபவிக்கும் தமிழ் மக்களது வாழ்க்கையை, எண்ணிடச் செய்கிறது. சிந்திக்கவும் வைக்கிறது.

சோழன் நெடுங்கிள்ளியும், சோழன் நலங்கிள்ளியும் ஒரு குடிப்பிறந்தவர்கள். அவர்களுக்கு இடையிலான போர் உடன்பிறப்புகளுக்குள், ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகளுக்கு இடையிலான போர். குடிமக்களும் அவ்வாறே.

ஆனால் தமிழீழ குடிமக்களோ அந்நியர்களின் படையெடுப்பின் காரணமாக அவலத்துக்குள்ளாகி சொல்லொணா அல்லல்களுக்கு ஆளாகியிருக்கும் மக்கள்.

அந்நிய ஆட்சியின் பொருளாதார முற்றுகையால் உண்ண உணவு, உடுக்க உடை, உறைய உறைவிடம் இல்லாது நாளும் பொழுதும் செத்து மடிந்துகொண்டிருக்கும் மக்கள்.

தமிழீழத்திலிருந்து, குறிப்பாக வட தமிழீழத்தின் வன்னிப் பெருநிலத்திலிருந்து வெளிவரும் செய்திகள் நெஞ்சைப் பிழிவனவாக இருக்கின்றன.

உடுத்த உடுப்போடு கையில் அகப்பட்டதை எடுத்துக்கொண்டு குழந்தை குட்டிகளோடு வெளியேறிய எம் உடன்பிறப்புக்கள் அனுபவிக்கும் துன்பங்கள், துயரங்கள் கொஞ்சநஞ்சமல்ல.

போதிய சத்துணவும், மருந்துவகைகளும் இல்லாததால் இந்த மக்கள் தேகச் சீர்கேட்டின் காரணமாக நோய்நொடிகளால் பீடிக்கப்பட்டுள்ளார்கள். பசியும் பட்டினியும் தலைதூக்கியுள்ளன.

"இந்நிலை தொடருமானால் சோமாலியா நாட்டில் மக்களுக்கு ஏற்பட்ட மிக மோசமான பாதிப்புக்களைப்போல இலங்கைத் தீவின் வடபகுதி பிரதேச மக்களுக்கும் விரைவாக ஏற்படுவதைத் தடுக்கமுடியாது போய்விடும் என வடபகுதியிலுள்ள நிவாரணப் பணியகங்கள் அபாய அறிவிப்புச் செய்துள்ளன" என அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரையில் சிங்கள இராணுவத்தின் படையெடுப்பால் 80 வீதமான மக்கள் அங்கிருந்து வெளியேறி உள்ளார்கள்.

**தமிழீழ அன்னையை நவீன மாடுநிகர் துச்சாதனர்கள் துயிலுரியப் போர்க்கோலம் பூண்டுவருகிறார்கள். நாம் பிறந்து வாழ்ந்த மண்ணையும் அம்மண்ணின் மக்களையும் காக்கும் பொறுப்பில் கணிசமான பங்கு புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களைச் சார்ந்ததாகும்.**

இதனால் வன்னிப் பிரதேசத்தின் மக்கள் தொகை 180,000 இல் இருந்து 700,000 இலட்சமாக உயர்ந்துள்ளது.

பெரிய சிரமத்தின் மத்தியில் இவர்களுக்கு ஐக்கிய நாடுகள் அகதிகள் நிவாரண அமைப்பினால் வழங்கப்படும் உலர் உணவு இம்மக்களின் உணவுத் தேவையின் 50 வீதங்கூட பூர்த்தி செய்யப் போதுமானதாக இல்லையென அரசு அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.

தமிழீழத்தின் மீதான சிங்கள–பௌத்த இனவாத அரசின் பொருளாதாரத் தடையால் அத்தியாவசியப் பொருட்களுக்கு கடுமையான தட்டுப்பாடு நிலவுகின்றது.

தாண்டிக்குளத்திலிருக்கும் சிங்கள இராணுவம் தன்னிச்சையாகப் பொருளாதாரத் தடையை மேலும் இறுக்கி வருகிறது.

தமிழ் இனத்தின் விடுதலைப் போராட்டத்தைக் காட்டிக்கொடுத்து கூலிக்குத் துப்பாக்கி ஏந்தி தமிழீழ அன்னையை நவீன மாடுநிகர் துச்சாதனர்கள் துயிலுரியப் போர்க்கோலம் பூண்டுவருகிறார்கள். நாம் பிறந்து வாழ்ந்த மண்ணையும் அம்மண்ணின் மக்களையும் காக்கும் பொறுப்பில் கணிசமான பங்கு புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களைச் சார்ந்ததாகும்.

வயிற்றைக் கழுவும் புளட் கும்பல் கப்பம் கேட்டு உணவு வாகனங்கள் தாண்டாதவாறு பார்த்துக்கொள்கின்றது.

செயற்கையாக மனிதருக்கு மனிதராக இருப்பவர்கள் என்று சொல்லிக்கொள்பவர்கள் செய்யும் கொடுமை போதாதென்று தமிழ் மக்களை இயற்கையும் இம்முறை பழிவாங்கியுள்ளது.

வடதமிழீழத்தில் நிலவுகின்ற மிகக் கொடுமையான வரட்சிகாரணமாகவும் கொடுமையான வெப்பம் காரணமாகவும் கமச்செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

வழமையான அறுவடையில் பத்து வீதம் கூட இம்முறை நெல் அறுவடையாகவில்லை என்று அரச அதிகாரிகள் கணிப்பீடு செய்துள்ளார்கள்.

மக்கள் குடிதண்ணீருக்கே அல்லற் படுவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழீழ மக்கள் தொகையில் இருபது வீதமானோர் கடலை நம்பி வாழ்கிறவர்கள். இவர்கள் மீன்பிடி வலையத்தடையாலும் விமானக்குண்டு வீச்சினாலும் செல்லடித் தாக்குதலினாலும் இடப்பெயர்வினாலும் தொழில் செய்ய வகையின்றி வாடுகிறார்கள்.

இந்தச் சூழலில் சிங்கள பௌத்த இனவாத அரசு வடமராட்சி தென்மராட்சி மற்றும் வன்னிப் பெருநிலம் இவற்றின்மீது பாரிய படையெடுப்பை நடாத்தியுள்ளது.

விடுதலைப் புலிகளின் முகாம்கள் மீது செல் தாக்குதலும் குண்டுத்தாக்குதலும் நடாத்தப்போவதாகவும் இதனால் விடுதலைப் புலிகளின் முகாம்களை அண்டியிருக்கும் பொதுமக்கள் விலகி இருக்க வேண்டுமென்றும் ஆதிக்க வெறி பிடித்த சனாதிபதி சந்திரிகாவின் அரசு பகிரங்கமாக அறிவித்தல் விடுத்துள்ளது.

தமிழ் சித்திரைப் புத்தாண்டுக்கு முன் விடுதலைப் புலிகளை முற்றாக அழித்து விடுவோம் என சூளுரைத்த நவீன மாடுநிகர் துச்சாதனன் துணைப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை புதிய கெடுவை பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

எனவே தமிழ் மக்கள் இன்னுமொரு பாரிய இன ஒழிப்பு யுத்தத்திற்கு முகம் கொடுத்து அழிவின் விளிம்பில் நின்று கொண்டிருக்கிறார்கள். தமிழீழ அன்னையை துச்சாதனர்கள் துயிலுரியப் போர்க்கோலம் பூண்டு வருகிறார்கள். நாம் பிறந்து வாழ்ந்த மண்ணையும் மண்ணுக்குரிய மக்களையும் காக்கும் பொறுப்பில் கணிசமான பங்கு புலம்பெயர்ந்து வாழும் மக்களைச் சார்ந்ததாகும்.

Throw her a piece of cloth
Her nekedness to hide
This Thamil refugee
In Thamil Eelam

How long can she hide her shames
Her arms and legs drawn up
On a road without name
Holding an empty cup?
This Thamil refugee
In Thamil Eelam.
Throw her a piece of cloth.

The cloth that she wore before
That which the soldiers tore
Now lies soaked in gore
Over it the Cannon roar.
This Thamil refugee
In Thamil Eelam
Throw her a piece of cloth.

அமெரிக்கத் தமிழர் ஆரம்ப முயற்சியாக 1375 இடம்பெயர்ந்த குடும்பங்களை பராமரிக்கும் பொறுப்பை ஏற்க முன்வந்துள்ளார்கள்.

எமது மக்களின் பசிப்பிணியைப் போக்கவும் அவர்கள் மானத்தைக் காக்கவும் கிள்ளிக் கொடுக்காமல் அள்ளிக் கொடுக்க புலம்பெயர் வாழ் தமிழ் மக்கள் முன்னரைவிட பத்துமடங்கு வேகத்தோடு முன்வரவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## மக்களை மனிதக் கேடயமாக்கும் சிறிலங்கா

யாழ் குடாநாட்டில், சிறிலங்கா அரசின் பாதுகாப்பையும் ஆட்சியையும் ஏற்கமறுத்து–பெருநிலப்பரப்பு நோக்கி, விடுதலைப் புலிகளின் பாதுகாப்பையும் ஆட்சியையும் நாடி– தமிழ் மக்கள் முற்று முழுதாக வெளியேறியமை சந்திரிகா, தான் நடத்தும் "இன அழிப்பு" நோக்கிலான போரினை நியாயப்படுத்த "தமிழ் மக்களை விடுதலைப் புலிகளிடமிருந்து மீட்பதற்காக" போர் செய்வதாகக் கூறிவந்த பொய்மையின் உண்மையினை உலகுக்கு அம்பலமாக்கியது. இந்தப் பாரிய மக்கள் இடப்பெயர்வினால் ஏற்படக்கூடிய அத்தியாவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்ய முயன்ற உள்நாட்டு, வெளிநாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களைத் தடுத்து, தன்மூலமாகவே செயற்பட வேண்டுமெனப் பணித்த சிறிலங்கா, மக்களின் விரைவான இடப்பெயர்வைத் திட்டமிட்டுக் காலதாமதமாக்கியது. அத்துடன் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் தமிழ் மக்களின் அதீத மனிதாயத் தேவை நேரத்தில் உதவும்படி சர்வதேச நாடுகளுக்கு விடுத்த அழைப்பையும் பக்க சார்பினைத் தோற்றுவிக்குமென நிராகரித்து ஐக்கிய நாடுகள் சபையையும் அவமதித்தது.

இதனால் இடம்பெயர்ந்த மக்கள் தாம் குறித்த இடத்தை அடைவதற்கும் வாழ்வை அமைப்பதற்கும் – விடுதலைப் புலிகளும் – விடுதலைப் புலிகளின் தலைமையிலான அரசு நோக்கிய அரசின் புனர்வாழ்வு புனர்நிர்மாண பகுதியினரும் முயன்று உழைத்து வருகையில் இந்தக் காலதாமதத்தினைக் கூடத் தனது இராணுவத் தந்திரோபாயத்தின் கருவியாகப் பயன்படுத்திய சந்திரிகா அரசு, அகதிகளும், இடம்பெயர்ந்தோரும் குடிசன அடர்த்தியினை அதிகரித்த பகுதிகளை நோக்கி வகைதொகையற்ற சுடுதிறன் பிரயோகம், குண்டு வீச்சுக்கள், எறிகணை வீச்சுக்களை நடாத்தி இப்பகுதிகளை ஆக்கிரமித்துள்ளது. இதற்கு "றிவிரெச–2" எனக் குறியீட்டு குதூகலிக்கும்

சந்திரிகாவின் இராணுவத் தந்திரோபாயத்தின் இலக்காக இந்த அகதிகளும், இடம்பெயர்ந்தோருமான மக்கள் மாற்றப்பட்டனர். இராணுவ அச்சுறுத்தலின் பின்னணியில் இம்மக்களை–அவர்கள் ஏற்க மறுத்த சிங்கள அரச படைகளின் ஆக்கிரமிப்புப் பிரதேசத்தினுள் கொண்டுசென்று– அனைத்துலகச் சட்டங்களுக்கு முரணான வகையில் மனிதக் கேடயங்களாக மாற்றியுள்ளனர்.

சிங்கள அரசின் பயங்கரமான இன அழிப்பு நோக்கிற்கு– குடிசன அடர்த்தியான பகுதியில் மேற்கொள்ளப்படும் கடும் எதிர்த் தாக்குதல்கள் – மேலும் வழிகோலும் எனும் மக்கள் நல நோக்கின் நிமித்தம், விடுதலைப் புலிகள் கடும் சண்டையினைத் தவிர்த்துள்ளனர். ஆயினும் சிறிலங்கா அரசின் ஒவ்வொரு ஆக்கிரமிப்பு நடவடிக்கையும் மக்களதும் – விடுதலைப் புலிகளினதும் விடுதலை மீதான உறுதியினையும் தேவையினையும் மேலும் மேலும் அதிகரிக்கச் செய்வதுடன் விடுதலைப் புலிகளின் தாக்குதற் திறனையும் உறுதியுற வைக்கிறது. மேலும் பிரித்தானிய சமூகவியலாளர் பிராங் வெப்ஸ்டர் தேச அரசு ஒன்றிற்கான தேவையாக "போர் ஒன்று திணிக்கப்படுகையில் அதனை போர் ரீதியாக எதிர்க்கும் தன்மையினை" (Preparedness for war in a requisite of all nations states) முதன்மைப்படுத்துகிறார்.

இதனைத் தமிழீழ மக்களது சூழ்நிலையுடன் பொருத்திப் பார்ப்போம். சந்திரிகாவுக்கு, தமிழீழ மக்களின் தமிழீழ அரசு நோக்கிய அரசுக்கு(Defacto State) உலகளவில் வளர்ந்துவரும் அங்கீகாரத்தன்மையின் அடிப்படை, தமிழ் மக்களுக்கு தம்மேல் போர் திணிக்கப்படுகையில் எதிர்த்து போர் செய்யும் திறமை உண்டென்பதில் தங்கியுள்ளது என்பது தெளிவாகத் தெரிந்ததினால், அதனை இல்லாது அழித்து தமிழீழ மக்களின் தேச அரசை (Nation State) இல்லாமல் செய்வதற்கான இராச தந்திர முயற்சியாகப் பேச்சுவார்த்தை நாடகத்தை நடாத்தி – அதனுடன் கூடவே சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தேசியமயக் கொள்கைகளையெல்லாம் தூர வீசி உலகச் சந்தையின் ஆர்வங்களுக்கெல்லாம் இடங்கொடுக்கும் தன்மை இருப்பதாகவும்காட்டி, சிறிலங்காவின் போக்குக்குச் சாதகமான சூழலை உருவாக்க முயன்றார். சிறிலங்கா அரசுக்கு உலக ரீதியாக "இனவெறி அரசபயங்கரவாத" அரசு என உள்ள கடினமான கருத்தைத் திசை திருப்பும் பேச்சுவார்த்தை நாடகத்தினை உணர்ந்து விடுதலைப் புலிகள் "மக்களது நாளாந்த வாழ்வு வழமைக்குத் திரும்புவதற்கான பிரச்சனைகளை முதலில் தீர்க்கும்படி மக்கள் நலனுக்கு முன்னுரிமை கொடுத்துப் பேச்சுவார்த்தை நடாத்தினர். இதனைச் செயற்படுத்த மறுத்து தமிழ் மக்களுடன் ஜனநாயக ஆட்சியொன்றினை உருவாக்குவதற்கான உளவியல் ஒப்பந்தம் (Psychological Contract) எதுவுமே தனக்கு எப்பொழுதுமே இல்லையென்பதனை உறுதிசெய்து மோதல் தவிர்ப்பை சிறிலங்கா அர்த்தமற்றதாக்கியது. கூடவே மோதல் தவிர்ப்பை தனது இராணுவ நலன்கள், குறிப்பாக சுடுதிறன் மற்றும் வான்வழி, கடல்வழித் தாக்குதிறன்களைப் பெருக்கிக்கொண்ட சிறிலங்கா, ஐம்பது நாட்களுக்கும் மேலான தொடர்ச் சண்டையினால் தமிழ் மக்களின் உயிர் உடமை உட்கட்டுமானங்களை இராணுவ இலக்காக்கி இனங்காணக்கூடிய உயிர் அச்சத்தினை நிறுவியமையே பாரிய இடம்பெயர்வாக மக்கள் புறப்படக்காரணமாகியது.

இன்று இவ்வாறு தமது மனவிருப்பின்பேரில் இடம்பெயர்ந்து குறித்த பிரதேசத்தை அடைய காலதாமதமாக்கியதினால் தவித்துக்கொண்டிருந்த அப்பாவி மக்களை இராணுவ வலிமைகொண்டு ஆயுத பலாத்காரத்தினால் அவர்களது மனவிருப்புக்கு மாறான வகையில் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்குக் கொண்டுசென்று மனிதக் கேடயமாக்கிவருகின்றனர். மக்களின் விருப்பினை ஆயுதபலாத்காரத்தினால் பெறுவது அனைத்துலகப் போர்க் குற்றச்செயல். ஆகவே இதனை எடுத்து விளக்கி "தமிழ் மக்கள் மேல் திணிக்கப்படும் போரினை எதிர்த்துப் போராடும் வலிமையினை வெளிப்படுத்துவதனால், தமிழ் மக்களைத் தேச இனமாக இனங்காட்டும் தன்மையினை உருவாக்கியுள்ள விடுதலைப் புலிகளையும்–தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தினையும் சர்வ தேசத்தினரால் அங்கீகரிக்கவைக்க உழைப்பது ஒன்றே இனி மக்களின் அமைதிக்கு ஒரேவழி. ❑

# தமிழர் புனர்வாழ்வு நிதிக்காக டென்மார்க்கில் கலைமாலை

தமிழர் புனர்வாழ்வு நிதிக்காக கலைமாலை நிகழ்வொன்றை டென்மார்க்கிலுள்ள வையன் நகர மக்கள் கடந்த புத்தாண்டன்று ஒழுங்கு செய்திருந்தனர். பெருந்தொகையான மக்கள் கலந்து கொண்டு தமது ஒருமித்த ஆதரவைத் தெரிவித்து க்கொண்டனர். விழாவில் சேகரிக்கப்பட்ட நிதி டென்மார்க் விடுதலைப் புலிகள் கிளைப் பிரதிநிதியிடம் வழங்கப்பட்டது. விழாவிற்கான சகல கலை நிகழ்வுகளையும் கலை பண்பாட்டுக் கழகத்தினர் ஒழுங்கு செய்திருந்தனர்.



சிறிலங்கா அரசின் 'சூரியக்கதிர்' நடவடிக்கையின்போது மாவீரரான போராளியின் தந்தை திரு. இளையதம்பி நடராஜா மங்கள விளக்கேற்ற, தமிழீழ இசைக்குழுவினரின் கொடி வணக்கப் பாடலுடன் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. வையன் நகர மக்களின் சார்பில் திரு. குழந்தை நற்குணராசா அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். தமிழீழத்தில் தான் கண்ட நிகழ்வுகளையும் சிறிலங்கா இராணுவத்தின் அட்டூழியங்களையும் திருமதி சிறீமோகன் ரதிதேவி உணர்ச்சிக் கவியாக எடுத்துரைத்தார். தாய்க்குலத்தின் சார்பில் சந்திரிகா அரசின் மனிதாபிமானமற்ற நடவடிக்கைகளைக் கண்டித்து ஒவ்வொரு காலகட்டத்திலும் சிறிலங்கா அரசு நிகழ்த்திய தவறுகளைச் சுட்டிக்காட்டி உரையாற்றினார் திருமதி நேசமணி பாலசிங்கம் அவர்கள்.

'தீருவில் தீ' என்னும் குறுநாட்டிய நிகழ்வைத்தொடர்ந்து, 'இமயத்தில் இவர்கள்' என்னும் நாடகம் மேடையேற்றப்பட்டது. தமிழீழமெங்கும் பரவியிருக்கும் இயற்கைக்காட்சிகளின் சிறப்பையும் மாவீரர்கள், துணைப்படை வீரர்கள், வயோதிப மூதாட்டியர் போன்றோருடைய மன உணர்வுகளைச் சித்தரிக்கும் இந்நாடகம் பிரதியாக்க உள்ளடக்கத்தில் ஒரு புதிய கருப்பொருளைப் படம் பிடித்தது.

மேற்படி விழாவில் சிறப்புரையாற்றிய கலை–பண்பாட்டுக் கழக டென்மார்க் கிளைப் பொறுப்பாளர்:

"புலம்பெயர் மக்கள் தமது தேசத்தைக் கட்டியமைக்க வேண்டிய வரலாற்றுப் பொறுப்பை செம்மையாக ஆற்றவேண்டிய காலம் இது" என்று தெரிவித்தார். அவர் மேலும், "படையுள்ள அனைவராலும் போரைத் தொடங்கமுடியும். ஆனால், படையுள்ள எல்லோராலுமே வெற்றி பெற்றுவிட முடியாது. வெற்றியென்பது பெரும் படையணிகளால்தான் கிடைக்கும் என்ற எண்ணம் பிழையானது என்ற உண்மையை 15ம் நூற்றாண்டிற்கும் முன்பே உலகம் கண்டுகொண்டுவிட்டது. ஸ்பானியா கட்டியமைத்த 'ஆர்மடா' என்ற பெரும் கடற்படை அணியை வரலாற்றுக் காலத்தில் கடலில் நகரும் தரைப்படை என்று புகழ்ந்தார்கள். இப்படையணியால் 'டைனசோர்'களைப் போல முன்னோக்கி நகரமுடிந்தது. அது போல பின்புறமாகவும் நகரமுடிந்தது. ஆனால் சூழ்நிலைக்கேற்ப இப்படையணியை மாற்றியமைக்க முடியவில்லை. எப்படி 'டைனசோர்'கள் வேகமாகத் திரும்ப முடியாத காரணத்தால் சிறுவிலங்குகளிடம் தோல்விகண்டனவோ அதே கோட்பாட்டைக் கடைப்பிடித்து ஸ்பானியக் கடற்படையைத் தோற்கடித்து, ஸ்பானியாவின் பொற்காலத்தை முறியடித்தனர் ஆங்கிலேயர். ஸ்பானியாவின் கடற்படை கொண்டிருந்த தொழில்நுட்பத் தவறுகளேயே இன்றைய சிறிலங்காவின் பெரும்படையணியும் கொண்டிருக்கிறது. அதனால்தான் அதன் நடவடிக்கைகளும் முன்னோக்கிப் பாய்தல் என்ற பெயரை இயற்கையாகவே பெற்றிருக்கக் காண்கிறோம். எப்போதுமே பெரும் படையணிகள் சிறு படையணிகளின் தாக்குதலால் நிலைகுலையும்.

தேசத்தை அமைப்பதும் தேசத்தைக் கட்டியமைப்பதும் இருவேறுபட்ட விடயங்களாகும். தேசத்தை அமைக்கும் போர் விடுதலைப் புலிகளால் மதியூகத்தோடு முன்நகர்த்தப்படுகிறது. அதுபோல தேசத்தைக் கட்டியமைப்பதற்கான பணியை புலம்பெயர்ந்து வாழும் மக்களால் சிறப்புடன் ஆற்றமுடியும். புலம்பெயர் வாழ்வை நாம் புது நம்பிக்கையுடன் சந்திக்க வேண்டுமென்றார். இனியாவது நாம் விரயங்களைத் தடுத்தல் வேண்டும். நம்மால் நடாத்தப்படும் ஆடம்பரமாகக் கொண்டாடப்படும் பிறந்தநாள் விழாக்கள் போன்ற செலவுகளில் 50 விழுக்காட்டை சேர்த்திருந்தாலே அப்பணத்தால், சிறிலங்கா அரசின் 'சூரியக்கதிர்' நடவடிக்கையால் அகதிகளான மக்கள் அனைவரையுமே பராமரித்திருக்க முடியும். வெளிநாடுகளுக்கு புலம்பெயர்ந்த 3 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் ஒன்றிணைந்தால்– தமிழீழத் தேசத்தையே அற்புதமாகக் கட்டியமைக்க முடியும்– இது உண்மை. ஐரோப்பியர் புலம்பெயர்ந்து மற்ற நாடுகளில் இருந்த செல்வங்களை கொணர்ந்தே ஆடம்பரமான ஐரோப்பாவை அமைத்தார்கள் என்பதை ஐரோப்பிய மண்ணில் நின்றும் நாம் புரிந்துகொள்ளாவிடில் அது மடமை. இப்போது காலம் கனிந்திருக்கின்றது. நாம் நமது வரலாற்றுக் கடமையை உணர்ந்து ஒன்றுபட்டு, நமது தேசத்தைக் கட்டியமைக்க மனம் வைத்து உழைக்க வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சிகளின் இறுதியில் தமிழீழ இசைக்குழுவினரின் 'விடுதலை கானங்கள்" இசை நிகழ்ச்சி இடம்பெற்றது. ❑

# இத்தாலியில் ஆர்ப்பாட்டப் பேரணி

இத்தாலி பலெர்மோ மாநகரில சிறிலங்கா இனத்துவேச அரசுக்கெதிரான மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று கடந்த ஏப்ரல் திங்கள் 23ஆம் நாள் நடைபெற்றது. இத்தாலிய வாழ் தமிழ் மக்கள் வரலாற்றிலே இவ் ஆர்ப்பாட்ட ஊர்வலமானது ஓர் முக்கிய இடத்தைப் பெறுகின்றது. இவ் ஆர்ப்பாட்டப் பேரணியில் குழந்தைகள், பெண்கள், உட்பட 2000 க்கும் மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். தமிழீழத்தின் தற்கால நிகழ்வுகளைச் சித்தரித்துக் காட்டும் ஊர்திகள், சிறிலங்கா இராணுவத்தின் கொடுமைகள், இராணுவத்தின் கனகரக வாகனங்கள் தமிழ் மக்கள் மீது நடாத்தும் தாக்குதல்களை, பேரணியில் பங்கேற்ற மக்கள் சித்தரித்து இத்தாலிய மக்களுக்கு தெரியப்படுத்தினர். ஊர்வலம் ஆரம்பித்த சிறிது நேரத்திற்குப் பின் காலநிலை கூட ஆதரவு நல்கும் வண்ணம் மழை பொழிந்தது. 3 மணி நேரமாக இவ் ஊர்வலம் நடைபெற்றது. இறுதியில் பலெர்மோ மாநகர முதல்வரும், ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் திரு. லியோ லூக்கா ஓர்லாந்தோ அவர்களிடம், தற்போதைய தேர்தலில் வெற்றிபெற்ற பி.டி.எஸ். தலைவருக்கு பலெர்மோ பாராளு மன்ற பிரதிநிதியிடம் எமது கோரிக்கை கையளிக்கப்பட்டது. அவ்ஊர்வலத்தை பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சியினர் முக்கியத்துவம் கொடுத்து அஞ்சல் செய்தனர். அதிகமான இத்தாலிய மக்களும் கலந்து கொண்டனர். ✷

www.tamilarangam.net



# மலையக மக்கள் விழித்தெழுவர்!

இந்தியத் தமிழர்கள் இப்போது சகல விதத்திலும் சட்டப்படி சம உரிமைகளும் கொண்ட பிரசைகளாக சிறிலங்காவில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளார்கள். பிரசாவுரிமை தரப்படும் என்று 1930இல் கொடுக்கப்பட்ட வாக்குறுதி, ஐம்பத்தெட்டு ஆண்டு கால இழுத்தடிப்பு, பேச்சு வார்த்தை, அழுத்தங்கள், தூண்டுதல்கள் ஆகியவற்றின் பின்னர் 1988இன் 39 இலக்கச் சட்டம் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

## பங்களிப்பு

இலங்கை, இந்தியத் தமிழர்கள் தாங்கள் இலங்கையின் அரசியல் வாழ்வில் எந்தவித பங்களிப்பைச் செய்யப் போகின்றோம் என்று தீர்மானித்து, வரையறை செய்ய வேண்டிய நிலையில் உள்ளனர். கடந்த காலங்களில் அவர்களின் நிறுவனங்கள், தொழிற்சங்கங்களாக இருந்து சம்பள உயர்வு, தொழில் மேம்பாடு போன்றவற்றையே கோரிக்கைகளாக வைத்தன. அவர்கள் தங்கள் தொழிற்சங்கங்களை அரசியல் கட்சிகளாகப் பதிந்து பாராளுமன்ற, மாகாணசபைத் தேர்தல்களில் போட்டியுமிட்டனர். ஆனால் அவர்கள் தனித்துவமாக மீள அரசியலில் பிரவேசித்தது 1977இல் ஆகும்.

## இனவிரோதம்

இனிமேல் இந்திய வம்சாவழி மக்களின் அரசியல் உரிமைகள் சிறிலங்கா–இந்திய அரசுகளின் பேச்சுவார்த்தைகளுக்கு உள்ளடங்கா. இருந்தும், அவர்களின் சம உரிமை நாட்டின் பிரசைகளாக முழுமையாக ஏற்றுக் கொள்ளப்படுதலும் முற்றாக நிறைவேறி விட்டது என்று கூறிவிட முடியாது. இன விரோத முரண்பாடுகள் நிலவும் இன்றைய நிலையில் அவற்றிற்கான போராட்டம் தொடரத்தான் செய்யும்.

## ஒரே தலைமை

இந்திய வம்சாவழி மக்களின் சிறிலங்காவிலான எதிர்கால அரசியல் நடவடிக்கையை ஆராயும்போது அவர்களின் சில குணாம்சங்களையும் நாம் நோக்க வேண்டும். இச்சமூகத்தில் மூன்றுவகைப் பிரிவினர் உண்டு. அவர்களைத் தொழிலாளர்கள், வர்த்தகர்களும் துறைசார்ந்த தொழில்களைச் செய்வோரும், அறிவாளர்கள் என வகுக்கலாம். தொழிலாளர்கள் பெருந்தொகையினராகவும் மற்றவர்கள் மிகச் சிறுபான்மையினருமாவர். இவர்களில் வர்த்தகர்கள் மிகவும் பலம் வாய்ந்தவர்களாகவும் இன்றுவரை இந்திய வம்சாவழியினருக்குத் தலைமை கொடுப்பவர்களாகவும் இருக்கிறார்கள். தொழிலாள வர்க்கத்திலிருந்து இதுவரை தலைமை வராதது துரதிஸ்டவசமானதாகும். மற்றைய சமூகங்களை நோக்குவோமேயானால் அவர்களுக்குப் பலதரப்பட்ட தலைவர்கள் இருந்ததை, இருப்பதைக் காணலாம். இந்தியத் தமிழர்கள் மாத்திரம் 1948இலிருந்து இற்றைவரை தங்களின் தலைமையில் மாற்றம் ஏதும் செய்யவில்லை. இது அவர்களது தொழிற்சங்கங்களுக்கும் பொருந்தும்.

## புரட்சிகரத்தன்மை

சமீபத்தில் தான் புரட்சிகர இளைஞர்களை அங்கத்தவர்களாகக் கொண்ட மலையக மக்கள் முன்னணி என்ற அமைப்பு உருவாகியுள்ளது. அது தேர்தலில் போட்டியிட்டு ஒரு பாராளுமன்ற அங்கத்தவரைப் பெற்றிருக்கிறது. அவர் ஆளும்கட்சியில் பிரதி அமைச்சராகக் கடமையாற்றுகிறார். ஆனால் இவரும் வர்த்தக வகுப்பைச் சேர்ந்தவரே.

## வர்த்தகர் நலன்

பெருந்தோட்ட இந்தியத் தமிழர்கள் 1930களில் சமசமாசிகளின் தலைமைகளையும், 1980களில் ஐக்கிய தேசியக் கட்சித் தலைமைகளையும் அனுபவித்துள்ளனர். இருந்தாலும் நிதானமான தொடர்ச்சியான தலைமையை தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரசே கொடுத்து வந்துள்ளது. ஆனால் இத்தலைமையும் சுமார் ஐம்பது ஆண்டுகளாக தொடர்ச்சியாய் இருப்பதால் பழமை தட்டியுள்ளது. அதுவுமல்லாமல் இவ்வமைப்பின் போராட்டங்கூட வர்த்தகர்களின் வகுப்பு நலன்களில் கூடுதலான அக்கறை காட்டியதையும், ஏதாவது தொழிலாள வர்க்கத்திற்கு இலாபம் ஏற்பட்டிருந்தால் ஒன்றில் பிரதான சிங்களக் கட்சிகளிடையே உள்ள முரண்பாடுகளைப் பாவித்துப் பெற்ற வெற்றியாக அல்லது இலங்கைத் தமிழர்களின் போராட்டத்தின் பக்கவிளைவாக ஆட்சியில் இருக்கும் அரசுகள், இந்தியத் தமிழரின் ஆதரவு – இலங்கைத் தமிழர் பக்கம் போகாதிருப்பதைத் தடுப்பதற்காகவுமே வழங்கப்பட்டதாகவும் அமைந்தவையேயாகும்.

## அறிவாளர்கள்

இவற்றிலிருந்து கொழும்பை மையமாகக் கொண்டு இயங்கிவரும் இந்திய வம்சாவழி மக்களின் தலைமைகள் வர்த்தக வகுப்பினரின் நலன்களைப் பேணுபவையாகக் காணப்படுகின்றன. முழு இந்திய மக்களுக்கும் அரசியல் ரீதியான தலைமை கொடுக்கப்படாத நிலையையும் காணலாம். இந்திய வம்சாவழி மக்களிடையே அறிவாளர்கள் என்று கூறக்கூடியவர்களும் குறைவு. அவர்களும் கூட தங்கள் சுயநலன்களைப் பேணுபவர்களாக அரசியல் ரீதியாக தம்மை வளர்த்துக் கொள்பவர்களாகவே காணப்படுகிறார்கள். முழுமையான வகையில் முழு இந்தியச் சமூகத்தின் உரிமைகளைக் கருத்திற் கொண்ட இளைஞர்கள் உருவாகவில்லை என்று கூறவும் முடியாது. அத்தகையோர் கையிற்தான் இந்திய வம்சாவழி மக்களின் எதிர்காலம் தங்கி இருக்கின்றது.

## ஐ.தே.கட்சி

தொண்டமான் ஐ.தே.க ஆட்சிக் காலத்தில் இந்திய மக்களை அதன் பக்கம் வைத்திருந்து மூன்று அமைச்சுகளைப் பெற்றதோடு நாலு மாகாணசபைகளில் போட்டியிட்டு வெற்றியும் ஈட்டியிருந்தார். கடந்த தேர்தலில் ஐ.தே.க வுடன் இணைந்து போட்டியிட்டு வென்ற பின்னர் அக்கட்சியிலிருந்து விலகிப் பொதுசன ஐக்கிய முன்னணியில் ஓர் அமைச்சர் பதவியையும் வகிக்கிறார். இந்தத் தளம்பல் நிலை – இன்றைய இந்திய வம்சாவழி மக்களின் எண்ணங்கள் பழைய தலைமைகளில் நம்பிக்கை இல்லாத தன்மையை ஏற்படுத்தும். எதிர்காலத்திலும் சிங்களக் கட்சிகள் இ.தொ.கவின் ஆதரவை நாடுமேயாயினும் அந்த அளவுக்கு அதன் செல்வாக்குத் தொடர்ந்து இருக்குமாவென்பது கேள்விக்குறி. தொண்டமானுக்கும் இந்நிலை விளங்கியிருப்பதால் சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணியை இ.தோ.கா. வுடன் இணைத்து இளம் இரத்தத்தைப் புகுத்தலாமோ என்று சிந்திக்கிறார். இதற்குப் பழமைவாதிகளிடமிருந்து எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

> ஏற்கெனவே மலையகம் என்றும், தனி நாடென்றும் அங்கு பேச்சுக்கள் வெளிவரத் தொடங்கிவிட்டன. தங்கள் இரத்தித்தினால் சிறிலங்காவை செல்வம் கொழிக்கும் நாடாக மாற்றிய மலையக மக்கள் விழித்தெழும்போது, நித்திரையில் இருந்த புலி பசியுடன் எழுந்த நிலையைச் சிங்கள மக்களுக்கு உணர்த்தும்.

## சிங்களக் குடியேற்றம்

இலங்கை வாழ் இந்தியரைப் பொறுத்த மட்டில் அனைத்துக் கட்சி மாநாட்டில் பௌத்த மகாசங்கமுட்பட சகலரும் பிரசாவுரிமை வழங்கப்படுவதற்குச் சம்மதம் அளித்தாலும் பெருந்தோட்டங்களுக்கு வெளியே அவர்களுக்குக் காணி வழங்கப்படுவது பற்றிய முடிவு ஒன்றும் இன்னும் எடுக்கவில்லை. இன்று நடக்கும் இனமோதல்களில் இந்தியத் தமிழர்கள் வடக்கு–கிழக்கு வாழ் தமிழர்களோடு அணைவதைத் தடுக்கும் முயற்சிகள் நடக்கின்றன. அதேநேரத்தில் இந்திய வம்சாவழியினர் வென்றெடுத்த உரிமைகளை இல்லாமற் செய்யும் நோக்குடன் மலையகத்தில் இன விகிதாசாரத்தை மாற்றியமைக்கக்கூடிய விதத்தில் நாசுக்கான–மறைமுகமான சிங்களக் குடியேற்றங்களை அமைக்கும் முயற்சிகளும் எடுக்கப்படுகின்றன. சிங்களப் பேரினவாதிகள் தமிழர் தாயகமாக இருந்த வடக்கிலும், கிழக்கிலும் குறிப்பாக திருகோணமலையிலும், அம்பாறையிலும் தமிழர்களின் விகிதாசாரத்தை சில வேளைகளில் அமைதியாகவும், சிலவேளைகளில் பலவந்தமாகவும் நடத்தப்பட்ட சிங்களக் குடியேற்றங்களால் மாற்றியமைத்தனர் என்பது வரலாறு. அத்தகையோர் நிலையை உருவாக்கி இந்திய வம்சாவழியினர் இப்போது அனுபவிக்கும் உரிமைகளைப் பறிப்பதற்கும் முயற்சிகளை எடுப்பார்கள்.

## பணயக் கைதிகள்

இந்தியத் தமிழர்கள் மீது உணர்வுபூர்வமான எதிர்ப்பைச் சிங்களவர்கள் கொண்டுள்ளமை வெளிப்படை. 1983இல் தமிழர் மீதான இனப்படுகொலை நடந்தபோது இந்தியா தனது படைகளை அனுப்புமோ என்று பயப்பட்டவேளை, காலஞ்சென்ற காமினி திசநாயக்கா அவ்விதம் இந்தியா செய்யுமானால் இந்தியத் தமிழர்களை சிறிலங்கா பணயமாக வைக்கும் என்று கூறியிருந்தார். இந்தியத் தமிழர்கள் வேலை நிறுத்த நடவடிக்கையில் ஈடுபடும் வேளைகளில் சிறிமாவோ பண்டாரநாயக்கா அச்செயல் தேச விரோதச் செயலென்றும், தலைவர்களின் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுமென்றும் எச்சரித்தார். ரஞ்சன் விஜயரத்தினா இதைவிட இந்தியக் கடவுச்சீட்டு வைத்திருப்பவர் எல்லோரையும் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்ப வேண்டும் என்று கூறினார். இவையெல்லாம் சிங்கள அரசியல் தலைமைகள் இந்தியத் தமிழர்களை சம உரிமைகளைக் கொண்ட சிறிலங்காப் பிரசைகள் என்று மனதார ஏற்றுக் கொள்ளவில்லை என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

> “1983 இல் தமிழர் மீதான இனப்படு கொலை நடந்தபோது, இந்தியா தனது படைகளை அனுப்புமாயின், இங்குள்ள இந்தியத் தமிழர்களை சிறிலங்கா பணயம் வைக்கும்” என்று காமினி திசநாயக்கா கூறியிருந்தார்.

சிங்கள இனவாதம், மகாவம்சப் பேரினவாதக் கோட்பாடு சிங்களவருக்குப் போதிக்கப்படும் வரை ஒழியப் போவதில்லை. வடக்கு–கிழக்குத் தமிழ் மக்களின் தனிநாட்டுக்கான போராட்டம் அதன் தாக்கத்தை மலையக மக்களிடம் பதிக்காமலும் இருக்கப் போவதில்லை. *சிங்கள இனவாதக் குண்டர்களை மலையக மக்கள் 1988இல் நேருக்கு நேர் சந்தித்த சம்பவங்கள், அவர்கள் இனிமேல் அடிக்க அடிக்க குனிந்து போவார்கள் என்ற நிலையையும் மாற்றியமைத்துள்ளது.* ஏற்கெனவே மலையகம் என்றும், தனி நாடென்றும் அங்கு பேச்சுக்கள் வெளிவரத் தொடங்கிவிட்டன. தங்கள் இரத்தித்தினால் சிறிலங்காவை செல்வம் கொழிக்கும் நாடாக மாற்றிய மலையக மக்கள் விழித்தெழும்போது, நித்திரையில் இருந்த புலி பசியுடன் எழுந்த நிலையைச் சிங்கள மக்களுக்கு உணர்த்தும்.

**தியாகர், தமிழீழம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போருள் மனிதன்

இப்படியொரு உடல், உள அவஸ்தையை முன்னெப்போதும் நான் அனுபவித்திருக்கவில்லை. ஆனால் 4 வருடத்துக்கு முன்னால் ஒரு மிகப் பெரும் சமரில் வெடிபட்டு இப்படியானதொரு அனுபவம் நேர்ந்தது ண்டு. காலம் கடந்து எப்போதோ கண்ட ஒரு கனவு போல இருப்பதாலோ என்னவோ அது இத்தனை துன்பங்களைத் தந்ததாக ஞாபகம் இல்லை. வியப்பு என்னவெனில் அன்று விழுப்புண் அடைந்த அதே மாத நாளில் அதுபோன்றதொரு பெரிய சமரில் இந்த விழுப்புண் ஏற்பட்டதுதான். வேதனை என்னவெனில் அப்போது எனது தினக்குறிப்பு, உடமைககள், கவிதைகள் என்பன விடுபட்டது போல் இப்போதும் விடுபட்டுப்போய் இருப்பதுதான். அந்தக் கவிதைகள் மீளப்படைக்க முடியாத உயிர்கள்! அந்தத் தினக்குறிப்புகளின் பக்கங்கள் மீளப்பெறமுடியாப் பெறுமதி வாய்ந்தவை! உருகிப் போன எனது நாட்களின் பெருமைகள் பார்த்தவை!

மருத்துவ விடுதியின் இருகரையும் எதிர் எதிராய் முனகும் மனிதர்களுடன் துயரங்களையும், அரிகண்டங்களையும், சுமக்கிற கட்டில்கள்! ஒரே மூலையில் ஒரே கட்டிலில், ஒரே பக்கமாய் மூன்று மாதங்களுக்கும் மேலாக சிறகு வெட்டுண்டு தவிக்கும் ஒரு பறவையாய்ப் போட்டபடி கிடக்கிறேன். எப்படி முடிகிறது என்னால்? மலசலம் கழிக்கவும், இலையான் கலைக்கவும் ஒரு துணை வேண்டிக் கிடக்கிறது. சிறு நித்திரையை அழைத்து வரவும் குளிசையை, ஊசியை நாடவேண்டி இருக்கிறது. 'கப்' என்று அடிக்கும் ஊன் வெடிலை அடக்க அதை இதைத் தெளிக்க வேண்டியிருக்கிறது. பின் ஆற்றாக் கொடுமைக்கு இரண்டுங்கெட்டான் மணத்தையே நுகர வேண்டியிருக்கிறது.

லைமாட்டில் இருக்கும் சிறு ன்னலின் கம்பிகளும் ஏதேதோ ணங்களும் என் இருப்பிடத்தை ரு சிறையெனவே உருவக படுத்துகின்றன! வளையில் ந்திருந்து செல்லும் புறாக்களைப் ர்த்து அவாப்படுகிறேன்! கண்மூ த்தனமாய் உள்நுழைந்து வர்களில் மோதி விழுந்து ருவாறாய் வெளியேறிப் போகும் வளவால்களைப் பார்த்துச் சினங் காள்கிறேன். பரிதாபப்படுகிறேன்.

ல்ல கவிதைகள் வரும்போலிருக்க தேதோ நினைவுகள் வந்து கடுத்து விடுகின்றன. ஒன்றை ழந்த பின்னால் தான் அதன் பறுமதி முழுதுமாகத் தெரிகிறது. றவைக்குச் சிறகு போல னிதனுக்கு கால்தான் எத்துணை க்கியமானது? அது இயங்காத லையில் எனது எத்தனை சயற்பாடுகள் செயலற்றுப் பாயிருக்கின்றன.

ளங்களுக்கு விரைந்த, ங்கெல்லாம் என் உயிர் காத்த, னைப்பதெல்லாம் நிறைவேற்றத் ணை நின்ற நெடும் பயணம் ந்து சிவந்து தழும்பேறிப்போன அழகிய என் கால் அசைவற்று, உணர்வற்ற தடியெனவே கிடக்குமா? கால் பெரியளவில் சிதைந்து உணர்வு நரம்புகள் அறுந்து போயிருக்கிபடியால் செயற்பாடற்றுக் போகக்கூடும் என வைத்தியர்கள் சொல்வது பலிக்குமோ? எப்போ நான் இனி எழுவது? களங்களில் கனத்த சுமைகளுடன் சமராடுகிற என் தோழர்களுக்குத் தோள் கொடுப்பது? மீண்டும் என் விடுதலைப் பயணத்தைத் தொடர்வது?

இரைந்து கடக்கிற எதிரயின் 'ஆட்லறி செல்கள்' (எறிகணைகள்) முகடடுக்கு நேரே உயர மீண்டும் வெடித்து அப்பால் அப்பால் சென்று விழுந்து வெடிக்கின்றன. இப்போதைக்கு அவை எத்தனையோ அனர்த்தங்களை விளைத்திருக்கும்! வைத்தியசாலை வயிறுா தி வழிகிறது என்றும், குருதி தொட்டு குளிசைகள் வரை கிட்டமுட்ட முடிந்து போகிறது என்றும், வைத்தியர்கள் அந்தரப்பட்டு அலைந்து திரிகிறார்கள். சமர் உரமேறிக் கொண்டே போகிறது. போராளிகள் பொதுமக்கள் என காயக்காரர்கள் பலர் 'கொற கொற' வென கொண்டு வரப்படுகிறார்கள். சிலர் தேறிச் செல்கிறார்கள். பரிதவித்து உலவுகின்றன மனித முகங்கள்! வெளியில் மீறி எழுகின்றன மனித ஓலங்கள்!

எனக்கருகில் இருக்கும் கட்டிலில் எட்டாவதாக ஒரு தோழன் காயப்பட்டு வந்திருக்கிறான். ஐந்து ஆண்டுகளுக்கு முன்னால் இருவரும் ஒரு முகாமில் ஒன்றாக நின்றோம். இருவரும் ஒரே பிரிவுதான். சண்டைக்கும் சென்று வருவோம். அப்போது நான் ஒரு மாத சஞ்சிகை வெளியீட்டிற்குப் பொறுப்பாளனாக இருந்தேன். என்னுடன் இணைந்து அவன் அது சம்பந்தமான வேலைகளில் ஈடுபடுவான். அவன் மிகுந்த திறமைசாலி. முன்னர் தொழில்நுட்பக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். போர் அவனையும் விட்டு வைக்கவில்லை. போர் அவனைப் பாதிக்காமல் இருந்திருக்குமானால் அவனது நிலை வேறு. அவன் சொல்வது போலவே எதிரியின் எத்தனையோ அழுத்தங்களுக்கு மத்தியில் உயிர் இருப்பிற்கே உத்தரவாதமற்ற நிலையில் அவனால் படிப்பைத் தொடர முடியாமல் போனதும் எம்மைப் போன்ற, சொற்பமானவர்கள் பெரும் துன்பச் சுமைகளுடன் போராடிக் கொண்டிருக்க, சுயநலம் கருதி மனச்சாட்சிக்கு

**-உமாதேவன், தமிழீழம்**

ஒழித்துத்திரிய முடியாமல் போனதும் நியாயம்தான்.

நாம் இருவரும் முன்னர் ஒன்றாக இருந்த நாட்களில் எமது குறும்புச் செயல்களுக்காகவும், வாகனங்களை எடுத்துக் கொண்டு ஊர் சுற்றப் போனதற்காகவும் பொறுப்பாளரினால் கண்டிக்கப்பட்டும் இருக்கிறோம். ஒன்றாகவே சாப்பிடுவோம். முகாமிலிருந்த எல்லோருமே கிட்டத்தட்ட அப்படித்தான். 'பக்'கென்று ஒரு சந்தர்ப்பத்தில் நாங்கள் அந்த முகாமிலிருந்து பிரிய நேர்ந்தது.

அதன் பிறகு இயந்திர மயமானதெம் வாழ்விடை இப்போ தான் சந்திக்கவும், கதைக்கவும் பழைய நினைவுகளில் தோயவும் முடிந்திருக்கின்றது. இப்போதும் முன்னர் நாமிருந்த அதே பிரிவிலேயே பணியாற்றுவதாகச் சொன்னான். பெரும் சமருக்கான ஆட்பலம் போதாமையால்தான் அவனும் களத்துக்கு செல்ல வேண்டியிருந்திருக்கிறது.

நிறையச் சாதிக்கவேண்டும் என்ற என் அடி மன ஆசையும், அப்போதிருந்த ஒருவிதமான மனநிலையும், அடக்கு முறையின் மேலான தீவிர எதிர்ப்புணர்வும் தான் என்னைக் களத்திற்குச் செல்லத் தூண்டித் தயார்படுத்தியிருக்க வேண்டும். இல்லையேல் போருக்கான ஆட்சேர்ப்புப் பிரசாரப் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த எனக்குப் பொறுப்பாளர்களுடன் கதைத்து நானும் சண்டைக்குப் போகிறேன் என்று கேட்டுப் போயிருக்க வேண்டிய அவசியம் வந்திருக்காது.



களத்தில் அங்கங்களுக்கோ, உயிருக்கோ உத்தரவாதம் இல்லைத்தான். சமருக்காக முன்னேறிக் கொண்டிருந்த வேளையிலும் இதை நினைத்திருந்தேன். முன்னைய சமரில் வெடிபட்ட அருகிலிருந்த தோழனின் தலை சிதறிய சம்பவ நினைவுகள் வந்து வந்து வெருட்டுமாய்ப் போல இருந்தன! 'ஜீன்சை' முழங்கால்வரை உருட்டி மடித்து விட்டுக் கொண்டபோது என் பெருமைகளுக்கெல்லாம் காரணமாயிருக்கிற கால்களைத் தடவி மங்கிய நிலவொளியில் பனங்கூடலுக்கிடையே என்னை நான் ஆயுதபாணியாகப் பார்த்து பனைகளையும் விஞ்சிய என் துணிவுகளையும், அர்ப்பணிப்புக்களையும் எண்ணி வியந்தேன்! பெருமிதப்பட்டேன்! எல்லாவற்றினதும், எல்லோரினதும் நினைவுகள் வந்து போயின! பின் எதிரியின் நிலைகளை நெருங்க நெருங்க மனம் இலக்கொன்றிலேயே குறியாயிற்று.

இது தவிர்க்க முடியாத இருப்பைத் தீர்மானிக்கிற விடுதலைப் போர். மக்களுக்காகச் செய்யும் உன்னத தியாகம் என்ற சத்தியமே என்னை இறுதிவரை களத்தில் நிறுத்தி வைத்திருந்தது. செவிப்பறை கிழிகிற முழக்கங்களிடை காயமுற்று தலைவலிக்க மயக்கமுறுகிற அந்தக் கணங்களிலும் இதனையே நினைத்தேன். ஒரு காலின் செயலிழந்து துன்பப்படுகிற இப்பொழுதும் இதனை எண்ணியே சாந்தியடைய முயல்கிறேன்.

இடையற்று சமர் தொடர்கிறது. வைத்தியசாலையில் அனுமதிக்கப்படுவோரின் வீதம் ஏறிக் கொண்டே போகிறது. வைத்தியர்களும் தாதியர்களும் அங்கிங்கென ஓடித்திரிகிறார்கள். சிலர் சினந்து கொள்கிறார்கள். சிலர் உணர்ந்து கொள்கிறார்கள். சமர் பற்றியும் எங்களைப் பற்றியும் அறிய அவர்கள் ஆவல் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. ஊசி போடுகிற வேளைகளிலும் மெல்ல அவை பற்றிக் கேட்பார்கள்.

ஒரு தாதி வந்து என்னிடம் கதை கொடுத்து தனது இளைய மகனொருவன் திடீரென பள்ளிக்குச் சென்றிருந்த ஒரு நாளில் காணாமல் போனதாகவும், ஈற்றில் அவன் இயக்கத்தில் இணைந்துள்ளதை அறிந்து கொண்டதாகவும், தான் எப்படிக் குழறியும் அவன் வரமாட்டேன் என அடம் பிடித்துப் பயிற்சிக்குச் சென்றுவிட்டானென்றும் அவனது விடயத்தில் தான் எந்தக் குறையும் விட்டறியேன் என்றும் உங்களைப் போன்றவர்கள் இப்படிக் காலம் பூராவும் துன்பப்படுவதை அறியச் சகிக்க முடியவில்லை. எனக்கு அந்த வேலையே வெறுக்கிறது என்றும் உங்களுக்கெல்லாம் இப்படியாகவேனும் ஏதோவொரு வகையில் சேவை செய்ய முடிகிறது என்பதாலும் இதனைத் தொடர வேண்டியிருக்கிறதென்றும் சொன்னார். "தம்பி நாள் முழுக்க துயர் ததும்பத் திரிகிற மனிதர்களையே கண்டு கொண்டிருக்கிறேன். எங்கும் வியாபித்திருக்கிற இந்தப் போர் ஓயாதா? நீங்கள் அவர்களுடன் பேசலாம் தானே" என்றும் கேட்டார்.

"நாங்கள் எந்தத் துன்பங்களையும் சுமக்கச் சித்தமாயிருக்கவில்லை. சுமத்தப்பட்ட துன்பங்களை இறக்கவே முனைகிறோம். எல்லாமும் செய்து இயலா நிலையிலேயே திருப்பியடிக்கத் துணிந்திருக்கிறோம். இலகுவில் விரைவில் இலக்கை எய்தவே மக்கள் பங்களிப்பை வேண்டி நிற்கிறோம். நாம் சமாதானத்திற்கு எதிரானவர்கள் இல்லை? என்றெல்லாம் நான் சொல்லிக் கொண்டிருக்கிறபோதே அவர் "நீங்கள் இப்படித்தான் சொல்லுவீர்கள். உண்மைதான் என இழுத்துவிட்டு விமானக் குண்டு வீச்சிலும் செல்லடியிலும் சிக்குண்டு அப்போதுதான் கொண்டு வரப்பட்டவர்களை அனுமதிக்கவென ஓடிவிட்டார்.

பல பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளும் காயப்பட்டு வந்திருக்கக்கூடும் என்று வந்து தேடிவிட்டுச் சென்றார்கள். பிள்ளைகளைப் பெற்று வாழுகிற வயதில் போருக்கு அனுப்பிவிட்டு செத்தார்களா? இருக்கிறார்களா? என அந்தரித்து அலையவேண்டி இருக்குதெ் என்று ஒரு அம்மா புலம்பி விட்டுச் சென்றார்.

சகதோழர்களும், நான் முன்னர் எனது பிரிவில் வேலை செய்த இடங்களில் பழக்கப்பட்டு, உறவுகளெனப் பிணைக்கப்பட்ட மக்களும் வந்து பார்த்துக் கதைத்து விட்டுச் செல்கிறார்கள். எனக்கு அக்கா மாதிரியும், தங்கை மாதிரியும் இருக்கக்கூடிய ஒரு சகோதரி வந்து என்னைத் தனது அண்ணா மாதிரி இருக்கிறதென்றும் போராடப் போய் இரண்டு வருடமாகியும் இன்னும் காணவில்லை என்றும் கூறி எனது காலின் காயக்கட்டைப் பார்த்து விறைத்துப் போனாள். இது மாறினால் மீண்டும் போருக்கு அனுப்புவார்களா? என்று கேட்டாள். 'இனி ஓடித்திரிய முடியாதென்று நினைக்கிறேன். காலில் உணர்ச்சி இல்லை. இந்த நிலையில் எப்படிப் போக முடியும். பார்ப்போம் என்றேன். "அதுதான் நல்லது இது போதும். இனிப்போக முயற்சிக்காதீர்கள். பெற்றோர், உறவினர்களின் கண்களுக்கு முன்னால் ஏதோ உயிருடனிருந்தாலாவது போதும்" என்று கூறி முகம் வரை வந்த அழுகையை முறிக்க முடியாமல் பிறகு வந்து பார்ப்பதாக கூறிச் சென்றாள்.

காயமுற்றவர்களைப் பராமரிக்கவென மாணவர்கள் பொதுமக்கள் என

தொடர்ச்சி 10 ம் பக்கம்..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



# விடுதலை நோக்கிய பயணத்தில்

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்றம் பெற்று 5-5-1996 உடன் 20 ஆண்டுகள் நிறைவடைகின்றன. 1972ம் ஆண்டிலே புதிய தமிழ்ப் புலிகள் என்ற பேரிலே தோற்றம் கண்ட அமைப்பு 1976ல் தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பெயரினைச் சூடிக்கொண்டது. அன்றிலிருந்து இன்றுவரை தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழர் தேசிய எழுச்சியின் குறியீடாக இருந்து வருகின்றது.**

சிங்கள பௌத்த பேரினவாதத்தின் தொடர்ச்சியான ஒடுக்கு முறைகள், தமிழீழ விடுதலைப் போராட்டமும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் தோற்றம் பெறக் காரணமாய் இருந்தன. நீண்ட காலமாகவே சிங்களப் பேரினவாதத்தின் காலடியில் சிக்கி நசுக்கப்பட்ட தமிழ் மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வளர்ச்சியுடன் தலை நிமிர்த்தத் தொடங்கினர்.





இருபது ஆண்டுகள் வரலாற்றைத் திரும்பிப் பார்க்கும்போது விடுதலைப் புலிகள் புரிந்துவரும் வரலாற்றுச் சாதனை நன்கு புரியும். ஒற்றைத் துப்பாக்கியுடன் தோன்றிய இயக்கம், 'தம்பியாக' ஏனைய போராளிகளால் அழைக்கப்பட்ட சிறுவயதுப் பிரபாகரனால் தோற்றுவிக்கப்பட்ட இயக்கம் இன்று ஆயிரக்கணக்கான போராளிகளுடன் தேசியத் தலைவராகப் பரிணமித்துவிட்ட தலைவர் பிரபாகரனால் வழிநடத்தப்படுகின்றது. தலைமறைவு வாழ்க்கையுடன் மிகக் குறைந்த எண்ணிக்கையான உறுப்பினர்களுடன், மண்வெட்டி அலகில் 'றொட்டி' சுட்டுப் பசி தீர்த்துக்கொள்ளும் நிலையிலேயே இயக்கத்தின் ஆரம்ப காலம் இருந்தது. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் மூலம் தமிழ் மக்களுக்கான தனியரசு ஒன்றினை உருவாக்கிவிட வேண்டும் என்ற தணியாத தாகம் கொண்ட ஒரு சில போராளிகளே தலைவர் பிரபாகரனுக்கு உறுதுணையாக நின்ற காலமது. வரலாற்றுச் சக்கரம் தானாகவே உருண்டு போராட்டத்துக்குச் சாதகமான சூழ்நிலை உருவாகட்டும் என்று காத்திராமல் சிறிய அளவிலேனும் சில அரசியல், இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டு போராட்டத்தினை முன்னோக்கி நகர்த்துவதற்கு அயராது உழைத்தனர் புலிகள். இவ் உழைப்பு ஆயுதப் போராட்டத்தினை வளர்ப்பதற்கான அடித்தளத்தினை போட்டுத் தந்தது. சிங்கள–பௌத்த பேரினவாதம் அகிம்சை வழியான போராட்டங்களை ஆயுத பலம் கொண்டு நசுக்கிய வரலாறும், பாரம்பரிய அரசியலான பாராளுமன்ற அரசியல் தோல்வியினைத் தழுவியதும் ஆயுதப் போராட்டத்துக்கான நியாயப்பாட்டினை தமிழ் மக்கள் மத்தியில் உருவாக்கின. இத்தகைய நியாயப்பாடு தோன்றியது மட்டுமல்ல, ஆயுதப் போராட்டம் மீதான நம்பிக்கையும் தோற்றம் கண்டது.

1983ம் ஆண்டு நடந்த இனப் படுகொலை, ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் ஒரு பாய்ச்சலினை ஏற்படுத்தியது. சில பத்துகளிலிருந்து போராளிகளின் எண்ணிக்கை ஆயிரக் கணக்காக மாறியது. போராளிகளின் பெருக்கம் ஆயுதப் போராட்டச் செயற்பாடுகளை விரிவுபடுத்தியது. இவ் ஆயுதப் போராட்டத்தின் விரிவாக்கம் போராளிகளின் கட்டுப்பாட்டினுள் குடாநாட்டுப் பகுதியினைக் கொண்டு வந்தது. தமிழீழத்தின் வன்னிப் பகுதியே போராட்டத்தின் உறுதியான தளப்பிரதேசமாக இருக்கும் என்ற கருத்து போராளிகள் மத்தியில் இருந்த போதும் குடாநாட்டையே கட்டுப்பாட்டுப் பிரதேசமாக மாற்றுவதற்கு முடிந்தது. குடாநாட்டின் நகர்ப்புற– கெரில்லா நடவடிக்கைகளுக்கு வாய்ப்பான புவியியல் அமைப்பும், சிறிய பிரதேசப்பரப்பும் இதற்குச் சாதகமாக இருந்தன. இருப்பினும் அப்போதைய தளப்பிரதேசமாக தமிழகமே விளங்கியது. இக்காலகட்டத்தில் விடுதலைப் புலிகள் இயக்கம் தமிழ் மக்களின் நம்பிக்கைக்குரிய விடுதலை இயக்கமாகப் பரிணமித்துவிட்டது.

விடுதலைப் போரில் இந்தியாவின் பாத்திரம் தமிழ் மக்களின் நலன்களுக்கு விரோதமாக மாறியபோது, இந்தியாவின் நிலைப்பாட்டுடன் முரண்பட வேண்டிய தேவை விடுதலைப்புலிகள் இயக்கத்திற்கு ஏற்பட்டது. இந்திய மக்களை நேசசக்தியாகக் கருதிக் கொள்ளும் அதே வேளை இந்திய ஆளும் வர்க்கத்தின் நலன்களுக்காய் தமிழீழ மக்களின் நலன்களை கைவிட முடியாத காரணத்தினால் இந்திய இராணுவத்தினை எதிர்த்துப் போராடும் முடிவினை

இந்திய ஆளும் வர்க்கத்தின் நலன்களுக்காய் தமிழீழ மக்களின் நலன்களை கைவிட முடியாத காரணத்தினால் இந்திய இராணுவத்தினை எதிர்த்துப் போராடும் முடிவினை ஒரு காலகட்டத்தில் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இயக்கத்திற்கு ஏற்பட்டது. இந்திய இராணுவத்துடன் போராட வேண்டிய நிலை ஏற்பட்டபோது, விடுதலைப் போராட்டமும் அதை வழிநடத்தும் விடுதலைப் புலிகள் இயக்கமும் அழிந்துவிட்டது என்றே பலரும் கருதினர்

# 20 ஆண்டு கால வியத்தகு வளர்ச்சி

ஒரு காலகட்டத்தில் எடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இயக்கத்திற்கு ஏற்பட்டது. இந்திய இராணுவத்துடன் போராட வேண்டிய நிலை ஏற்பட்டபோது, விடுதலைப் போராட்டமும் அதை வழிநடத்தும் விடுதலைப் புலிகள் இயக்கமும் அழிந்துவிட்டது என்றே பலரும் கருதினர். இருந்த போதும் இந்திய இராணுவம் நாட்டினை விட்டு வெளியேற்றப்பட்டபோது முன்னதைவிடப் பலம் மிகுந்ததாக விடுதலைப் புலிகள் இயக்கம் இருந்தது.



இந்திய ஆக்கிரமிப்புக் காலத்தின் பின், ஈழப்போர்–2 கால கட்டத்தில் விடுதலைப் புலிகள் தனது கட்டுப்பாட்டுப் பகுதியில் நிழல் அரசினை வேகமாக அமைக்கத் தொடங்கியது. யாழ் குடாநாடு, வன்னிப்பெருநிலம், கிழக்கின் பல பகுதிகள் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்த நேரம் அது. இவ்வரசுக் கட்டுமானங்கள் யாழ் குடாநாட்டில் சிறப்பான வளர்ச்சியினைப் பெற்றன. ஏனைய பகுதிகளுக்கும் இக்கட்டுமானங்கள் விஸ்தரிக்கப்பட்டன.

ஈழப்போர்–3 காலகட்டத்தில், யாழ் குடாநாடு சிறிலங்கா இராணுவத்தின் ஆக்கிரமிப்புக்கு உள்ளாகும் ஒரு சூழ்நிலையில், வன்னிப் பெருநிலம் தளப்பிரதேசமாக மாற்றம் கண்டது. 1980களில் போராளிகளினால் தளப்பிரதேசமாக அமைவதற்குப் பொருத்தமான இடமெனக் கருதப்பட்ட வன்னிப் பெருநிலம் இப்போது தளப் பிரதேசமாக மாறிவிட்டது. குடாநாட்டில் இராணுவத்தின் மரபு சார்ந்த இராணுவ நடவடிக்கை காரணமாக ஏற்பட்ட பின்னடைவினை நீண்ட காலத்தில் ஈழத்திற்குச் சாதகமான நிலைமைகளைத் தோற்றுவிக்கும் வகையில் கையாண்டு வருகிறது விடுதலைப் புலிகள் இயக்கம். எத்தனையோ பெரும் முயற்சிகளை எதிரிகள் செய்த போதிலும், முறியடிக்க முடியாத சக்தியாக– தமிழர் தேசியத்தின் எழுச்சி வடிவமாக–புலிகள் இயக்கம் இருந்து வருவது எவ்வாறு சாத்தியமாகிறது? விடுதலைப் புலிகளின் வெற்றிக்குப் பின்னால் உள்ள காரணிகள் எவை?

ஆய்வாளர்களின் மண்டையினைக் குடையும் கேள்விகள் இவை. புலிகள் இயக்கத்தின் சிறந்த தலைமையும்–அதன் கட்டமைப்பும், போராளிகளின் வியக்கத்தகு வீரமும்–அர்ப்பணிப்பும், மக்களிடம் கொண்டுள்ள நெருக்கமான பிணைப்பும் அடிப்படைப் பலங்களாகின்றன.


அழுத்தங்களுக்கு அடிபணியாத இலட்சிய உறுதியும், பின்னடைவுகளை வெற்றிகளாக்கும் திண்ணிய திட்டமிடலும் இயக்கத்தின் அணிகலங்களாகின்றன.

இவ் இயக்கம் ஆரம்பிக்கப்பட்ட 1976லிருந்து இன்றுவரை சிங்கள–பௌத்த பேரினவாதத்தின் கீழ் தமிழ் மக்களை அடிமைப்படுத்திவிட முனையும் பேரினவாதிகளுக்கு சிம்ம சொப்பனமாக இருந்து வருகின்றது. அச்சுறுத்தல் மூலமோ ஆசை காட்டியோ முன்னைய தமிழ்த் தலைமைகள் என்று கூறப்பட்டவர்களை பேரினவாதம் மோசம் செய்தமையினைப் போலன்றி அச்சுறுத்தல்களுக்கோ ஆசை வார்த்தைகளுக்கோ அடிபணியாது தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைக்கான போராட்டத்தில் இயக்கம் உறுதியாக இருந்து வருகின்றது. எந்த சக்திகளின் நலன்களுக்கும் அடிபணியாது– தமிழ் மக்களின் நலன்களை முன்னிறுத்தி விடுதலைப் போரினை முன்னெடுத்து வருகின்றது.

தொடர்ச்சி 12 ம் பக்கம்..

www.tamilarangam.net





# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### -அத்தியாயம் ஒன்று-

### தொடர்ச்சி

மார்க் சென்று கொண்டிருந்த ரக்சி சமவெளியில் இருந்து விலகி, வளைந்து வளைந்து பென்ரடக்ரிலோஸ் (Penta-daktylos) மலைத்தொடரின் கணவாய் ஒன்றுக்குள்ளால் செல்லும் சரிவில் ஏறத் தொடங்கியது. பொழுதும் சாய்ந்து கொண்டிருந்தது. உச்சியை அடைந்ததும் ஒரு கரையில் காரை நிறுத்துமாறு உத்தரவிட்டான்.

காரிலிருந்து கீழிறங்கிய அவன், கடல் அளித்த பின்னணியில் மலை அடிவாரத்தில் அற்புதமான நகை ஒன்றைப்போல் மின்னிக் கொண்டிருந்த சிறு நகரமான கைரோனியாவைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனுக்கு இடது பக்கமும், அவனுக்கு மேலாகவும, சிங்க மனத்தவன் எனப் பட்டப் பெயர் பெற்றிருந்த றிச்சாட்டுடையவும் அவனது அழகான காதலி பெரென்காரியாவுடையவும் நினைவுகளால் சூழப்பட்ட புனித கிலேரியன் கோட்டையினுடைய சிதைவுகள் நின்று கொண்டிருந்தன. திரும்பவும் கிற்றியோடு அவ்விடத்திற்கு வரவேண்டுமென்று மனதில் குறித்துக்கொண்டான்.

கைரேனியாவை நெருங்கியபோது இருள் சூழத் தொடங்கிவிட்டது. அந்த நகரம் முழுவதும் வெண்சாந்தால் கட்டப்பட்டு சிவப்பு ஓடுகளால் வேயப்பட்ட கூரையையும் கொண்டிருந்ததோடு மேலுக்குக் கோட்டையையும் பக்கத்தில் கடலையும் கொண்டிருந்தது. கைரேனியா நகரமானது இதைவிட அதிகமான கண்ணுக்கினிய தொலைவிலுள்ளது. விந்தையானது எதுவுமில்லை என்று சொல்லுமளவிற்கு கண்ணுக்கினியதானதாகவும், தொலைவிலுள்ளதாகவும் (Remote) விந்தையான தாகவும் தோன்றியது இரண்டு கடலுள்ளான சுவர்களுக்கிடையே மீன்பிடிப் படகுகளும், சிறிய உல்லாசப் படகுகளும் நிறைந்திருந்த சிறிய துறைமுகத்தை கடந்து சென்றனர். இதில் ஒரு சுவர் இறங்கு துறையாக விளங்கியது மறன்றயதன்மேல் மேல் வேர்ஜின் கோட்டையுடைய புராதன கொத்தளங்கள் இருந்தன.

போரின் இறுதிக்கட்ட நாட்களில், நெதர்லாண்டின் துருப்புக்களே முதன்முதலாக ஜேர்மனியிலிருந்த பேர்கன்-பெல்சனில் (Bergen belsen, இலட்சக்கணக்கில் யூதர்கள் நாஸிகளால் கொல்லப்பட்ட முகாம்களில் ஒன்று.) உட்பிரவேசித்தது.

கைரேனியா வெகு காலமாகவே கலைஞர்களுடையவும், ஓய்வு பெற்ற பிரித்தானிய இராணுவ அதிகாரிகளினதும் ஓய்விடமாக இருந்து வந்துள்ளது. உண்மையாகவே அது உலகிலேயே மிக அமைதியான இடம்தான்.

துறைமுகத்திலிருந்து ஒரு கட்டிடத்திற்கப்பால் டோம் ஹோட்டல் இருந்தது. தூங்கு மூஞ்சித்தனமான நகரின் மற்றைய பகுதிகளுள் ஒட்டாமல், அந்நியமாகத் தெரிந்தது அப் பெரிய கட்டிடம். ஆயினும் டோம் பிரித்தானிய சாம்ராஜ்யத்தின் ஒரு மைல்கல்லாகத் திகழ்ந்தது. உலகம் முழுவதும் அது ஆங்கிலேயர்கள் சந்திக்கும் இடமாக, யூனியன் ஜக் ( Union Jack, ஆங்கிலநாட்டுத் தேசியக் கொடியின் பெயர்) பறக்கவிடப்படுவதுடன் பிரசித்தமான கடல்நோக்கியபடி அமைந்த அநேக பொது அறைகளையும், உப்பரிகைகளையும், விறாந்தை களையும் கொண்டிருந்தது. நூறு யாருக்கும் மேலான ஒரு கடலுக்கூடான பாதை சிறிது தூரத்திலிருந்த ஒரு சிறிய தீவை இணைத்து, நீச்சலடிக்கச் செல்வோருக்கும், சூரிய ஒளியில் காயச் செல்வோ ருக்கும் பாவனைக்குரியதாகியது.

ரக்சி போய்நின்றது. ஊழியன் ஒருவன், மார்க்குடைய பொருள்களை உள்ளே கொண்டு போனான். மார்க் ரக்சிக் கட்டணத்தைக் கொடுத்து அனுப்பிவிட்டு சூழவரப் பார்த்து நின்றான். அப்போது கார்த்திகை மாதமாக இருந்தாலும், இன்னும் சிறிது வெப்பமாயும், அமைதியாயும் இருந்தது. கிற்றி பிறமென்ரோடு திரும்பவும் இணைந்து கொள்ள என்ன அருமையான இடம். வரவேற்பறை லிகிதர், மார்க்கிற்கு ஒரு செய்தியைக் கையளித்தான்.

**அன்பே மார்க்,**

நான் ஒன்பது மணிவரை பாமகஸ்ராவில் இருக்க வேண்டி உள்ளது. என்னை மன்னிப்பாயா? மிகுந்த ஆவலாய் இருக்கின்றேன்.

**அன்புடன்–கிற்றி**

"எனக்கு பூக்களும், ஒரு போத்தல் ஸ்கொட்ச்சும் (scotch) ஒரு பாத்திரத்தில் ஐஸ்கட்டிகளும் வேண்டும்".

"திருமதி பிறமென்ற் எல்லாவற்றிற்கும் ஒழுங்கு பண்ணியிருக்கிறார்" திறப்புக்களை அறை பரிசாரகனுக்குக் கொடுத்தபடியே, அறைகளை ஒதுக்குபவன் மேலும் சொன்னான். "உங்களிருவருக்கும் கடலை நோக்கிக் கொண்டிருக்கும் பக்கத்துப் பக்கத்து அறைகள் ஒதுக்கப்பட்டிருக்கிறது." சொன்னவனுடைய உதடுகளில் ஒரு கேலிப் புன்னகை தவழ்ந்து கொண்டிருப்பதை மார்க் கண்டான். அப்படியான புன்னகையை ஏற்கெனவே நூறுக்கும் மேற்பட்ட ஹோட்டல்களில் நூறுக்கும் மேற்பட்ட பெண்கள் காரணமாக அனுபவித்திருந்தான். எனினும் இம்முறை சந்தர்ப்பத்தை விளக்கி நிலைமையை சரிசெய்ய நினைத்தாலும், அவன் தனக்கு விருப்பமானதை நினைத்துக் கொள்ளட்டும் என விட்டுவிட்டான்.

இருள் கவியும் வரை கடலைப் பார்த்துக்கொண்டிருந்த அவன், ஸ்கொட்சையும், நீரையும் கலந்தெடுத்து, ஆவிபறக்கும் குளியல் தொட்டி நீரில் கிடந்து ஊறியபடியே அருந்தினான்.

ஏழுமணி... இன்னும் இரண்டு மணித்தியாலங்கள் பார்த்திருக்க வேண்டும்.

அவன் கிற்றியின் அறைக்கதவைத் திறந்து பார்த்தான்.சுகந்தம் தவழ்ந்து கொண்டிருந்தது. அவளுடைய நீச்சலு டையும், சலவை செய்யப்பட்ட உள்ளாடைகளும் குளியல் தொட்டியின் மேல் தொங்கிக் கொண்டிருந்தன. அவளுடைய காலணிகள் கட்டிலுக்கருகில் ஒழுங்காக வைக்கப்பட்டிருந்தன. மார்க் தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டான். கிற்றி இல்லாவிட்டாலும் ஒரு அசாதாரணமான மனிதத்துவத்தின் குணநலன்கள் அவ்வறையில் நிரம்பி வழிந்தன.

அவன் திரும்பிச்சென்று தன் கட்டிலின் மேல் சாய்ந்துகொண்டான். கடந்து சென்றுவிட்ட வருடங்கள், அவளில் என்ன மாற்றங்கள் செய்துவிட்டிருக்கும். அவளுக்கேற்பட்ட துக்ககரமான சம்பவம் அவளை என்ன செய்து விட்டிருக்கும். கிற்றி... அழகான கிற்றி தயவுசெய்து எவ்விதத்திலும் பாதிக்கப்பட்டிராமல் இருந்துவிடு. இப்போ 1946கார்த்திகை ஆகிவிட்டது. மார்க் தொடர்ந்து சிந்தித்தான். கடைசியாக எப்போது அவளைக் கண்டேன். 1936ல் அமெரிக்க சிண்டிக்கேற்றுக்காக பேர்லின் போக முதல்தான் அவளைக் கண்டேன்... எட்டு வருடங்களின் முன்... கிற்றிக்கு இப்போ 28 வயதிருக்கும்.

> தங்கள் தாயகத்தைவிட்டு அடித்துத் துரத்தப்பட்ட மக்கள் நூறுக்கும் மேற்பட்ட நாடுகளில் குடியேறியிருந்தார்கள். ஆனால் இரண்டாயிரம் ஆண்டுகளாக, "அடுத்த செடார் திருநாளை ஜெருசலேத்தில் கொண்டாடுவோம்" என்ற வசனத்தை அவர்களது வருடாந்த செடார் பண்டிகையின்போது பிரார்த்தனையின் இறுதியில் கூறிவந்தார்கள்.

கிளர்ச்சிக்கும், வெகுகாலமாக மறைந்திருந்த உணர்வலைகளுக்குமிடையே அவன் தூங்க ஆரம்பித்தான்.

ஐஸ்கட்டிகளின் குலுங்கும் ஓசை, இனியதொரு ஓசையாக மார்க்கை ஆழ்ந்த நித்திரையிலிருந்து விழிப்படையச் செய்தது. கண்ணைக் கசக்கிக் கொண்டே சிகரெட்டுக்காக கைகளை அங்குமிங்கும் துழாவினான்.

"நீ நித்திரைக்கு மருந்து குடித்தது போல் நன்றாகத் தூங்கினாய்" ஒரு பிரிட்டிஷ்பாணிக் குரலொன்று சொன்னது. "நான் ஐந்துநிமிடங்களாக கதவைத் தட்டிக் கொண்டிருந்தேன். அறைப் பணியாளன் என்னை உள்ளே விட்டான். உன்னுடைய விஸ்கியை பாவித்தது பற்றி குறையெண்ணமாட்டாய் என்று நினைக்கிறேன்."

அந்தக்குரல் பிரிட்டிஷ் இராணுவத்தைச் சேர்ந்த மேஜர் விறெட்கால்ட்வெல் உடையது(Fred caldwell). மார்க் கொட்டாவி ஒன்றை விட்டபடி சோம்பல் முறித்துத் தனது கைக்கடிகாரத்தில் நேரத்தைப் பார்த்தான். அப்போ 8.15ஆகி இருந்தது. "நீர் சைப்பிரசில் என்ன செய்கிறீர்"? மார்க் கேட்டான்.

"அக்கேள்வியை நான்தான் கேட்கவேண்டும் என்று நினைக்கிறேன்" மார்க் சிகரெட் ஒன்றைப் பற்றிக்கொண்டு மேஜரை நோக்கினான். அவனுக்கு இந்த மேஜர்மேல் விருப்பமுமில்லை. வெறுப்புமில்லை. வன்மம் (Despise) சரியான வசனமாக இருக்கலாம். அவர்கள் ஏற்கெனவே இரு தடவை சந்தித்திருக்கிறார்கள். பிரிட்டிஷ் இராணுவத்தின் சிறந்த களத்தளபதிகளில் ( Field Officer) ஒருவராகிய கேர்ண லாகியிருந்து பிரிகேடியராக பதவி உயர்வு பெற்ற புரூஸ் சுதர்லான்டின் (Bruce Surtherland) உதவியாளராக கால்ட்வெல் இருந்தார். ஒல்லாந்துக்கு அருகே இருந்த தாழ்வு நிலங்களில், போரின்போது முதலாவது சந்திப்பு ஏற்பட்டது. மார்க் தனது போர் அறிக்கை ஒன்றில் ஒரு றெஜிமென்ரைச் சேர்ந்த வீரர்கள் பிரிட்டிஷ் இராணுவத்தின் பிழையான இராணுவ தந்திரத்தால் (Tactical Blunder) பலியாகிப்போனதைச் சுட்டிக்காட்டியிருந்தான். அமெரிக்க சிண்டிக்கேற்றுக்காக நியூரம்பேர்க் யுத்த க்குற்றவாளிகள் விசாரணையின் போது செய்தி சேகரிக்கச் சென்றபோது இரண்டாவது சந்திப்பு ஏற்பட்டது.

போரின் இறுதிக்கட்ட நாட்களில், நெதர்லாண்டின் துருப்புக்களே முதன்முதலாக ஜேர்மனியிலிருந்த பேர்கன்–பெல்சனில் (Bergen belsen, இலட்சக்கணக்கில் யூதர்கள் நாஸிகளால் கொல்லப்பட்ட முகாம்களில் ஒன்று.) உட்பிரவேசித்தது. இதனால் சுதர்லான்ட், கால்ட்வெல் இருவருமே நியூரம்பேர்க் விசாரணையில் சாட்சியமளிக்க வந்திருந்தார்கள்.

மார்க் குளியலறைக்கு நடந்து சென்று ஐஸ்போல் குளிர்ந்த நீரினால் முகத்தைக் கழுவிக்கொண்டு துவாய்க்காக கையால் தேடியபடியே "உனக்கு நான் என்னசெய்ய வேண்டும் பிறெடி என்றான்.

"புலனாய்வுப் பிரிவினர் இன்று தொடர்பு கொண்டு நீ வந்து இறங்கியிருப்பதாக அறிவித்தனர். உனது தொழில் ரீதியான பத்திரங்கள் (Credentials) இல்லாமல் வந்திருக்கிறாய்."

நீங்கள் எல்லோரும் சரியான சந்தேகப்பிராணிகள் உனக்கு ஏமாற்றம் தரவேண்டி இருப்பதற்காக வருந்துகின்றேன் பிறெடி, நான் விடுமுறையில் வந்திருக்கிறேன் பலஸ்தீனத்திற்கு போய்க் கொண்டிருக்கிறேன்.

"இது ஒரு உத்தியோக பூர்வமான சந்திப்பு அல்ல பாக்கர். ஆயினும் உங்களுடைய கடந்தகால உறவுகள் சிறிது நல்லாயில்லை." கால்ட்வெல் சொன்னார்.

"நீங்கள் நீண்டகால ஞாபகசக்தி உள்ளவர்கள்" மார்க் சொல்லிவிட்டு உடைகளை அணியத் தொடங்கினான்.

காட்வேல் மார்க்குக்காகவும் ஒரு கோப்பை மதுவைத் தயாரித்தார். மார்க் அந்த பிரிட்டிஷ் அதிகாரியைக் கவனமாகப் பார்த்தபடி ஏன் இந்த அதிகாரி எப்போதும் பிழையான வழியிலேயே தன்னைப் பாதிக்கிறார் என்று நினைத்துக்கொண்டான். குடியேற்றவாதிகளான புதுமையான கூட்டத்தை இனங் காட்டும் அந்தக் கர்வம் அவனில் நிரம்பியிருந்தது. கால்ட்வெல் ஒரு இறுக்கமான, குறுகிய மனப்பான்மையுடைய வெறுப்பூட்டும் தன்மையானவன். வெள்ளை உடையில் கனவான்களின் விளையாட்டினை விளையாடி, ஜின்னையும், ரொனிக்கையும் குடித்தால் போதும். உள்ளூர்வாசிகள் எப்படிப்போனால் என்ன என்ற வகையான மனப்பான்மையுடையவன். கால்ட்வெல்லுடைய மனட்சாட்சி, அல்லது அறவே இல்லாத தன்மை மார்க்கை சங்கடப்படுத்தியது. கால்ட்வெல்லின் சரியானதும் பிழையானதுமான கருத்துக்களை இராணுவ புத்தகங்கள் அல்லது இராணுவக் கட்டளைகளே அளித்தன.

"நீங்கள் சைப்பிரசில் ஏதாவது ஊத்தை வேலை செய்துவிட்டு மறைக்க முயற்சிக்கிறீர்களா?"

"சும்மா வெறுப்பேற்றாதே பார்க்கர், இந்தத் தீவு எங்களுக்குச் சொந்தம், உனக்கு இங்கே என்ன அலுவல் என்று எங்களுக்குத் தெரிய வேண்டும்"

"பிரிட்டிஷ்காரனான உங்களை நான் விரும்புகிறேன், ஏன் தெரியுமா? டச்சுக்காரனாயின் இங்கிருந்து வெளியேறு என்பான், நீங்களோ தயவு செய்து நரகத்திற்கே போய்விடு என்று எப்போதும் சொல்வீர்கள். நான் உனக்கு ஏற்கனவே சொன்னேன். விடுமுறையில் வந்திருக்கிறேன் என்று. ஒரு பழைய நண்பனை மீளச் சந்திக்க வந்திருக்கிறேன்.


### அத்தியாயம் இரண்டு - மூன்று

மார்க் பார்க்கரின் கதவில் தட்டும் ஒலி கேட்டது. அவன் கதவைத் திறந்தான்.

தொடர்ச்சி 15 ம் பக்கம்..

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாவண்ணன்

## அத்தியாயம் 5 இன் தொடர்ச்சி

**மாட்டை மேய்க்கும் மாயா – எங்கள்**
**பாட்டைக் கேட்கிறாயா?**
**நாட்டைக் காக்க நாங்கள் – படும்**
**பாட்டைப் பார்க்கிறாயா?**
**கோட்டை மீட்டுத் தந்தாய் – தமிழ்க்**
**கொடியை யேற்றி வைத்தாய்**
**கொடுமை நடக்கு தின்றும் – நாம்**
**அடிமையாமோ என்றும்**
**ஆலயங்கள் தோறும் – எங்கும்**
**அன்பும் அறமும் ஓங்கும்**
**தமிழர் வாழ்ந்த மண்ணில் – செங்**
**குருதி தோயலாமோ?**
**மனித உரிமை மீறல் – நாட்டில்**
**மட்டுக் கதிகமன்றோ**
**கேட்க ஒருவன் இன்றேல் – நாடு**
**கேலிக் கிடமன்றோ........**

என்று தொடர்கின்றது.

இன்னும் கிருஸ்ணன் பேரில் பாடிய பஜனை ஒன்றில்,

ஈழத் தமிழர்படும் இம்சையினைப் பாராய்!
இனிமையின்றி வாடுகிற இளைஞர்களைப் பாராய்!
வாழ்வதற்கு வழியின்றி வருந்துவோரைப் பாராய்!
வல்லவனே வரதா! நீ வாழ்வளிக்க வாராய்!

கொடுமைப்படுத்தி வரும் கொற்றமிங்கு ஏனோ?
பயிர்களைப் பசியாறும் பாதுகாப்பு மேனோ?
கொடுங்கோல் ஆட்சியினர், கொடியுமிங்கு ஏனோ?
தழுறுங் கடல் வலயத் தடையுமிங்கு ஏனோ?

வையகம் அளந்தவனே, வரதனே நீ வாவா
அரக்கனை வென்றவனே அரசை வெல்ல வாவா
தமிழ் மண்ணை மீட்பதற்குத் தயைபுரிந்து வா வா
தந்தியோடு தமிழ்க்கொடியை - ஏற்றி வைக்க வா வா

பொருட்தடை நீக்கி வைப்பாய் புண்ணியனே வாவா
புனரமைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்ய வா வா
அகதிகள் அழைக்கின்றோம் ஆதரிக்க வா வா
வாழ்வை வளமாக்க வாசுதேவா வா வா.........

சிவமுனி தொண்டாற்றிய குருமுருகன் ஆலயம் பெரும் சேதத்துக்குள்ளாகியது. சேத விபரம் 4,85,000 ரூபா என்று அதன் பராமரிப்பாளர் மா. பத்மநாதன் தெரிவித்தார்.

## அத்தியாயம் - 6

**இ**ணுவில், கே. கே. எஸ். வீதியில் இருந்து 'துரை வீதி'க்குள் இறங்கி, அண்ணா கோப்பி தொழிற்சாலையைத் தாண்டி ஒரு முடக்கால் திரும்பி அந்தக்கடையிலே விசாரித்தோம். "போன பத்தாம் திகதி புக்காரா குண்டு போட்டு ஒரு குடும்பமே அழிஞ்சுதே. அந்தத் தேவநாயகத்துடைய வீடு எங்கே?"

கடைக்காரர் வீதிக்கு இறங்கிவந்து நாங்கள் வந்த வழியில் சுட்டிக்காட்டினார், "அதோ அந்த முடக்கில மட்டைவேலி தெரியுது.........அதுதான் தேவநாயகத்தின்ர தமையன் நடராசாவுடைய வீடு. அங்கேபோய் விசாரிச்சீங்களெண்டால் சரி. அந்த வீட்டுக்குப் பின்னாலதான் தேவநாயகத்துடைய வீடு. ஏதும் விபரம் வேணுமெண்டாலும் அவரிட்டையே கேட்டறியலாம்."

நாங்கள் வந்த வழியே அவர் காட்டிய மட்டைவேலி வீட்டை அடைகின்றோம். அங்கே நடராசா இருக்கின்றார். எங்களை விசாரித்து அறிந்து கொண்டார். பின்னர், "அன்றைக்கு நான்

ஒருவர்போலவே பழகி வந்தார். ஓய்வு நேரங்களில் தேவநாயகம் இருக்கும் வீட்டின் முன்னால் உள்ள மாமரத்தின் நிழலில் நாற்காலியைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்து விடுவார். இது அவர்கள் வீட்டில் இருக்கும் நாட்களில் வழக்கமாக நடக்கின்ற விடயம்.

அப்பொழுது பாடசாலை இரண்டாம் தவணைப் பீட்சை முடிந்து விடுமுறை தொடங்கிவிட்டதன் காரணத்தாலும் வாத்தியாரின் சகோதரியின் மகளின் விசேடமொன்றில் கலந்து கொள்வதற்காக வாத்தியார் சென்றதாலும் ஒரு வாரமாக அவர் அங்கு இல்லை.

# வித்துக்கள்

ஊரில் இல்லை. நான் கிளிநொச்சிக்குப் போயிருந்தேன். வீட்டுக்காரர்தான் நின்றவை. மகன்தான் சம்பவம் நடந்தபோது பார்த்துக்கொண்டுநின்றவர். அவர் இப்ப தான் வெளியில ஒரு இடத்துக்கு போயிற்றார். பொறுங்கோ அவரைக் கூப்பிட்டு விடுகிறன்", என்று கூறியவர் திரும்பி, அங்குநின்ற பிள்ளையொன்றிடம், "போய் ஜெயகாந்தனை கூட்டிக்கொண்டு வா", என்று சொல்லியனுப்பினார். ஜெயகாந்தன் வருவதற்கு முன்னர் மகள் ஒரு த்தியின் துணை யுடன்,தனக்குத் தெரிந்த சம்பவத்தை விளக்கு கின்றார்.

இந்த பின்னணிகளை நடராசரவும் மகளும் விளக்கிக் கொண்டிருக்கும் போது, நடராசாவின் மகன் ஜெயகாந்தன் வந்து சேர்ந்தான். தொடர்ந்து தனது நேரடி அனுபவத்தை அவன் கூற மற்றவர்களும் தமக்குத் தெரிந்தவற்றை சொல்லிக் கொண்டு வந்தனர்.

தேவநாயகத்தின் தம்பியார் விஜயகாந்தின் குடும்பம் மானிப்பாயில் இருந்தது. முதல் நாள் 9ஆம் திகதி நவாலியில் நடந்த குண்டுவீச்சு–எறிகணைத் தாக்குதல்களைத்



தேவநாயகத்திற்கு வயது நாற்பத்தேழு. மனைவி தனபால சரஸ்வதிக்கு வயது நாற்பத்தைந்து. முறையே பதின்மூன்று, பதினொன்று, ஒன்பது என்ற நிரையில் சலஜா, லாவண்யன், மனோதிகா என்று மூன்று பிள்ளைகள். தேவநாயகம் சாதாரண கூலித்தொழிலாளி. சைக்கிள் திருத்துவார், கதிரை பின்னுவார். இப்படிப் பலதரப்பட்ட தொழிலையும் செய்து வந்தார்.

நடராஜாவின் வீட்டுக்கு இடப்பக்கத்தால் செல்லும் ஒரு குச்சொழுங்கையால் சென்றால், நடராஜாவின் வீட்டுக்குப்பின்புறமாகவுள்ளது தேவநாயகத்தின் வீடு. என்றாலும் தேவநாயகம் தற்பொழுது அந்த வீட்டில் இல்லை. அந்த வீட்டை ஐயாக்கிளி வாத்தியாருக்கு வாடகைக்குக் கொடுத்து விட்டு, அதற்குப் பக்கத்து வளவில் இருந்த ஒரு வீட்டில்தான் குடும்பத்துடன் வசித்துவந்தார். தற்பொழுது அவர் வசித்துவந்த வீடு, வெளி நாட்டுக்குப்போய்விட்ட மாமியார் ஒருவருடைய வீடு.

ஐயாக்கிளி வாத்தியாருடைய சொந்தப்பெயர் சிவபால சுப்பிரமணியம். அவருக்கு வயது நாற்பத்தொன்பது. சொந்த இடமும் இணுவில் தான். திருமணமாகிப் பல வருடங்கள் ஆகியும் குழந்தைகள் இல்லை. அவரும் அவரது மனைவியும் ஒன்றாக அங்கு வாழ்ந்தனர். இணுவில் இந்துக் கல்லூரியில்தான் அவர் படிப்பித்துக்கொண்டு இருந்தார். தேவநாயகம் குடும்பத்தினருக்கு அந்த வாத்தியார் மீது நல்ல மதிப்பு. அதேபோலவே வாத்தியாருக்கும் அந்த குடும்பத்தின் மீது தனிப்பட்ட அன்பு. காரணம் தேவநாயகத்தின் கலகலப்பான குழந்தைகள். அந்தக் குடும்பத்தில்

தொடர்ந்து மானிப்பாயில் இருக்க முடியாது என்ற நிலையில் தேவநாயகமும் கூடச்சென்று, தம்பியார் குடும்பத்தையும் பொருட்களையும் 'லான்ட் மாஸ்ரர்' ஒன்றில் ஏற்றிக் கொண்டு இணுவில் வந்து சேர்ந்தார். அன்றிரவு தம்பியார் குடும்பம் வந்து சேர்ந்ததில் அவர்களுக்குள் கலகலப்பு. இரண்டு சகோதரர் குடும்பங்களும் அவர்களை வரவேற்றனர்.

மறுநாள் காலை குளப்பிட்டி வீதி, தாவடி–மானிப்பாய் வீதிகளை அண்மித்த இடங்களில் புக்காரா குண்டு வீச்சு நடத்தியதைக் கண்டு அதில் பலர் கொல்லப்பட்டதை அறிந்தும் விஜயகாந்தின் குடும்பம் உடனடியாக அங்கிருந்து புறப்பட ஆயத்தமாகியது. அங்கு ஒரு 'லான்ட் மாஸ்ரர்' ஒழுங்குசெய்து மீண்டும் அவர்களுடைய பொருட்களை ஏற்றி, கைதடிப்பக்கம் போவதற்கு அனுப்பிவைத்தார். 'லான்ட் மாஸ்ரரை'த் தொடர்ந்து 'மோட்டார் சைக்கிளில்' புறப்பட்ட விஜயகாந், அண்ணன் குடும்பத்தையும் அங்கு வரும்படி கூறிவிட்டுச் சென்றார். அதன்படியே தேவநாயகம் தனது மனைவி பிள்ளைகளுடன் புறப்படுவதற்கு ஆயத்தமாகிக்

www.tamilarangam.net

கொண்டார். அந்தவேளையில்தான் சகோதரி வீட்டு விசேடத்திற்குச் சென்றிருந்த ஜயாக்கிளி வாத்தியார் அங்கு வந்து சேர்ந்தார். வருகின்ற வழியில் தான் இருக்கும் வீட்டுக்கு எதிர் வீட்டில் வசிக்கும் சிவகுமார் குடும்பத்தினர் வேலிக்கரையில் பதுங்குகுழி வெட்டிக்கொண்டு இருப்பதைக் கண்டு "என்ன நீங்களுமா பதுங்குகுழி வெட்டுகிறீர்கள்?" என்றார் – தனது வழக்கமான கலகலத்தகுரலில். "எனக்குத் தேவையில்லை மாஸ்ரர், இவவுக்குத்தான் பயம். அதற்காகத்தான் என்று" தன் மனைவி ஆதிலட்சுமியைச் சீண்டினார் அந்த இளங்கணவன். சிரித்துக்கொண்டே வாத்தியார் சென்றார்.

தேவநாயகம் குடும்பம் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்ததைக் கண்டு அவருக்குச் சிரிப்பாக வந்தது. "சாவு வாறதென்டால் எங்க இருந்தாலும் வரும், பேசாமல் இருங்கோ" என்று கூறிக்கொண்டே, வழக்கம்போல் மாமரத்தின் கீழ் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கதைக்கத் தொடங்கி விட்டார். தேவநாயகத்திற்கும் புறப்படுவதில் இருந்த தீவிரம் குறைந்து விட்டது. அவரும் எதிரே இருந்து கதைக்கத் தொடங்கிவிட்டார்.

ஒரு வாரமாக அங்கு இல்லாத வாத்தியார் ஊர்ப்புதினங்கள், உலகநடப்புகள் பற்றிப் பேச தேவநாயகமும் பெண்மக்களும் கேட்டுக்கொண்டு நின்றனர். மனைவி சரஸ்வதி மாமரத்திற்குச் சற்றுத்தள்ளி இவர்கள் பேச்சுக்கு செவிகொடுத்துக் கொண்டு நின்றார்.

இந்தச் சம்பவங்கள் நடந்து கொண்டிருக்கும் போது ஜெயகாந்தன், வாத்தியாரின் வீட்டுக்கு முன்புறமாக உள்ள வேலிக்கரையில் பதுங்குகுழி வெட்டுவதற்கு, சிவகுமார்

இவர் மனைவி தனபாலசரஸ்வதி எங்கே?

இடிந்து தகர்ந்து அரைக்குந்து ஆகிவிட்ட குசினிச் சுவரின் மேலே, இருபக்கமும் மடிந்து தொங்குகின்றது ஒரு சதைக்குவியல்...... அதிலிருந்து இரண்டு பக்கம் சரசரவென்று இரத்தம் ஊற்றிக்கொண்டிருக்கிறது. அந்தச் சுவரிலும் மேலிருந்து கீழாக இரத்தக் கோடுகள் வழிந்து கொண்டிருக்கின்றன. அது....! அதுதான் அவரது நாற்பத்தைந்து வயதான மனைவி......

மகள் சலஜாவின் உடல் எங்கு தேடியும் கிடைக்கவில்லை. வீட்டின் இடது பக்கம் பாறிவிழுந்த சுவருக்கு அப்பால் தலைமுடியோ, தோலோ எதுவும் இல்லாத மனிதமண்டை ஒன்று கிடக்கிறது. அது அங்கு நின்ற அறுவரில் யாருடையது? இந்த வினாவுக்கு விடைகாண்பது சிரமம்....

பதினொரு வயது லாவண்யன் எங்கே.....?

அதோ குசுனியோடு சார்ந்திருக்கும் உள் வராந்தாச் சுவரில் எரு வராட்டி அப்பிவிட்டதுபோல ஒரு தசைக்குவியல் அப்பிக்கொண்டு இருக்கிறதே....... அதுதான் அவன்...... லாவண்யன்.

ஒன்பது வயதுச் சிறுமி மனோதிகா எங்கே?

அதோ வீட்டின் நடுவில் இடிபாடுகளோடு திருகி முறுக்கிய சீலைத்துணி போல குவிந்து கிடக்கிறதே! அதுதான் அவள்....

சிரிக்கச் சிரிக்கப் பேசும் ஜயாக்கிளி வாத்தியார் எங்கே?

அவர் உட்காந்திருந்த நாற்காளியின் முதுகுப்புற தட்டின் 'பிளாஸ்டிக்' வலைப்பின்னல், பின்னால் நீட்டிக்கொண்டு நின்ற

இந்தப் படுகொலைகள் நடைபெற்று மூன்று வாரங்கள் முடிவுற்ற பின்னரே, அந்த இடத்திற்கு நாங்கள் சென்றிருக்கிறோம். தேவநாயகத்தின் உடல் மோதிவிழுந்த மதிலில், சரஸ்வதியின் உடல் மடிந்து தொங்கிக் கிடந்த சுவரில் இரத்தக்கரை படிந்து காய்ந்த அடையாளங்கள், இன்னும் கருகிய நிறத்தில் காட்சியளித்துக்கொண்டு இருக்கின்றன.

மண்ணிறமான நாய் ஒன்று மாமரம் இருந்த இடத்தைச் சுற்றி வந்து கொண்டு இருக்கின்றது. பின்னர் அந்த இடத்தில் சுருண்டு படுத்து கொண்டது. அந்தக் காட்சியைக் கண்ட நடராசா கூறினார். "இந்த நாய் ஜயாக்கிளி வாத்தியார் வளத்த நாய் பாருங்கோ..... ஜயாக்கிளி வாத்தியாருக்குப் பின்னாலதான் திரியும். அன்றைக்கு வாத்தியார் செத்ததில இருந்து அவர் இருந்த அந்தவீட்டுக்குக் கூடப் போறதில்லை. சுற்றிச் சுற்றி அவர் இருந்த இடத்திலையும் அவருடைய கால்கள் கிடந்த இடத்திலையும் தான் கிடக்கிறதும் நடக்கிறதுமாயிருக்குது" என்கிறார்.

அந்த நாயின் விசுவாசம் எங்களை மெய்சிலிர்க்க வைக்கிறது. நாம் இதுவரை கண்டு பேசியவர்கள், தாம் பறிகொடுத்தவர்கள் மீது வைத்திருக்கும் பாசத்துக்கும்– அனுபவிக்கும் இழப்பின் துயரத்துக்கும் குறைவாக, அந்த நன்றி மறவாப்பிராணியின் உணர்வுகளை மதிப்பிட முடியாமலிருக்கிறது.

எமக்குள்ளே இப்பொழுது எழுந்த ஒரு கேள்வி, குச்சொழுங்கையின் முனையினிலே வீழ்ந்து கிடந்த இளம் பெண் யார் என்பது. எம்மிடம் இருந்த இறந்தவர்களின் பட்டியலின் படி, தாவடியில் ஒரு இளம் பெண்




# வீழ்ந்தன

தம்பதிகளுக்கு உதவி செய்து கொண்டு நின்றான். தேவநாயகத்தின் மகன் லாவண்யனும் அப்பொழுது அங்கேதான் நின்று கொண்டு இருந்தான். ஜயாக்கிளி வாத்தியார் வந்து பேசிக்கொண்டிருப்பதெல்லாம் அங்கிருந்து பார்த்தால் தெரியும். நேரம் காலை 9.30 மணி.

அப்பொழுதுதான் அப்பாவிமக்களை கொல்வதற்கு என்றே 'கொமிஷன்' பெற்று கொலைஞர்கள் வாங்கும் கொலைகார விமானம் 'புக்காரா' வட்டமிடத்தொடங்கியது. "பொம்பர் சுத்துது, போ அம்மா வரட்டாம்" என்று ஆதிலட்சுமி சொல்ல, அதனைக் கண்டதும் லாவண்யன் பெற்றோரிடம் ஓடிவந்தான். அரசாங்கத்தின் அராஜகத் தூதன் வட்டமிட்டுப் பறந்து வந்தது. 'வானக்கழுகு புக்காரா' அந்த இடத்திலே ஐந்து குண்டுகளை அள்ளி இறைத்தது.

அவற்றில் ஒன்று தேவநாயகத்தின் வளவுக்குப் பின்வளவில் விழுந்து மண்ணுள் புதைந்து கொண்டது: வெடிக்கவில்லை. மற்றது பக்கத்தில் இருந்த கல்வி நிலையத்தின் மீது: இன்னுமொன்று அங்கு நின்ற பனைமீது: ஏனையவை தேவநாயகம் வாழ்ந்த வீட்டின்மீதும்: வாத்தியாரும் தேவநாயகமும் இருந்து கதைத்துக் கொண்டிருந்த மாமரத்திற்கு அருகிலும் வீழ்ந்து வெடித்துச் சிதறின.

கல்வி நிலையத்தில் எவருமே இருக்காததால் கட்டிடம் மட்டுமே சேதமுற்றது. தேவநாயகம் இருந்த வீடு இடிந்து நொறுங்கியது...... வீட்டின் முற்றத்தில் நின்ற இரண்டு மாமரங்களும் வெட்டப்பட்டு தூக்கி எறியப்பட்டன. தேவநாயகம் மனைவியும் பிள்ளைகளும், ஜயாக்கிளி வாத்தியாரும் எங்கே?

அதோ முன் குச்சொழுங்கையில் எதிர் வீட்டுக் காணியின் மதிலோடு மோதி ஒரு முண்டம் கிடக்கிறது. தலையில்லை, கைகள் இல்லை, கால்கள் இல்லை. முறிந்த மாமரத்தின் நுனிக் கொம்பு ஒன்று குப்புறக் கிடந்த அந்த முண்டத்தின் முதுகில் குத்தி, நெஞ்சு வழியாகப் புறப்பட்டு, நிலத்தில் முனை புதைந்த நிலையில் காணப்படுகின்றது...... அது..... அதுதான் தேவநாயகம்.

மாமரத்தின் அடிமரத்தில் அப்பிக்கொண்டு இருக்கின்றது. அவரது இரண்டு கால்கள் மட்டும் முன்னால் இருந்த வீட்டின் படிகளில் மேலும் கீழுமாகக் கிடக்கின்றன.

அந்தக் குச்சொழுங்கையில் தேவநாயகத்தின் வீட்டுக்கு நேர் எதிராக–ஐம்பத்தைந்து வயதான அயல்வீட்டு திருமதி குருசாமி மகேஸ்வரியின் உடல் தூக்கி எறியப்பட்டு கிடக்கிறது.

உடல் எல்லாம் சல்லடையாக்கப்பட்ட நிலையில் இளம் பெண் ஒருவரின் சடலம், அந்த குச்சொழுங்கையின் முனையில் இரத்தம் தோய்ந்து கிடக்கிறது. அது யாருடையது? அப்பொழுது அந்த இடத்தில் யாராலும் அடையாளம் காணப்படவில்லை: பின்னர் வைத்திய சாலையில் உரிமை கோரப்பட்டதோ தெரியவில்லை.

சிதையுண்ட உடல்களும், உறுப்புக்களும் போராளிகளால் பொறுக்கி எடுத்துச் செல்லப்பட்டன. மகேஸ்வரியின் உடல் கணவன் பிள்ளைகளால் எடுத்து செல்லப்பட்டது. வெடிக்காத அந்தப் பாரிய குண்டு 10 அடி ஆழத்தில் புதைந்திருந்தது. அதனைப் போராளிகள் மீட்டெடுத்தனர்.



குண்டுவீச்சினால் இறந்திருக்கிறார்: பெயர் ஜெயதா – பல்கலைக்கழக இறுதியாண்டு மாணவி. பத்திரிகைகளிலும் அவர் புகைப்படத்தோடுகூடிய கண்ணீர் அஞ்சலிகளைப் படித்ததாக நினைவு. ஒருவேளை அவராக இருக்குமோ?

ஒருவேளை உறவினர் அல்லது நண்பர்கள் யாரையாவது காணவந்த இடத்தில் அவருக்கு இந்த ஆபத்து ஏற்பட்டிருக்கலாம். எது எப்படியென்றாலும் ஜெயதாவின் வீட்டாரைச் சந்தித்து விபரம் எடுக்க வேண்டும் என்று, டேவிட்டும் நானும் தாவடி குளப்பிட்டி வீதிக்கு விரைகின்றோம். வழியில் ஒவ்வொருவராக விசாரித்து ஆனைக்கோட்டையை அண்மித்து, வீதிக்கரையோடு இருக்கும் ஜெயதாவின் மாமன் கணேசவேல் வீட்டை அடைகின்றோம்.

இங்கு சென்றதுமே நாம் எதிர்பார்த்து வந்த சம்பவத்துக்கும் இங்கு நிகழ்ந்த சம்பவத்துக்கும் எதுவித தொடர்பும் இல்லையென்று புரிந்துகொண்டோம்.

தொடரும்...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போருள்...

மாறி மாறித் தொண்டர்களாக வந்து செல்கிறார்கள். ஒரு முறை ஒருவன் எனது காலுக்கு மருந்து கட்டுவதற்கென உயர்த்திப் பிடிக்க விடப்பட்டான். காயக்கட்டு வெட்டப்பட்டதுதான் தாமதம். திடீரென மயக்கம் போட்டு விழுந்து விட்டான். முகமெங்கும் காயங்கள். அவனுக்கு மருந்து கட்டி அனுப்ப வேண்டியிருந்தது.


நான் வீட்டிற்கு அறிவிக்க வேண்டாமென்று கூறியிருந்தேன். ஆனால் எப்படியோ கதை பரவி அவர்கள் அறிந்திருக்க வேண்டும். ஒரு கிழமைக்கு முன்னர் ஊரிலிருந்து இத்தனை தூரம் வெகு சிரமப்பட்டுத் தேடி எனது தாயார் வந்திருந்தார். முகத்தில் துயர் கலந்த பயம்ததும்ப, ஒவ்வொருவராய்ப் பார்த்துக் கேட்டு வந்து என்னைக் கண்டதும் ஏங்கி என்மேல் விழுந்து ஏதேதோ சொல்லிப் புலம்பி அழத் தொடங்கி விட்டார். அழுதழுது சொன்னதாலோ எனது திகைப்பினாலோ அன்றித் தேற்ற முயன்றதன் காரணமாகவோ அவர் என்ன சொல்லியழுதார் என்பது தெளிவாகப் புரியவில்லை. அல்லது விளங்கவில்லை. அழுகையை நிறுத்த பெரும் பிரயத்தனப்பட வேண்டியிருந்தது. ஆயினும் இடையிடை விக்கலும் இழுவையும் நிற்கவேயில்லை. தழுவி உச்சி மோந்து முத்தமிட்டார். காலின் விரல்களையெல்லாம் வருடி எப்படியோ தாங்கிக் கொண்டாய். இப்படி உருகிப் போனாயே என்று அடிக்கடி கேட்டுக் கொண்டார். தான் இனி ஊருக்குச் சென்று எனது சகோதரியையும் சகோதரனையும் கூட்டி வரப்போவதாகக் கூறினார். கால் நிலமை, உடல் நிலமை பற்றியெல்லாம் மிகுந்த அக்கறையோடு கேட்டார். 'இத்தனை காலம் சேவை செய்தது போதும். இந்தக் காயம் மாறியதும் நீ வீட்டுக்கு வந்து இனி என்னுடனேயே இரு. இனியும் உன்னால் துன்பப்பட முடியாது.

என்னாலும் முடியாது என என்றுமில்லாதவாறு ஒரே மூச்சில் சொல்லி முடித்தார். இதனை முன்னரும் சிலசமயங்களில் சாட்டோடு சாட்டாக சாடைமாடையாக வெளிப்படுத்தி இருக்கிறார். ஆனால் இத்தனை வெளிப்படையாக விடாப்பிடியாக அல்ல. "இல்லை அம்மா, வீட்டிற்கு வந்து பாரமாக இருப்பதை விட நாட்டுக்காக இப்படியே இருந்து ஏதாவது செய்து கொண்டிருக்கலாம்" என்றேன். அதை வீட்டிலிருந்து செய்யலாம். பத்து மாதம் சுமந்து பெற்ற எனக்கு நீ பாரமென்று சொல்லாதே மகனே உன்னைக் கவனிப்பது எனக்கு சுமையல்ல. அங்கவீனமாகவும் அறிவு குறைந்தும் பிறக்கும் குழந்தைகளைப் பெற்றோர் என்ன கொன்றா விடுகிறார்கள்? அவர்களைப் பெற்றோர் பாசமுடன் வளர்ப்பதில்லையா? நீ அந்தளவுக்கு இல்லை. எவ்வளவோ மேல். எத்தனையோ பெருமைக்கு உரியவன்" என்று கூறி மீண்டும் அழத்தொடங்க பெரும் பிரயத்தனப்பட்டு ஆறுதல், சாட்டுகள் பல சொல்லியே வழி அனுப்பி வைக்க வேண்டியதாயிற்று.


இரு சஞ்சிகையின் ஆசிரியர்கள் அண்மையில் வெளிவந்திருந்த அவர்களது சஞ்சிகைகளை கொண்டுவந்து தந்து என்னைப் பார்த்தார்கள். நான் இறுதியாக எழுதி அவர்களிடம் கொடுத்துவிட்டு போயிருந்த கவிதைகள் அந்தச் சஞ்சிகையில் வெளிவந்து இருந்தன.

ஒன்று போராளி ஒருவனுடைய துன்பங்கள், பெருமைகள் பற்றியது. மற்றயது துப்பாக்கி எமக்கு எந்தளவு தூரம் உயிர்த்துணையாக இருக்கிறது என்பது பற்றியது. அவர்கள் முதலே ஒரு முறை வந்ததாகவும் நான் மயக்க நிலையில் இருந்து ஏதேதோ புசத்திக் கொண்டிருந்ததாகவும் சத்திர சிகிச்சை அறையிலிருந்து வந்திருப்பதால் இப்போது கதைக்க முடியாதென மற்றவர்கள் சொல்லத் தாம் சென்றுவிட்டதாகவும் சொன்னார்கள். தாங்கள் பின்னர் புத்தகங்கள் கொண்டு வந்து தருவதாகவும், வேதனையாய் இருந்தாலும் இந்த ஓய்வு நேரங்களைப் படிப்பதற்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றும் கூறிச் சென்றனர்.

இன்று காலை தான் அவளது கடிதம் வந்திருக்கிறது. எத்தனையோ கைமாறி கடைசியாய் யாரோ ஒருவர் மூலம் என்னிடமே வந்து சேர்ந்து விட்டது. அதைத் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தே பெரும்பாலும் பாடமாகி விட்டது. இருப்பினும் இன்னொரு தடவை எடுத்துப் பார்க்க வேண்டும் போல இருக்கிறது. எடுத்து விரிக்கிறேன். கண்ணீர் துளிகள் தாளில் விழுந்து ஊறிச் சுருங்கிய தடங்களில் வார்த்தைகள் விழுந்து எழுந்து செல்கின்றன. தண்டவாளம் அதிரக் கடந்து கூவிச் செல்லும் ரயிலின் பெட்டிகள் போல அவை இருதயத்தை உலுப்பி நகர்கின்றன. ஒரு வகையில் ஒப்பாரி போலவும் அது இசைத்து நீள்கிற து.



"என்னுயிரே! முன்னரெல்லாம் சம்பிர தாயத்திற்கோ, வழ மையான மரபு ரீதியாகவோ அன்றி என் கவலைகளையெல்லாம் கொட்டி உங்களைக் குழப்ப விரும்பாமையாலோ, நலமுடன் இருக்கிறேன்." என்று கடித ங்களின் ஆரம்பங்களிலேயே பொய் எழுதி என் துயர்களை மறைக்க முயன்றிருக்கிறேன். இன்று அப்படிச் செய்ய முடியவில்லை. விரும்பவும் இல்லை. மெலிந்து, வெளுத்து முகம் மாறிப் போயிற்றாய்! இன்னும் என்னென்னவோ எல்லாம் உங்கள் அம்மா சொல்லி அழுகிறா. உங்களைப் பற்றிய செய்திகள் மிகைப்படுத்தப்பட்ட பொய் என்றும் ஒரு வதந்தி போல வும் ஆகி விடாதா என அங்கலா ய்க்கிறேன். பெரிதா கதத்தி அழவும் முடியவில்லை. உங்களைக் கட்டிக் கொண்டு ஆறுதல் பெறவேண்டும் போல இருக்கிறது. யார்க்கு எடுத்துரைத்து யார்தான் தேறுவது. என் வசம் நானில்லை. நீங்களும் இல்லை. ஏன் இத்தனை நாளாய் அறிவிக்காமல் விட்டீர்கள்? என்னைப் பிரித்தே தான் பார் க்கிறீ ர்களா? உங்கள் துன்பங்களில் எனக்குப் பங்கு இல்லையா? எனக்காக ஒரு கடிதம் எழுதக்கூட உங்களுக்கு நேரமற்று போகிறதா? என்னிலிருந்து நீங்கள் எட்ட எட்ட போவதாகவே படுகிறது. என் உணர்வுகள் கேட்கிறதா? என் அன்பே! உங்களுக்குத் தெரியும் உங்கள் காலில் எனக்கு அதிகம் விருப்பமென்று, எனது காலையும் எங்காவது மோதி உடைக்க வேண்டும் போலிருக்கிறது.



சமர் தொடங்கிய நாளிலிருந்து ஏதோ ஒரு உணர்வு என்னை உறுத்திக் கொண்டே இருக்கிறது. எனக்குத் தெரியும் நீங்கள் போயிருப்பீர்களென்று. முன்னரும் நீங்களாகக் கேட்டுப் போய்த்தானே இடுப்பில் வெடி பட்டது. வேதனைகளை எப்படித்தான் தாங்கிக் கொள்கிறீர்கள். மேலும் மேலும் துன்பம் அனுபவிப்பதுதான் முடிவா? பதில் கூறவே மாட்டீர்களா? வீதியிலிருந்து விலகி ஓடுகிற வாகனமென நினைவுகளும் செயல்களும் தடம் புரள்கின்றன. இந்த நிலையில் உங்கள் அருகிலிருந்து காற்றுவிசுக்கவும் முடியவில்லையே. உங்களுக்கு ஆறுதல் கூறி எழுத முனைந்து பேனாவை அழுத்தி பிடிக்கிற மூன்று விரல்களும் ஒழுங்கு தவறி கிறிக்கிச் செல்வதாகவே தெரிகிறது. உண்மையில் தாங்கள் தான் என்னை ஆற்றுப் படுத்த வேண்டும்! அன்பே நீங்கள் கவலைப்படக் கூடாது. நான் விடவும் மாட்டேன். இன்னம் இன்னும் நான் உங்களை அதிகம் காதலிக்கிறேன்! என்றும் நான் உங்களுக்குப் பக்க பலம் தான்! எழுதிக்கொண்டே இருக்கலாம் போல தோன்றுகிறது. ஆனால் அதற்கு முடியவில்லை. விரைவில் வைத்தியசாலைக்கு வர முயல்கிறேன்.

> சமர் தொடங்கிய நாளிலிருந்து ஏதோ ஒரு உணர்வு என்னை உறுத்திக் கொண்டே இருக்கிறது. எனக்குத் தெரியும் நீங்கள் போயிருப்பீர்களென்று. முன்னரும் நீங்களாகக் கேட்டுப் போய்த்தானே இடுப்பில் வெடி பட்டது.

என்றும் போல் நான் உங்களுக்காக அனுப்பி விடுகிற அன்பின் ஈரம்... தங்கள் கால்களுக்கும்...!

"என்னைத் . தெரியுதா" என்ற மெலிதான இனிய பழக்கப்பட்ட கரகரப்பும், நடுக்கமும் கலந்தொலிப்பதாய் தோன்றுகின்ற அந்தக் குரல் இதயத்தைக் கவ்வ திடுமெனக் கடிதத்தைக் விலத்திக் கண்களை நிமிர்த்துகிறேன்! கடிதத்திற்குரியவளே தான்!

"நீங்கள் மல்லிகைப்பூ பிரியரல்லவா? இப்போ என்னால் தரக்கூடியது" என்று மூன்று பூக்களை எனது படுக்கையில் வைத்து விட்டு வாய் வரை நிரம்பியிருக்கிற வார்த்தைகளை கொட்டவிழைகிறாளா? அன்றி விம்மித் துடிக்கும் உதடுகளால் தடுத்து வைத்திருக்கிறாளா?

என்னை நான் சுதாகரித்துக் கொள்கிறேன்.

இன்னும் அவள் அழவில்லை. ஏற்கனவே அழுது தீர்த்திருக்க வேண்டும். எங்கோ வெறித்துக் குனிகிறாள். சுடு நீரில் தத்தளிக்கிற மீன்களெனக் கண்கள்!

நிச்சயமாக அவள் அழவேபோகிறாள் போலிருக்கிறது.

"நானும் ஒருத்தி இருக்கிறனே! மறந்து போனீங்களா? உங்களுக்கு என்னை நினைவிருக்கும் எண்டே நினைக்கிறேன்"

"உன்னை என்னால திருப்திப்படுத்த முடியாமல் இருக்கிறதுக்காக மனம் வருந்திறன். இந்த நிலையில உனக்கு நானொரு சுமை போலத்தான் நினைக்கிறன். என்னாலை இனி பழைய நிலைக்கு வர முடியாமல் போகலாம். என்னைத் தொடருகிறதால துன்பத்தையே தொடருகிறாய். என்ர பாதையும் தேடலும் வேற. உனக்கு இது ஒத்து வராமல் இருக்கலாம்...."

"இல்லை கொஞ்சம் பொறுங்கோ. அப்படிச் சொல்லாதீங்கோ. உங்கட ஆழ்ந்த அன்பே எனக்குக் கிடைச்ச பெரும் பேறுதானே. இதே நிலை எனக்கு வந்திருந்தா என்னைச் சுமை எண்டா நினைச்சிருப்பீங்கள். என்னதான் நினைக்கிறீங்கள்?"

"உங்கட போக்கு சில சந்தர்ப்பங்கள்ள விழங்குதில்லை. என்னில இருந்து எட்ட எட்டப் போறீங்கள்? என்னைச் சுமையெண்டா நினைக்கிறீங்கள்? முதலையும் விட இப்ப நான் உங்கள அதிகமாகவே விரும்புறன். நல்ல உள்ளம் கொண்ட நிறையச் சாதனைகள் கண்டு பெருமைகளெல்லாம் கொண்ட உங்களைக் காதலிக்கிறதையே, உங்களுக்குப் பக்க பலமாய் இருக்கிறதையே என்ர லட்சியம், பேறு எண்டு நினைக்கிறேன்.

உங்களுக்காக நான் எதையும் செய்யத் தயாராயிருக்கிறேன்." ✷

www.tamilarangam.net



**சிறுகதை**

# சிகப்பி

**- முல்லை கோணேஸ், தமிழீழம்**

பனிமாத விடியல் மனசுக்கு இதமாய் இருந்தது. படுக்கையை விட்டெழும்பிய சுந்தரம் கண்களைக் கசக்கியபடி மகள் சூட்டி படுத்த இடத்தை நோக்கினான். படுக்கை வெறுமையாய் இருந்தது.

"அப்பா!...... என்ர சிகப்பி இனிமே வரமாட்டுதாப்பா?" தன் பிஞ்சு மகள் கேட்ட கேள்வியில் சுந்தரம் அதிர்ந்துதான் போனான்.

"எங்கே போனவள்?"

என்று எண்ணிக் 'கொண்டே விறு விறென்று எழும்பி குசினிப்ப க்கம் போனன்.

மனைவிதான் முதலில் எழுந்து தன் காரியங்களில் ஈடுபடுவாள். அதற்குப் பிறகுதான் சுந்தரம் எழுந்து மகள் சூட்டியின் கன்னங்களில் முத்தமிட்ட பின்னரே,அவளும் படுக்கை விட்டெழுவது வழக்கமாயிருந்தது.

ஊரைவிட்டு வந்த சில நாட்களில் அந்த வழக்கங்கள் பிசகிப்போனாலும், இப்போது சுந்தரம் தனக்கென்று ஒரு வீடும், குசினியும் அமைந்துவிட்டதிலிருந்து மீண்டும் அது அமுலுக்கு வந்திருந்தது.

ஆனால், இன்று சூட்டி வழமைக்கு

இப்போ...... சிகப்பி என்ன செய்யும்....... இப்பிலிப்பிலும், முள் முருக்கிலையும் ஆர் போடுவினம்?"

மாறாய்.....

குசினிக்குள் எட்டிப் பார்த்த சுந்தரத்திற்கு நெஞ்சு பகீரென்றது.

அங்கும் அவள் இல்லை. மனைவி மட்டுமே இருந்தாள்.

"எங்கேப்பா சூட்டி? படுக்கையில் ஆளைக் காணேல்லை?" சுந்தரம் பரபரத்தான்.

"நான் எழும்பி வரேக்க படுத்துத்தான் கிடந்தவள்...... எங்க போனவள்......" என்று கூறிக்கொண்டே பிட்டுக்குக் குழைத்த மாவைச் சுளகோடு வைத்துவிட்டு அவளும் வெளியில் வந்தாள்.

வீட்டைச் சுற்றி இருவரும் எங்கு தேடியும் அவளைக் காணவில்லை.

பதறியடித்துக்கொண்டு பாதையில் இறங்கி அப்பால் செல்ல, புதர் மறைவில் நின்றபடி தூரத்தே எதையோ வெறித்துப் பார்த்தபடி சூட்டி......

"சூட்டி........... என்னம்மா?...... ஏன் இதில் வந்து நிற்கிறாய்?" பிஞ்சு மகளின் பிஞ்சுக் கையைப் பற்றிக்கொண்டு சுந்தரம் ஆதரவோடு கேட்டான்.

"அப்பா!...... அதோ...... என்ரை சிகப்பி!"

அவன் கை காட்டிய திசையில் சுந்தரம் பார்வையைத் திருப்பினான். தூரத்தே, பக்கத்து வீட்டுக் கோடி யில் கொட்டிலொன் 'றில் கட்டி நின்றது ஆடொன்று.

"சிகப்பிக்கு என்ன நேர்ந்ததோ?" கட்டின கட்டில் நின்றபடியே தாகத்தில் தொண்டை வறண்டு கத்தமுடியாமல் கிடக்குதோ? கடிப்பதற்குக் குழை எட்டாமல் குறுகிப்போய் நிற்குதோ?

"அதுக்கேன் இப்ப பனிக்குள்ள இஞ்ச வந்தனி? அது நிக்கட்டும் வா"

"அப்பா!....... என்ர சிகப்பி இனிமே வரமாட்டுதாப்பா?" தன் பிஞ்சு மகள் கேட்ட கேள்வியில் சுந்தரம் அதிர்ந்துதான் போனான். "அ..... அது வரும்....... வரும்.....சூட்டி........." குழந்தையைச் சமாளிக்கப் பிரயத்தனம் செய்தான்.

இப்போ....... சிகப்பி என்ன செய்யும்........ இப்பிலிப்பிலும், முள் முருக்கிலையும் ஆர் போடுவினம்?" பெயருக்கேற்றாற்போல் படு சுட்டியாகவே சூட்டி கேள்விகளை விடுத்தாள்.

அவளது கேள்விகளுக்குச் சுந்தரம் ஈடு கொடுக்க முடியாமல் திணறினான்.

"ஏனப்பா......யோசிக்கிறீங்கள்? ...........சிகப்பியை நான் பாக்கவேணும்......" சிணுங்கத் தொடங்கினாள். சுந்தரத்திற்கு என்ன செய்வ தென்றே தெரியாமல் போய்விட்டது.

"இன்னும் கொஞ்ச நாளையால போவம்" சமாதானம் செய்தான்.

"இப்ப போவம்"

"இப்ப ஏலாதம்மா. அங்க ஆமிக்காறர் நிக்கிறாங்கள். எங்கட சிவராசா மாமாவைச் சுட்ட மாதிரி எங்களையும் சுட்டுப்போடுவாங்கள்"

"ஆ...... ஆ............ இப்ப போவம்." விடவில்லை அவள்.

சுந்தரத்திற்குக் கோபமே வந்துவிட்டது.

"இப்ப முடியாதெண்டு சொல்லுறனெல்ல......... வா......" கையைப் பிடித்து இழுத்துவர முனைந்தான்.

அடம்பிடித்துப் பலனில்லாமல் அடங்கிப் போனாள் சூட்டி.

கண்களில் இருந்தும் பொல பொலவென்று கண்ணீர் வழிந்தது.

கண்ணீரைக் கண்ட மாத்திரத்தில் பொங்கி வந்த கோபம் சுந்தரத்தை விட்டு ஓடி ஒளித்தது.

கண்களைத் துடைத்து விட்டுக் குழந்தையை வாரித் தூக்கினான்.

அவள் அழுததால் சுந்தரத்தின் மனைவியும் கண்கலங்கிப் போனாள்.

சூட்டி அழுவதிலும் ஞாயமிருக்கிறதென்பதும் சுந்தரத்திற்கு நன்றாகவே தெரியும்.

சிகப்பி! பெயருக்கேற்றவாறு செக்கச்செவேலென்றே இருந்தது.

கொழுகொழுவென்று வளர்ந்து பார்ப்பவர்களை இன்னுமொரு தடவை பார்க்க வைக்கும் வசீகரம் கொண்டதாகவே இருந்தது இந்தச் சிகப்பி ஆடு.

நீர்வேலியில் இருந்து சின்னக் குட்டியாய் வாங்கிக் கொண்டு வந்தது. வாங்கிக் கொண்டுவந்த நாளில் இருந்து அதன்மீது சூட்டிதான் மிகப் பாசமாய் இருந்தாள். சிகப்பி என்று பெயர் சொல்லிக் கூப்பிட்டதும் அவள்தான்.

பள்ளிக்கூடம் போகும் போதும் அதைத் தடவிக் கொடு த்துவிட்டே போவாள். பாடசாலை விட்டு வந்த பின்னரும் நேரே சிகப்பி கட்டி நிற்கும் இடத்திற்கு ஓடிப்போய் கொஞ்சி விட்டுத்தான் வீட்டிற்குள் வருவாள்.

வேலியில் நிற்கும் இப்பிலிப்பில் மரக் குழையையும், மூலையில் நிற்கும் முள்முருக்கு இலையையும் தடியால் தட்டி விழுத்திப் பொறுக்கிக் கொண்டுபோய் போடுவாள்.

இது ஆசையோடு சாப்பிட்டு அசை போடுவதை நீண்ட நேரமாய் நின்று ஆவலோடு பார்ப்பாள்.

"அப்பா!..... சிகப்பி எப்ப அப்பா குட்டி போடும்....... எத்தனை குட்டி போடும்?" என்ற கேள்விகளை ஆர்வத்தோடு கேட்பாள்.

மழை நாட்களில் சிகப்பி நனைந்து விட்டால் துடி துடித்துப்போய், ஈரந் துவட்டிப் 'பவுடர்' போட்டு பக்கவமாய் பராமரிப்பாள். நாலைந்து மாதங்களிலேயே சிகப்பி நன்றாய் வளர்ந்து விட்டிருந்தது.

சூட்டி சிகப்பிமேல் பாசத்தைக் கொட்டி வைத்திருந்தாள்.

அன்பு செய்வதற்கு மனிதர்கள்தான் தேவை என்று இல்லை, மிருகமே போதுமென்று சொல்வார்களே-இது சூட்டி விசயத்தில் சரியாகத்தானிருந்தது.

இப்படி இருக்கும்போதுதான் அன்று அந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

இராணுவம் யாழ் நகரையே பிடித்து விடவேண்டுமென்ற குருட்டு எண்ணத்தோடும், கொடூரச் செயல்களோடும் முன்னேறிக் கொண்டிருக்கிறது.

நாவற்குளி தாண்டி அப்பால் செல்லவேண்டுமென்று கூறிக்கொண்டு பக்கத்து வீட்டு சிதம்பர னாக்கள் அவசர அவசரமாய் அலறியடித்துக் கொண்டு புறப்பட்டுப் போனது, சுந்தரத்தை மலைக்க வைத்தது.

அந்தக் கொடூர நிமிசங்களில் அவனால் நின்று யோசிக்க அவகாசமில்லாமல் கையில் கிடைத்த பெட்டியொன்றைத் தூக்கிக் கொண்டும், சைக்கிளை எடுத்து சூட்டியையும் மனைவியையும் முன்னுக்கும் பின்னுக்குமாய் ஏற்றிக் கொண்டும் செம்மணிப் பாதையால் அந்தச் செங்கமங்கலான நேரம் ஓடி வந்ததுதான் ஞாபகம்.

அந்தச் சொற்ப நிமிடங்கள் சிகப்பியைப் பற்றிச் சிந்திக்க அவகாசமும் அவசியமும் சுந்தர த்திற்கு ஏற்படாமல் போனது



நியாயமானதே.

"சிகப்பிக்கு என்ன நேர்ந்ததோ?"

கட்டின கட்டில் நின்றபடியே தாகத்தில் தொண்டை வறண்டு கத்தமுடியாமல் கிடக்குதோ? கடிப்பதற்குக் குழை எட்டாமல் குறுகிப்போய் நிற்குதோ?

'சிகப்பி!...... என்ர சிகப்பி!' சூட்டி வாய்விட்டு மீண்டும் அழத்தொடங்கினாள். ❖

## நொடிக்கதை ~ காலம்~

குருவிக் கூடு.

சிறகு முளைக்காத குருவிக் குஞ்சுகள் சிரித்து ஆரவாரித்தன.

மரத்தில் இருந்த அணில், குருவிக் கூட்டுக்குத் தாவி, ''உங்களுக்கு இன்னும் சிறகு முளைக்கவில்லை - சுதந்திரம் இல்லாத உங்களுக்கு என்ன சிரிப்பு?'' என்று கேட்டது.

குஞ்சுகள் கவனிக்கவில்லை.

பாம்புக்கு இது வாய்ப்பானது.

குஞ்சுகளின் சிரிப்பொலி கேட்டு, பாம்பு கூட்டுக்குள் நுழைந்தது.

நொடிப்பொழுதில் -

பாம்பின் வாயில் குஞ்சுகள் பலியாகிப் போயின.

அணிலுக்கோ துயரம் தாங்கவில்லை.

அது மீண்டும் இரைந்து கத்தியது:-

"சிறகு விரி
பிறகு சிரி''

**காசி ஆனந்தன்**

## வள்ளுவர் வழியில் -

இறுதி பயப்பினும் எஞ்சாது இறைவற்கு
உறுதி பயப்பதாம் தூது (குறள்)

இறுதி பயப்பினும் - உயிருக்கு அழிவு தருமாயினும், எஞ்சாது - அஞ்சி விலகாது, இறைவற்கு - தலைவனுக்கு, உறுதி பயப்பதாம் - பலம் தந்து நிற்பது.

அஞ்சாமை !

இது போருடன் தொடர்பு கொண்ட எவருக்கும் அவசியம்!

செய்தியைக் கொண்டு செல்லும் தூதுவன் இதில் ஒருவன். அவன் மட்டுமா? போர் வீரர்களுக்கு உணவை எடுத்துச் செல்லும் இடைத் தொண்டன் மேலும் ஒருவன்! இவர்களை நம்பி நடைபெறுகிறது போர்! எனவே -

தம் உயிருக்கு இறுதி வரினும் அஞ்சாத உறுதி உடையோரே இவ்வகைப் பெரும் பணிக்கு உரியோர் ஆகின்றனர்! ஏனையோர் அல்லர் ! ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# விடுதலை நோக்கிய பயணத்தில்...

தமிழ் மக்களின் அடிமைத்தளை அறுத்தெறியும் - விட்டுக்கொடுப்பற்ற போராட்டத்தின் போது இயக்கம் - எத்தனையோ நெருக்கடிகளை எதிர்கொண்ட போதும் மக்களின் உரிமைகள் விடயத்தில் சமரசம் செய்யாமல் இருந்து வருகின்றது. இத்தகைய விட்டுக் கொடுப்பற்ற போராட்டமே தமிழ் மக்கள் தமது சுயநிர்ணய உரிமையினை வென்றெடுப்பதற்கான வாய்ப்புக்களைத் தக்க வைத்திருக்கின்றது. ஈழத்தமிழர் வரலாற்றில் விடுதலைப் புலிகள் இயக்கமும் தலைவர் பிரபாகரனும் தோன்றியிருக்காது விட்டால், காலம் காலமாக அடிமைப்படுத்தப்பட்ட இனமாகவே தமிழினம் இருந்திருக்கும் எனவும், விடுதலைப் புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்படுமானால் தமிழ் மக்களே முழுமையாகத் தோற்கடிக்கப்பட்டுவிடுவர் என்று அச்சம் கொள்ளப்படும் அளவிற்கு தமிழ் மக்களின் உரிமைகளின் மொத்த வடிவமாகவே விடுதலைப் புலிகள் இயக்கம் இருந்து வருகின்றது.

ஒற்றைத் துப்பாக்கியுடனும் ஒரு சில போராளிகளுடனும் ஆரம்பித்த இயக்கம் இன்று பல்வேறு தரைப்படையணிகள், கடற்படையணிகள், விமான எதிர்ப்புப் படையணிகள் போன்றவற்றைக் கொண்ட வளர்ச்சியடைந்த இயக்கமாகத் திகழ்கின்றது. சிங்களப் படைகளின் இன அழிப்பினை எதிர்கொள்வதற்கான தமிழர் படையாக பரிணாம வளர்ச்சியினை அடைந்துள்ளது.



> இத்தமிழர் படையின் இன்றைய வளர்ச்சியுடன் தமிழர் எவரும் திருப்தியடைந்துவிட முடியாது. சிங்களத்தின் மரபு சார்ந்த போரை எதிர்கொள்ள அடுத்த கட்ட வளர்ச்சிக்கு தன்னை உட்படுத்தும் வரலாற்றுக் கட்டத்தில் தமிழர் படை தற்போது நிற்கின்றது.

கடந்த 20 ஆண்டுகளில் விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வளர்ச்சிகண்டு தமிழர் யாவரும் நிச்சயம் பெருமைப்பட்டுக் கொள்ளலாம். ஆனால், இத் தமிழர் படையின் இன்றைய வளர்ச்சியுடன் தமிழர் எவரும் திருப்தியடைந்துவிட முடியாது. சிங்களத்தின் மரபு சார்ந்த போரை எதிர்கொள்ள அடுத்த கட்ட வளர்ச்சிக்கு தன்னை உட்படுத்தும் வரலாற்றுக் கட்டத்தில் தமிழர் படை தற்போது நிற்கின்றது. இப்படையை தமிழர் அனைவரும் இணைந்து எவ்வளவு விரைவாக பலப்படுத்துகிறோமோ அவ்வளவு விரைவாக தாயக விடுதலையை வென்றெடுக்கலாம். ✷

# தமிழ் மக்களுக்கு அமைதியையும் ...

அதன் பின்னர் 1976இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் 'தமிழீழம்' எனும் தமது பாரம்பரிய தாயகத்தினை மீட்டெடுக்கத் தமிழர் உறுதி பூண்டமையை வெளிப்படுத்தி, 1977இல் பாராளுமன்றத் தேர்தலை இதற்கான குடியொப்பமாக மாற்றியதன் மூலம் தமிழர்கள் அதனை 'மக்கள் விருப்பின்' செயற்பாடாக்கி அனைத்துலகச் சட்டங்களுக்கு அமைவான கோரிக்கையாக்கினர்.

இதனை சிறிலங்கா ஏற்க மறுத்து தமிழ் மக்களை ஆயுத ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கி போரைத் திணித்த வேளையில், எல்லாவிதமான வழிகளிலுமான முயற்சிகள் சிறிலங்கா அரசினால் நிராகரிக்கப்பட்ட நேரத்தில், தமிழ் மக்கள் தம்மை விடுதலைப் புலிகள் எனும் விடுதலைப் போராட்ட இயக்கமாக மாற்றி ஆயுத எதிர்ப்பின் மூலம் தமது நியாயமான கோரிக்கைகளை அடைய வேண்டிய தேவையேற்பட்டது. இதனால் 1973ஆம் ஆண்டின் ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானத்துக்கு ஏற்ப, தமிழீழ விடுதலைப் போராட்டமானது காலனித்துவத்தின் வழிவந்த அடக்குமுறைக்கு எதிரான தேசிய விடுதலைப் போராட்டமாகவும், தமிழீழ விடுதலைப் புலிகள் அத்தேசிய விடுதலைப் போராட்டத்தினை ஏற்று வழிநடத்தும் ஆற்றலுள்ள தலைமையாகவும் (Competence Authority) உள்ளனர். ஆதலால் தமிழீழ விடுதலைப் போராட்டம், அனைத்துலகச் சட்டங்களால் பாதுகாக்கப்பட வேண்டிய தேசிய விடுதலைப் போராட்டமாகவும், தமிழீழ விடுதலைப் புலிகள், ஐக்கிய நாடுகள் சபையினால் ஏனைய விடுதலை இயக்கங்களுடன் சமாந்தரத் தன்மையான விடுதலை இயக்கமாக அங்கீகரிக்கவும் வேண்டிய நியாயமான தேவையும்-கடமையும் அனைத்துலக சமூகத்துக்கும் உண்டு.

மேலும் சுயநிர்ணய உரிமையின் உள்ளகப் பரிமாணத்தினால் குடிகள் எனும் தகுதியை உருவாக்கி அரசு ஒன்றை அமைக்கையில் அவ் அரசு, அக்குடிகளை தனது குடிகளாக பேணுவதற்குரிய உளவியல் ஒப்பந்தத்தை பேணாதுவிடின் அங்கு ஜனநாயக அரசு என்பது செயலிழக்கப்படுவதினால், சுயநிர்ணய உரிமையின் வெளியகப் பரிமாணத்தைப் பயன்படுத்தி மக்கள், அனைத்துலக நிறுவனங்களையும் அனைத்துலக அரசுக்களையும் தமது அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே நிர்ணயிக்க உதவும்படி கேட்க சட்ட உரிமை உண்டு. நவீன ஆய்வுகள், மக்களுக்காகப் போராடும் இயக்கங்கள் வெறும் போராட்ட அழைப்பை மட்டும் விடுத்துச் செயற்படாது தமது மக்களின் நாளாந்த தேவைகளையும் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொறுப்பையும் கொண்டிருப்பதினால், இயக்கங்களும் சுயநிர்ணய உரிமையினைக் கோரும் சட்டபூர்வமான அமைப்புக்களாக ஏற்கப்பட வேண்டுமெனக் கூறுகின்றன. அத்துடன் மக்களுக்காகப் போராடும் இயக்கங்களுக்கு அனைத்துலக அங்கீகாரம் வழங்குவது துன்புறும் மக்களுக்கு உதவும் மற்றொரு வழியாகவும் கூறப்படுகிறது. மேலும் இவ்வாறு இயக்கங்களுக்கு வழங்கப்படும் அங்கீகாரமானது அவ் இயக்கம் அனைத்துலக நிறுவனங்களில் தன்னைப் பிரதிநிதித்துவப்படுத்தி சர்வதேச முறைமைகளுக்கு ஏற்ப தன் மக்களின் விடுதலைப் போராட்டத்தை நெறிப்படுத்தவும் உதவும் என்பது முக்கியமான கருத்து. இதன் மூலமே ஒரு விடுதலை இயக்கத்தை பயங்கரவாத இயக்கமென தவறான முறையில் விமர்சிப்பது தடுக்கப்பட்டு மக்களின் உண்மையான துன்பங்களை உலகு அறிய வழிவகுக்கும்.

மேலும் ஒரு தேச அரசின் உருவாக்கலுக்கு அந்த மக்கள் தம்மேல் திணிக்கப்படும் போரை எதிர்த்து போர் நடாத்தக் கூடிய திறனை கொண்டிருக்க வேண்டியது முன்நிபந்தனையாக உள்ளது.

இந்தத் திறன் தமிழீழ விடுதலைப் புலிகளால் உருவாக்கப்பட்டதினால் தான், தமிழீழ மக்களை-ஒரு தேச அரசுக்குரிய-தேச மக்களாக இன்றைய உலகு ஏற்று வருகிறது.

இதனை இல்லாதழிக்க வேண்டுமெனும் நோக்கில், சிறிலங்கா அரசு, தனது இராணுவ ஆக்கிரமிப்பை சுடுதிறன் வலிமை கொண்டு முயல்வதினாலேயே, மக்கள் மீதான அண்மைக்கால இராணுவ ஆக்கிரமிப்புக்கள் மீளப் பெறப்படாதவரை சிறிலங்கா அரசுடன் சமாதானப் பேச்சுவார்த்தை எதையும் நடாத்த இயலாது எனும் இயல்பான நிலையினை விடுதலைப் புலிகள் தெளிவுபடுத்தியுள்ளனர். அத்துடன் மக்களைக் கடும் துன்பங்களுக்கு உள்ளாக்கி அவர்களது நாளாந்த வாழும் உரிமையே மறுக்கப்படும் நேரத்தில் பேச்சுவார்த்தை என்பது அர்த்தமற்றதொன்றாகவே இருக்கும் என்பதும் உண்மையே.

## மக்கள் மீதான சிறிலங்காவின் தொடர் கொடுமைகள்

யாழ். குடாநாட்டில் மக்கள் மீதான போரை வேகப்படுத்தியுள்ள சிறிலங்கா, மக்களின் மனவிருப்புக்கு எதிரான வகையில், சிறிலங்காவின் பாதுகாப்பையும், ஆட்சியினையும் ஏற்கமறுத்த தமிழ் மக்களில் ஒரு பகுதியினரை ஆயுத பலாத்காரத்தின் மூலம் தமது இராணுவ கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள் நோக்கி நகர்த்தியுள்ளனர். அதேவேளை வன்னிப் பெருநிலப்பரப்பில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலுள்ள மக்களுக்கு உணவு, மருந்துகள் சென்றடைவதை தடுப்பதற்கான தடைகளை மேற்கொண்டுள்ளது. மேலும் சித்திரைத் திங்கள் 19ஆம் நாள் 'சூரியக்கதிர்-02' இராணுவ நடவடிக்கையின் பின்பு இப்பிரதேசத்துக்கு இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கு எவ்வித நிவாரணப் பொருட்களையும் பெறும் உரிமை இல்லையென சிறிலங்காவின் சந்திரிகா அரசு அறிவித்துள்ளது. அத்துடன் மனிதாய அடிப்படையில் உதவிபுரியும் அரச சார்பற்ற நிறுவ்னங்கள் இவ் அகதிகளுக்கு உதவி செய்வதையும் தடுத்துள்ளது.

## கிளிநொச்சியில் எதிர்ப்பு ஊர்வலம்

இதனால் வேதனையும், ஆத்திரமும் அடைந்த தமிழ் மக்கள், கிளிநொச்சி அக்கராயன் மத்திய மகா வித்தியாலயத்தில் இருந்து தொடங்கி கிளிநொச்சி சிறிலங்கா அரச அதிபர் அலுவலகம் வரை பிரமாண்டமான ஆர்ப்பாட்ட ஊர்வலம் ஒன்றை நடாத்தியுள்ளனர். பட்டினி நிலைக்குத் தள்ளப்படும் அபாயத்தை நீக்கி உடனடியாக நிவாரண உதவிகளைப் பெற அனுமதிக்குமாறு கோரி, ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்ட இவ் ஊர்வலத்தின் முடிவில், சிறிலங்கா அரசிற்கும், ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளர் அலுவலகம், அனைத்துலக செஞ்சிலுவைச் சங்கம், ஒக்ஸ்பாம், எல்லைகளற்று சேவை செய்யும் வைத்தியர்கள் அமைப்பு ஆகியவற்றுக்கும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

## முல்லைத்தீவிலும் பேரணி

இத்தகையதான இன்னோர் ஆர்ப்பாட்டப் பேரணி முல்லைத்தீவு ஒட்டிசுட்டானில் மக்களால் நடாத்தப்பட்டுள்ளது. இடம்பெயர்ந்த தமிழ் மக்களுக்கான உதவிகளைச் செய்வதற்கு வெளிநாட்டு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களுடன், உள்நாட்டு அரச சார்பற்ற நிறுவனங்களையும் உள்வரவிடாது தடுக்கும் சிறிலங்காவின் சந்திரிகா அரசு, தான்தோன்றித்தனமாக செயற்படுவதினாலும், 19-04-96 க்குப் பின்னர் இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கான நிவாரண உதவிகளை வழங்க மறுப்பதினாலும் மக்கள் பட்டினி நிலைக்குத் தள்ளப்படும் அபாயத்தை விளக்கி மகஜர்கள் கொடுக்கப்பட்டன.

சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் என அனைவரும் கலந்து கொண்டு இவ் ஊர்வலத்தின் தேவையை வலியுறுத்தியுள்ளனர். இத்தகைய பல்வேறு ஊர்வலங்கள் வன்னியின் பலபகுதிகளிலும் நடாத்தப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களிற்கு ஆவண செய்யுமாறு சிறிலங்கா அரசைக் கேட்டுள்ளனர்.

## மருந்துக்கு கடும் தட்டுப்பாடு

முல்லைத்தீவு, கிளிநொச்சி வைத்தியசாலைகளில் மருந்துகள் தீர்ந்து போய்விட்ட நிலையில் தடுப்பூசிகள், கலவைகள், மருந்துகள் என்பன சிறிலங்கா அரசால் விநியோகிக்கப்படாது தடுக்கப்படுகிறது. இதனால் மக்கள் கடும் உயிராபத்துக்களை எதிர்நோக்குகின்றனர்.

## நாற்பது உணவு லொறிகளுக்குத் தடை

வன்னிப் பிரதேசத்துக்கான உணவுகளுடன் வந்த ஐம்பது லொறிகளில் நாற்பது லொறிகளை தாண்டிக்குளத்தில் சிறிலங்காப் பாதுகாப்புப் படையினர் அனுமதிக்க மறுத்ததினால், உணவுத் தட்டுப்பாடு திட்டமிட்டு அதிகரிக்கப்பட்டு வருகிறது. 'புளட்' தேச விரோதக் கும்பலும் உணவு லொறிகளிடம் மீண்டும் கப்பம் கேட்டு இந்நிலைமையை மேலும் மோசமாக்கியுள்ளனர். இக் கப்பம் கேட்கும் விடயத்திற்கு சந்திரிகா அம்மையாரின் பூரண சம்மதம் வழங்கப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகின்றது.

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பாதுகாப்பு நீக்கம்

இதற்கிடையில் அனைத்துலக செஞ்சிலுவைச் சங்க அதிகாரி கிறிஸ்தோபர் குறஸ்பையர், யாழ். குடாநாட்டுக்கு உணவுகளைக் கொண்டு செல்லும் வாகனங்களுக்கு, சூழ்நிலை மாறும்வரை தம்மால் பாதுகாப்பு வழங்க முடியாமல் உள்ளதாகக் கூறியுள்ளார். ஆயினும் பருத்தித்துறையில் உள்ள அனைத்துலகச் செஞ்சிலுவைச் சங்க அலுவலகம் தொடர்ந்து தொழிற்பட உள்ளது எனவும் தெரிவித்துள்ளார்.

இதேபோல் ஐக்கிய நாடுகள் அகதிகள் ஆணையாளருக்கு தொலைபேசி வசதிகள் சிறிலங்கா அரசினால் மறுக்கப்படுவதினால் நடைமுறைப் பணிகள் சிரமங்களுக்கு உள்ளாகி வருகின்றது.

## சிறிலங்கா அரசின் இயலாமை

இவ்வாறாக சிறிலங்கா அரசு, தமிழ் மக்களுக்கு அமைதியையும்-பாதுகாப்பையும் வழங்க ஆற்றல் அற்றுக் காணப்படுவதினால் - இனி அனைத்துலக அமைப்புக்கள், தமிழீழ விடுதலைப் புலிகளுடன் நேரடித் தொடர்புகளை மேற்கொள்வதன் மூலமே தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டிய நிலை உருவாகியுள்ளது. ✻

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## உலக அரங்கு

# செச்சினியா: கையளவு நாடு கடலளவு வீரம்

கையளவு மனசுஎன்று சொல்லுவார்கள். இது கையளவு நாடு. கண்ணுக்குள் எண்ணெயை விட்டுக்கொண்டு பார்த்தாலும் உலகப் படத்தில் அதனைக் கண்டு பிடிக்கலாம் என்பது நிச்சயமில்லை.

அந்த நாட்டின் பெயர் செச்சினியா. உலகப் பத்திரிகைகளையும், தொலைக்காட்சித் திரைகளையும் இப்போது நாள் தோறும் நிரப்பிக் கொண்டிருக்கிறது.

சோவியத் ஒன்றியம், உலகின் இரண்டு வல்லரசுகளில் ஒன்றாக அமெரிக்காவின் அடி

செச்சினியாவின் நீண்ட வரலாற்றைப் புரட்டிப் பார்ப்பவர்களுக்கு ஒரு உண்மை புலப்படும்.செச்சினிய மக்கள் தங்கள் சுதந்திரத்திற்காக பல நூற்றாண்டு காலமாக இரத்தம் சிந்திப் போராடி வந்திருக்கிறார்கள்.

வயிற்றைக் கலக்கிக் கொண்டிருந்த கால கட்டத்தில் செச்சினியா உருசியக் குடியரசில் ஒரு சுயாதீன பிரதேசக் குடியரசாக (AUTONOMOUS REPUBLIC) ஆக விளங்கியது.

சுயாதீன பிரதேசக் குடியரசென்ற பட்டப் பெயரோடு விளங்கினாலும் கம்யூனிச ஆட்சிக் காலத்தில் இந்த சுயாதீனமும் குடியரசும் ஏட்டளவில் தான் இருந்தது—நடைமுறையில் இருக்கவில்லை.

செச்சினியாவின் நிலப்பரப்பு 6060 சதுர மைல்கள் மட்டுமே. அதன் மக்கள் தொகை இருபது இலட்சம். பெரும்பாலானோர் முஸ்லிம் மக்கள்.

இந்த சுண்டங்காய் நாடுதான் ஒருகாலத்தில் உலக வல்லரசாகத் திகழ்ந்த உருசிய நாட்டின் இராணுவத்துடன் மோதிக்கொண்டிருக்கிறது.

விவிலிய வேதத்தில் டேவிட்– கொலியத்துடன் மோதி வெற்றிவாகை சூடிய கதை சொல்லப்படுகிறது.

டேவிட் ஒரு ஆடு மேய்க்கும் பையன். கொலியத் என்ற இராட்சதனுடன் மோதி அவனைக் கொன்று விடுகிறான்.

பின் டேவிட் இஸ்ரேல் நாட்டின் அரசனாக முடி சூட்டிக் கொள்கிறான்.

இந்த மன்னனே ஜெருசலம் நகரை இஸ்ரேல் நாட்டின் அரசியல் சமயத் தலைநகராக உருவாக்கியவன்.

இவன் தோற்றுவித்த அரச பரம்பரை House of David என்ற பெயர் கொண்டு அழைக்கப்பட்டது. இந்தப் பரம்பரையிலேயே யேசு கிறிஸ்த்துநாதர் தோன்றினார்.

உருசியாவையும் அதன் பலம் பொருந்திய இராணுவத்தையும் கொலியத்துக்கு ஒப்பிட்டால் செச்சினியாவை டேவிட்டுக்கு உவமை சொல்ல வேண்டும்.

உருசியாவின் நிலப்பரப்பு 6,500,000 சதுர மைல். உலகத்திலேயே பெரிய நாடு. மக்கள் தொகை இருபது கோடி.

இப்படிப்பட்ட ஒரு இராட்சத நாட்டுடன்தான் சுண்டங்காய் பருமன் நாடான செச்சினியா நாடு தனது சுதந்திரத்துக்கும் இறைமைக்கும் உயிரைப் பணயம் வைத்துப் போராடிக் கொண்டிருக்கிறது.

செச்சினியாவின் நீண்ட வரலாற்றைப் புரட்டிப் பார்ப்பவர்களுக்கு ஒரு உண்மை புலப்படும்.

செச்சினிய மக்கள் தங்கள் சுதந்திரத்திற்காகப் பல நூற்றாண்டு காலமாக இரத்தம் சிந்திப் போராடி வந்திருக்கிறார்கள்.

சோவியத் ஒன்றியத்தின் சர்வாதிகாரியாக விளங்கிய ஸ்டாலினின் ஆட்சிக் காலத்தில் செச்சினிய மக்கள் சைபீரியப் பாலைவனத்திற்கு நாடு கடத்தப்பட்டார்கள்.

ஸ்டாலின் மறைவுக்குப் பின்னரே (1953) செச்சினிய மக்கள்

சேரன்மாதேவி

தங்கள் பிரதேசத்துக்கு மீண்டும் திரும்ப முடிந்தது.

நான்கு ஆண்டுகளுக்கு முன் செச்சினியா ஒருதலைப் பட்சமாகத் தன்னை ஒரு சுதந்திரக் குடியரசாகப் பிரகடனம் செய்தது.

இதனை சீரணிக்க முடியாத உருசிய நாட்டு சனாதிபதி பொரிஸ் ஜெல்சின் 1994 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் உருசிய இராணுவத்தை அனுப்பி செச்சினியாவின் சுதந்திரத்தை முளையிலேயே கிள்ளி எறிய முயற்சித்தார்.

குறைந்தது ஒரு வாரத்தில் மிஞ்சிப் போனால் ஒரு மாதத்தில்செச்சினியாவை அடிபணிய வைத்து விடுவோம் என்று இந்தியப் பிரதமர் இராசீவ் காந்தி சூளுரைத்தது (1989) போலவே பொரிஸ் யெல்சினும் சூளுரைத்தார்.

ஒரு காலத்தில் உலகத்தையே நடுங்க வைத்த உருசிய செஞ்சேனை இராணுவத்திற்கு சில ஆயிரம் போர் வீரர்களைக் கொண்ட செச்சினிய இராணுவத்தை வெற்றி கொள்வது மிக இலேசான காரியம் என்றே பலரும் கருதினார்கள்.

ஆனால் பதினாறு மாதங்கள் கழிந்த பின்னரும் உருசிய இராணுவத்தினால் செச்சினியாவை அடிபணிய வைக்க முடியவில்லை.

செச்சினியாவின் தலைநகரமான குறோஸ்னியை உருசிய இராணுவம் கைப்பற்றி அதனைக் குண்டு போட்டுத் தகர்த்த பின்னரும் உருசிய இராணுவத்திற்கெதிரான கெரில்லாத் தாக்குதல்கள் தொடர்கின்றன.

உருசிய இராணுவம் இன்னொரு ஆப்கானிஸ்தானில் காலை விட்டு சேற்றுக்குள் மாட்டிக்கொண்டு விட்டதாக இராணுவ ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

இதுவரை ஆயிரக்கணக்கான உருசியத் துருப்புக்கள் போரில் பலியாகி உள்ளார்கள்.

முப்பதினாயிரம் பொது மக்கள் குண்டுத் தாக்குதலினாலும் எறிகணைத் தாக்குதலினாலும் செத்து மடிந்திருக்கிறார்கள்.

கடந்த சில வாரங்களாக உருசியத் துருப்புக்கள் சில கிராமங்களைச் சுற்றி வளைத்து எறிகணைத் தாக்குதல், கெலிகெப்டர் தாக்குதல், றொக்கற் தாக்குதல் நடாத்தி வருகிறார்கள். ஆனால் போர் ஓய்ந்தபாடில்லை. போர் தொடர்ந்து கொண்டே போகிறது.

இது இவ்வாறிருக்க உருசிய நாட்டு சனாதிபதித் தேர்தல் எதிர்வரும் யூன் மாதம் நடைபெற இருக்கிறது. இந்தத் தேர்தலில் சனாதிபதி பொரிஸ் யெல்சன் மீண்டும் போட்டியிடுகிறார்.

ஆனால் செச்சினியாவின் முடிவில்லாத போர் காரணமாக அங்கு உருசிய இராணுவம் சந்தித்துவரும் ஆளணி, ஆயுத இழப்புக்கள் காரணமாக யெல்சினுக்கு உருசிய மக்களிடமிருந்து பெரிய எதிர்ப்பலைகள் தோன்றியுள்ளன.

யூன் மாதத்திற்கு முதல் போரை ஒரு முடிவுக்குக் கொண்டு வராவிட்டால் ஜெல்சினின் வெற்றி வாய்ப்பு கேள்விக்குறியாகிவிடும் என அரசியல் ஆய்வாளர்கள் ஆரூடம் சொல்கிறார்கள்.

சிறிலங்கா போலல்லாது செச்சினியாவுக்கு எதிரான போரை உருசிய மக்கள் விரும்பவில்லை. ஒரு தேவையற்ற போரின் காரணமாக தங்கள்

உருசியாவின் நிலப்பரப்பு 6,500,000 சதுர மைல். உலகத்திலேயே பெரிய நாடு. மக்கள் தொகை இருபது கோடி.
இப்படிப்பட்ட ஒரு இராட்சத நாட்டுடன்தான் சுண்டங்காய் பருமன் நாடான செச்சினிய நாடு தனது சுதந்திரத்துக்கும் இறைமைக்கும் உயிரைப் பணயம் வைத்துப் போராடிக் கொண்டிருக்கிறது.

பிள்ளைகள் வீணே செத்து மடிகின்றார்கள் என்று பெரும்பாலான உருசிய மக்கள் எண்ணுகிறார்கள்.

இதனால் இந்தப் போரை யூன் மாதத்தில் நடைபெறவிருக்கும் சனாதிபதித் தேர்தலுக்குமுன் ஒரு முடிவுக்குக் கொண்டுவர யெல்சின் பகீரத முயற்சி செய்கிறார். போரை முடிவுக்குக் கொண்டுவந்து அங்கு சமாதானத்தை நிலைநாட்ட தன்னிடம் ஒரு ரகசியத் திட்டம் இருப்பதாக யெல்சின் மொஸ்கோவில் அறிவித்திருக்கிறார்.

இதே நேரம் செச்சினியாவின் முன்னாள் சனாதிப தியும்,செச்சினியப்படைகளின் முன்னாள் தளபதியுமான Dzho-khar Dudayer அவர்களுடன் நேரடிப் பேச்சு வரர்த்தைகளில் ஈடுபட யெல்சன் மறுத்து வந்தார்.

மறுபுறம் Dudayer உருசியத் துருப்புக்கள் செச்சினியாவை விட்டு முற்றாக வெளியேறினால் மட்டுமே போர் நிறுத்தம் பற்றியும், சமாதானம் பற்றியும் பேசத்தயார் என்று அறிவித்து இருந்தார்.

1991ல் சோவியத் ஒன்றியம் உத்தியோக பூர்வமாகக் கலைக்கப்பட்ட போது சுதந்திரக் குடியரசாகப் பிரகடனப்படுத்திய பெலாறஸ் குடியரசின் சனாதிபதி Alexander Lukshenkoவுக்கும் உருசிய சனாதிபதி பொரிஸ் யெல்சனுக்கும் இடையில் வருகிற ஏப்பிரல் இரண்டாம் நாள் ஒரு இணைப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட இருக்கிறது.

ஆனால் இந்த ஒப்பந்தத்திற்கு எதிர்பாராத விதமாக பெலாறஸ் தேசியவாதிகளிடமிருந்து பலத்த எதிர்ப்புக் கிளம்பியுள்ளது.

சோவியத் வல்லரசின் இரும்புப் பிடிக்குள் அகப்பட்டு பட்ட அல்லல்கள் காரணமாகவும் அதனால் ஏற்பட்ட கசப்பான அனுபவங்கள் காரணமாகவும் பெலாறஸ் மக்கள் உருசிய நாட்டுப் பக்கம் தலை வைத்துப்படுக்கவே பயப்படுகிறார்கள்.

அது மட்டுமல்லாது செச்சினியாவில் தீப்பிடித்து எரியும் நகரங்கள், தகர்க்கப்படும் வீடு வாசல்கள், கொன்று குவிக்கப்படும் பொது மக்கள் இவை பற்றிய காட்சிகள் பெலாறஸ் தேசிய வாதிகளுக்குக் கலக்கத்தையும் அச்சத்தையும் ஊட்டியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மொத்தத்தில் செச்சினிய மக்களது சுதந்திரப் போர் தமிழ் மக்களுக்கு ஒரு பாடமாக ஒரு உதாரணமாகத் திகழ்கிறது.

சுதந்திரத்திற்கும் விடுதலைக்கும் விலை இவ்வளவு தான் என்ற வரையறை இல்லை. வாழ்ந்தால் சுதந்திரமாக வாழவேண்டும் இல்லையேல் வீழ்ந்துபட வேண்டும் என்று எண்ணுபவர்கள் தங்கள் சுதந்திரத்திற்கு என்ன விலை கொடுத்தும் போராடவேண்டும்.

இராட்சத உருசிய வல்லரசுடன் மோதும் சின்னஞ்சிறு குட்டி நாடான செச்சினியா புகட்டும் அரசியல் இராணுவப் பாடம் இதுவே.

செச்சினியா கையளவு நாடாக இருக்கலாம். அதற்காக அந்த நாடும் மக்களும் அடிமைகளாக இருக்க வேண்டுமென்று அர்த்தமில்லை. கையளவு நாட்டுக்கும் கடலளவு வீரம் இருக்கலாம் என்பதை தமிழீழம் போலவே செச்சினியாவும் நிரூபித்துவருகிறது. ✳

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தால் நடாத்தப்பட்ட 6 வது உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி



கொடியேற்ற வைபவத்தின் போது

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் 6வது வெற்றிக்கிண்ணத்திற்கான உதைபந்தாட்டப் போட்டி இம்மாதம் 6ஆம் நாள் வெகு சிறப்பாக நடைபெற்றது. கனடா, நோர்வே, டென்மார்க், யேர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் இருந்து வந்த கழகங்களுடன் பிரித்தானியாவில் உள்ள கழகங்களும் சேர்ந்து 24 கழகங்கள் இச் சுற்றுப்போட்டியில் கலந்துகொண்டு வெகு சிறப்பாக வும், விறுவிறுப்புடனும் விளையாடினர்.

தமிழீழப் போரில் விதையாகிவிட்ட மாவீரர்களிற்கும், பொது மக்களிற்குமாக காலை 10 மணியளவில் அமைதி வணக்கம் செலுத்தப்பட்டது. தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரித்தானியக் கிளைப் பொறுப்பாளரின் வரவேற்புரையுடன் கழகக் கொடி, முன்னாள் பிரபல உதைபந்தாட்ட வீரரான திரு. அந்தோனிப்பிள்ளை அவர்களால் ஏற்றிவைக்கப்பட்டதுடன் விளையாட்டுக்கள் ஆரம்பமாகின.

துணை நிகழ்வுகளாக 15 வயதிற்குட்பட்டோர் உதைபந்தாட்டப் போட்டி, வலைபந்தாட்டப் போட்டி, 12 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் விளையாட்டுப் போட்டி, வினோத உடைப் போட்டி போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளும் மாலை 6 மணிவரை மிகவும் சிறப்பாக நடைபெற்றன.

கலந்துகொண்ட கழகங்களுக்கு மத்தியில் நடைபெற்ற இறுதியாட்டத்திற்கான தெரிவுப் போட்டியில் எல்லா கழகங்களுமே திறமையாக ஆடியிருப்பினும், இறுதியாட்டத்திற்கு, தமது விடாமுயற்சியால், வல்வை புளூசும், நாவாந்துறை விளையாட்டுக் கழகமுமே தெரிவாகின.

இருப்பினும் வெற்றிக்கிண்ணத்தை வல்வை புளூஸ் பெற்றுக் கொண்டது. இரண்டாம் இடத்திற்கு நாவாந்துறை விளையாட்டுக் கழகமும், மூன்றாம் இடத்திற்கு டென்மார்க்கிலிருந்து வந்த டெனிஸ்



உதைபந்தாட்டத்தில் வெற்றி பெற்ற வல்வை புளூஸ் (நீலம்) கழகத்துடன் எதிர்த்தாடிய நவாந்துறை விளையாட்டுக் கழகம் (மஞ்சள்).

விளையாட்டுக் கழகமும் தெரிவாகின.

சிறந்த விளையாட்டு வீரனாக வல்வை புளூசைச் சேர்ந்த திரு. பிரகாஸ் தெரிவானார்.

பெண்களின் வலைபந்தாட்டப் போட்டியில் தமிழீழத்தில் உள்ள பாடசாலைகளின் பழைய மாணவிகளைக் கொண்ட கழகங்கள் பங்குபற்றின. இறுதியாட்டத்திற்கு ஈகிள் கழகமும், இலண்டன் 'கரோ' தமிழ்க் கழகமும் தெரிவாகி வெற்றிக்கிண்ணத்தை ஈகிள் கழகம் பெற்றுக்கொண்டது. சிறந்த விளையாட்டு வீராங்கனையாக இலண்டன் 'கரோ' தமிழ்க் கழக ரதி என்பவர் தெரிவானார்.

15 வயதிற்குட்பட்டோர் உதைபந்தாட்டப் போட்டியில் இலண்டனில் உள்ள பல தமிழ்ப் பாடசாலைகள் பங்குபற்றின. இலண்டன் 'கரோ' தமிழ்ப் பாடசாலையும், மன்னார் புனித சேவியர் பாடசாலையும் இறுதியாட்டத்திற்கு தெரிவாகி, வெற்றிக்கிண்ணத்தை இலண்டன் 'கரோ' தமிழ்ப் பாடசாலைக் கழகம் பெற்றுக்கொண்டது. சிறந்த விளையாட்டு வீரனாக செல்வன் நீல் தெரிவானார்.

இச் சுற்றுப் போட்டியைப் பார்க்கவென ஆயிரத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் கலந்து கொண்டு விளையாட்டை சிறப்பித்தனர். அத்துடன் தாயகத்தில் சிறிது காலத்திற்கு முன் இடம்பெற்ற வரலாற்று இடப்பெயர்வை சித்தரிக்கும் விதத்தில், நடைபெற்ற சிறுவர்களின் வினோத உடைப்போட்டி பார்த்தோரை சிரிக்க வைத்தாலும் அது பலரை சிந்திக்கவும் வைத்ததெனலாம்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இலண்டன் மாநகரில் 'வோல்தம்ஸ்ரோ' எனும் இடத்திற்கான தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. நீல் ஜெராட் வெற்றி பெற்ற வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார்.

பரிசளிப்பின்போது உதைபந்தாட்டத்தில் வெற்றிபெற்ற வல்வை புளூஸ் கழகத்திற்கு அளிக்கப்பட்ட பரிசுப்பணம் £500ம் மற்றும் இரண்டாவது இடத்திற்கு தெரிவான, நாவாந்துறை கழகத்திற்கு கொடுக்கப்பட்ட பரிசுப்பணம் £250 பவுண்களையும் தாயகத்தில் அல்லலுறும் மக்களுக்கு ஒரு அன்பளிப்பாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கே அக்கழகங்கள் மனிதாய அடிப்படையில் திருப்பிக் கொடுத்தன. அதேபோல் புனர்வாழ்வுக் கழகத்தால் நடாத்தப்பட்ட நல்வாய்ப்புச் சீட்டிழுப்பிலும் இரண்டாவது பரிசைப் பெற்ற 'கிங்ஸ்ரன்' எனும் இடத்தில் வசிக்கும் திரு. செ. செல்வபத்மநாதன் தனது பரிசினை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற்கே அன்பளிப்புச் செய்தார்.

சீட்டிழுப்பில் பரிசு பெற்ற இலக்கங்கள்:–

முதலாவது இல: **1337**

இரண்டாவது இல: **8897**



வலைபந்தாட்டப் போட்டியில் வெற்றி பெற்ற (ஈகிள்) கழகம்

மூன்றாவது இல: **610**

ஆறாவது ஆண்டாக நடைபெறும் இச் சுற்றுப் போட்டியூடாகச் சேகரிக்கப்படும் நிதி, தாயகத்தில் குறிப்பிட்ட திட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். கடந்த ஆண்டு வாழ்வக (கண் பார்வையற்ற) திட்டத்திற்கு பத்தாயிரம் பவுண்கள் அனுப்பி வைக்கப்பட்டதுபோல், இம்முறை சேகரிக்கப்பட்ட நிதி தாயக அமைப்பின் வேண்டுகோளுக்கமைய மன்னாரில் உள்ள போசாக்கு புனர்வாழ்வு திட்டத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது. ✣

## அவுஸ்திரேலியாவில் ஆர்ப்பாட்ட ஊர்வலம்

சிறிலங்கா அரசின் ஆயுதப்படைகளின் பயங்கரவாதத்தினால் அல்லலுற்று–அவதியுற்று உயிரையும்–உடமைகளையும் இழந்து தவிக்கும் தமிழீழ மக்களின் உண்மை நிலையை அவுஸ்திரேலிய மக்களிற்கும் உலகிற்கும் எடுத்துக்காட்டும் நோக்கில் அவுஸ்திரேலியாவின் பல மாநிலங்களிலுமிருந்தும் அணிதிரண்ட எண்ணூறுக்கும் மேற்பட்ட தமிழ்மக்கள் 29–4–96 திங்களன்று அவுஸ்திரேலியாவின் தலைநகரம் கன்பரா மாநகரத்திலுள்ள பாராளுமன்றத்தின் முன்பாகவும், பின்பு சிறிலங்கா தூதரகத்தின் முன்பாகவும் ஓர் ஆர்ப்பாட்டத்தை உணர்ச்சி பொங்க நடாத்தினர்.

பாராளுமன்றத்தின் முன்பாகத் தொடங்கிய ஆர்ப்பாட்டத்தில் பச்சிளம் பாலகர்கள் முதற்கொண்டு வயோதிபர்களும் கலந்துகொண்டது காண்போரின் மனத்தை நெகிழ வைத்தது.

'சாட்சிகளற்ற போர்' (War Without Witness) என்று எழுதப்பட்ட பதாதைகளையும் தமிழீழ மக்களின் துன்பங்களையும் சிறிலங்கா அரசின் கொடுமைகளையும் பிரதிபலிக்கும் சுலோக அட்டைகளையும் மக்கள் தாங்கியவாறு "அவுஸ்திரேலியாவே தமிழீழ மக்களைக் காப்பாற்று", "தமிழ் மக்களுக்குத் தேவை சர்வதேச மத்தியஸ்தம்", "இலங்கைத் தேநீர் தமிழர்களின் இரத்தம்" (Ceylon Tea Blood of Tamils), "இலங்கை ஒரு தீவு இரு நாடுகள்", "எங்களுக்குத் தேவை தமிழீழம்", "எங்கள் தலைவர் பிரபாகரன்", "சந்திரிகா கொலைகாரி–கிட்லரின் மறு அவதாரம்", "எட்டப்பன் கதிர்காமர் ஒரு இனத்துரோகி" போன்ற கோசங்களையும் எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தைப் பார்வையிட வந்த பாராளுமன்ற உறுப்பினர்களிடம் அவுஸ்திரேலிய வெளிநாட்டமைச்சருக்கும், பிரதம மந்திரிக்குமான மகஜர்கள் கையளிக்கப்பட்டன. எட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் அங்கு குழுமியிருந்த மக்களுக்கு ஆறுதல் கூறும் வகையில் உரையாற்றினர்.

பாராளுமன்றத்தின் முன்பாக இரு மணித்தியாலங்களாக நடைபெற்ற ஆர்ப்பாட்டம் மக்களின் அணிவகுப்புடன் சிறிலங்கா தூதுவரகத்தை நோக்கி ஊர்வலமாகச் செல்லத்தொடங்கியது.

ஊர்வலத்தின் முன்பாக தமிழீழத்தில் சிறிலங்கா இராணுவம் புரிகின்ற அட்டூழியங்களை இளைஞர்களும் யுவதிகளும் ஒரு வயோதிப மாதும் நடித்துக்காட்டியவாறு சென்றனர். அதையடுத்து சந்திரிகா, கதிர்காமர், அனுருத்த ரத்வத்தை ஆகியோரின் கொடும்பாவிகள் கொண்டு செல்லப்பட்டன. ஊர்வலம் சிறிலங்காத் தூதுவரகத்தை அடைந்த பின்பு இரு மணித்தியாலங்கள் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அங்கு கொடும்பாவிகள் அழிக்கப்பட்டு கோசங்கள் எழுப்பப்பட்டன. இறுதியாக தென்துருவ தமிழ்ச் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் திரு. அ. பரராசசிங்கம் அவர்களின் உணர்வுபூர்வமான உரையுடன் ஆர்ப்பாட்ட ஊர்வலம் வெற்றிகரமாக நிறைவேறியது. ✱

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய...

கதறின் பிறமென்ற் அவனுக்கு முன்னால் நின்றாள். அவள் அவனுக்கு ஞாபகம் இருந்ததை விடவும் அழகாகத் தோற்றமளித்தாள். அவர்கள் இருவரும் மௌனமாகச் சிறிது நேரம், ஒருவரை ஒருவர் உற்றுநோக்கிக் கொண்டிருந்தனர். அவன் அவளுடைய முகத்தையும், கண்களையும் கவனமாக ஆராய்ந்தான். அவள் இப்போ ஒரு முதிர்ந்த பெண்ணாகக் காட்சியளித்தாள். ஒரு மென்மையும், மிகுந்த கஷ்டப்படுவதன் மூலம் பிரதிபலிக்கும் கழிவிரக்கமும் அவளில் காணப்பட்டன.

"என்னுடைய கடிதங்களுக்குப் பதிலளிக்காமல் இருந்ததற்கு உன் கழுத்தை முறிக்கவேண்டும்" மார்க் சொன்னான்.

"ஹலோ... மைக்... அவள் மென்மையாக முணுமுணுத்தாள்.

அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் அணைத்தபடி சிறிது நேரம் இருந்தனர். ஒரு மணித்தியாலம்வரை அதிகம் பேசாமல் ஒருவரை ஒருவர் பார்த்ததில், திருப்தியுற்றவர்களாக, புன்சிரிப்புக்களும், கரங்களின் மெதுவான ஸ்பரிசங்களும், இடைக்கிடை அன்பாகக் கன்னத்தில் முத்தமிடுவதுமாக இருந்தனர்.

இரவு உணவின்போது மார்க்கின் வெளிநாட்டு நிருபர் வேலையின் அனுபவங்களைப்பற்றிய சிறு சிறு கதைகளே கதைத்தனர். திடீரென மார்க்கிற்கு சம்பாசணையைத் தன்னைப் பற்றிய கதைகளிலிருந்து கிற்றி திசை திருப்புவதை உணர்ந்தான்.

உணவின் கடைசி அம்சமாக பாலாடைக்கட்டி வந்தது. மார்க் தனது கியோ(Keo) பியரில் எஞ்சியிருந்ததை வார்த்துக் கொண்டான். இன்னுமொரு இறுக்கமான மௌன இடைவெளி தொடர்ந்தது. இப்பொது கிற்றி அவனது கேள்விகள் கேட்டுக் கொண்டிருக்கும் பார்வைகளினால் அசௌகரியமாக நெளிந்தாள்.

"வா, நாங்கள் துறைமுகம் வரை நடந்துவிட்டு வருவோம்" அவன் சொன்னான்.

"நான் எனது போர்வையை எடுத்து வருகிறேன்", அவள் சொன்னாள்.

அவர்கள் மௌனமாக கட்டிடங்களை ஒரு அருகே கொண்டிருந்த இறங்குதுறையில் நடந்து கடலுள்ளான சுவரின் மீதும் நடந்து, பின் முகத்துவாரத்தில் நிறுவப்பட்டிருந்த வெளிச்ச வீட்டிற்கும் சென்றனர். மேகமூட்டமாக இருந்தபோதும் தொலைவில் நங்கூரமிட்டிருந்த படகுகளின் மங்கலான தோற்றத்தைக் காணக்கூடியதாக இருந்தது. இழுவை ப்படகொன்று, துறைமுகப் பாதுகாப்பிற்குள் வருவதற்கு வெளிச்சத்தைக் கடலை நோக்கி வெளிச்ச வீடு வீசுவதைப் பார்த்துக் கொண்டிருந்தனர். மென்மையான காற்று கிற்றியின் பொன்நிறக் கூந்தலூடே வீசிக் கொண்டிருந்தது. அவள் போர்வையைத் தோள்மூட்டுகளின் மேல் இறுகப் போர்த்திக் கொண்டாள். மார்க் ஒரு சிகரெட்டைப் பற்றிக்கொண்டு சுவரில் அமர்ந்தான். மரண அமைதி நிலவியது.

"நான் இங்கு வந்ததால் உன்னைக் கடும் துன்பத்தில் ஆழ்த்திவிட்டேன். நாளை நான் இங்கிருந்து சென்றுவிடுகிறேன்." அவன் சொன்னான்.

"நீங்கள் போவதை நான் விரும்பவில்லை" அவள் கடலை நோக்கிப் பார்வையைத் திருப்பிய வண்ணம் மேலும் சொன்னாள்.

'உங்களுடைய கேபிள் கிடைத்ததும் நான் என்ன மாதிரி உணர்வுகளை அடைந்தேனோ எனக்கே தெரியாது. நான் மறக்க கடுமையாக முயற்சித்த பல நினைவுகளை அது திரும்பவும் ஞாபகமூட்டியது. ஆயினும் எனக்குத் தெரியும். இந்தச் சந்தர்ப்பம் எப்படியாவது வந்தே தீருமென்று. நான் இந்தச் சந்தர்ப்பத்தை நினைத்து ஒருவகையில் பயந்ததுண்டு... ஒரு வகையில் இதற்காக சந்தோசமும் படுகிறேன்.

ரொம் செத்து நான்கு வருடங்களாகின்றன. இதிலிருந்து நீ விடுபட முயலக்கூடாதா?

பெண்கள் போரில் கணவன்மாரை இழக்கின்றனர். அவள் மெதுவாக முணுமுணுத்தாள். நான் ரொம்முக்காக அழுதேன். நாங்களிருவரும் மிக அன்பாக இருந்தோம். ஆயினும் நான் தொடர்ந்து வாழவேண்டுமென்று தெரியும். ஆனால் ரொம் எப்படிச் செத்தார் என்பதுகூட எனக்குத் தெரியாது.

அதில் அப்படி ஒன்றும் விசேடமில்லை. வேறு பத்தாயிரம் மரைன்களுடன் அவனும் ஒரு மரைன் ஆக கடற்கரையொன்றைக் கைப்பற்றப் போனான். ஒரு குண்டு அவனை வீழ்த்தியது. அவன் இறந்து போனான். ஒரு போற்றப்படும் வீரனாக இல்லாமல், மெடல்கள் எதுவும் இல்லாமல் நான் அவளைக் காதலிக்கிறேன் என்று கிற்றிக்குச் சொல்லுங்கள், என்று சொல்வதற்குக்கூட நேரமில்லாமல் வெறுமனே ஒரு குண்டடிபட்டுச் செத்துப்போனான். அவ்வளவுதான்.

கிற்றியின் முகம் வெளிறிப்போயிற்று. மார்க் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்து அவளுக்குக் கொடுத்தபடி கேட்டான். "சரி, சாண்ட்ரா எப்படிச் செத்தாள்"? என்னுடைய அன்பான பிள்ளையும் ஏன் சாகவேண்டும்.

நான் கடவுள் இல்லை. இதற்கு எனக்கு மறுமொழிகூறத் தெரியாது.

அவளும் கடற்சுவரில் உட்கார்ந்து அவனது தோளில் தலையைச் சாய்த்தபடி சீரற்ற பெரு மூச்சுக்களோடு சொன்னாள். நான் நினைக்கிறேன். எனக்கு ஓடுவதற்கு இனி இடமில்லை.

"நீ ஏன் எனக்கு அதைப்பற்றிச் சொல்லக்கூடாது". "என்னால் முடியாது". "அப்படி செய்ய உனக்கு நேரம் வந்தவிட்டது என நினைக்கிறேன்".

ஆறேழு தரம் கிற்றி கதைக்க முற்பட்டாள். அவளாள் தெளிவற்ற சிறிய முணுமுணுப்புக்களைத்தான் செய்ய முடிந்தது. கடந்த பயங்கரமான வருடங்களின் பாதிப்பு மனத்துள் உறைந்திருந்தது. அவள் சிகரைட்டை நீரில் எறிந்துவிட்டு மார்க்கைப் பார்த்தாள். அவன் சொன்னது சரிதான், அவள் தனது கவலைகளை அவனிடம் மட்டுமே சொல்லியாறலாம்.

"ரொம்மைப் பற்றிய தந்தி கிடைத்ததும், மிக்க கொடூரமாயிருந்தது. அந்தளவுக்கு அவனை நேசித்தேன்.

தொடரும்...

# இந்தியாவும் ஈழத் தமிழர்களும்

வரலாற்றுக் காலம் தொடக்கம் இந்தியாவின் நேச சக்தியாக ஈழத் தமிழினம் இருந்து வந்துள்ளது. மொழி ரீதியாகவும் - பண்பாட்டு ரீதியாகவும் - அரசியல் ரீதியாகவும் நீண்டதொரு வரலாற்று உறவு, இருபகுதி மக்களிடையேயும் நிலவிவருகின்றது. இந்தியா சந்தித்த வெற்றிகளின்போதும், தோல்விகளின்போதும் இந்திய மக்கள் அனுபவித்த அதே மன உணர்வுகளையே, ஈழம்வாழ் தமிழர்களும் வெளிப்படுத்தினர். இந்தியாவின் தேசிய பாதுகாப்பிற்குச் சவாலாக எழுந்த இந்திய-சீனப் போரின்போதும், இந்திய-பாகிஸ்தான் யுத்தங்களின்போதும், ஈழத் தமிழர்கள், இந்தியாவின் பக்கமே நின்று குரல் கொடுத்தனர்.

ஆனால், இதற்கு மாறான உணர்வலைகளையே சிங்கள தேசம் காலங்காலமாக வெளிப்படுத்தி வந்துள்ளது. வெளியிலிருந்து இந்தியா நெருக்கடிகளைச் சந்தித்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் இந்தியாவின் பகைவர்களுக்கே சிங்கள அரசுகள் ஆதரவு வழங்கிவந்தன. இந்தியாவின் தேசிய நலனுக்கு விரோதமாகச் செயற்படுவதே சிறீலங்காவின் வெளிவிவகாரக் கொள்கையாகவும் இருந்தது. அந்தளவுக்கு பாரதநாட்டைத் தனது பகை நாடாகவே சிறீலங்காவின் அரசியல் வரலாறு சித்தரிக்கின்றது. ஆனால், இந்த உண்மைவரலாற்றைப் புறந்தள்ளிவிட்டு - நண்பனைப் பகைவனாகவும், விரோதியைத் தோழனாகவும் பார்க்கும் மாபெரும் வரலாற்றுத் தவறை இந்திய அரசு இழைக்கின்றது. இந்தவகையில் தனது நட்பு சக்தியான ஈழத் தமிழர்களை அழிக்க, தனது பகைமைச் சக்தியான சிங்கள அரசிற்குப் பலவகைகளிலும் துணைபோகும் இந்திய அரசின் ஈனச்செயலை, ஈழத் தமிழர்களால் ஜீரணிக்க முடியாதுள்ளது.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தளவில் - அன்றிலிருந்து இன்றுவரை - ஈழத் தமிழரின் நலன்களுக்கு எதிராகவே இந்தியா செயற்பட்டு வருகின்றது. தமிழீழ மக்களின் தனி அரசுப் போராட்டம் தொடர்பாக இந்தியாவுக்கு இருக்கும் சில அச்சங்களே, அது எடுக்கும் இந்த எதிர் நிலைப்பாட்டிற்குக் காரணமாகும்.

இலங்கையின் இனப்போரைச் சாட்டாகவைத்து தனது தென்பகுதி வாசலில் பாரத நாட்டின் பகைமைச் சக்திகளான அமெரிக்கா உள்ளிட்ட மேற்குநாட்டு சக்திகள் தங்களது ஆதிக்கத்தைப் பலப்படுத்திவிடும் என்று இந்திய அரசு பயந்தது. தனது சொந்தப் பாதுகாப்பிற்கே அது ஆபத்தை விளைவித்துவிடும் என்றும் இந்திய அரசு அஞ்சியது. எனினும், இந்த அச்சங்கள் பனிப்போர் முடிவுடன் தோன்றிய புதிய உலக ஒழுங்கின் பிரகாரம் நீடித்து- நிலைக்க எந்த வித காரணமும் இல்லை. இலங்கைத்தீவில் எந்த சக்திகளின் கைஓங்கினால் அது தனது பிராந்திய நலனுக்குப் பங்கம் விளைவிக்கும் என்று இந்தியா கருதியதோ, அந்த சக்திகளே இன்று இந்தியாவின் நட்பு நாடுகளாகவும் - வர்த்தகப் பங்காளிகளாகவும் மாறிவிட்டன. எனவே, ஈழத் தமிழரின் விடுதலைப் போராட்டம் தொடர்பாக இந்திய அரசிற்கு இருந்ததொரு பழைய அச்சம், இன்று காலாவதியாகிவிட்டது.

இதேவேளை, ஈழத்தில் தமிழர்கள் தனி அரசு ஒன்றை அமைப்பது தனது தேசிய ஒருமைப்பாட்டிற்கு ஆபத்தை விளைவித்துவிடும் என்ற ஒரு அச்சமும் இந்தியாவிற்கு உள்ளது. தமிழீழத் தனி நாட்டின் உதயம் திராவிடக் கிளர்ச்சியைக் கிளறி தென்னிந்திய மாநிலமான தமிழ்நாட்டிலும் பிரிவினைப் புயலைப் பிறப்பித்துவிடும் என்று, இந்தியா அஞ்சுகின்றது. உண்மையில் இது, அபத்தமான கருத்தின் அடிப்படையில் எழுந்ததொரு மிகைப்படுத்தப்பட்ட அச்சமேயாகும்.

இன அழிப்பைத் தடுத்து நிறுத்துவதற்காக ஈழத் தமிழர் நடாத்தும் தற்காப்புப் போராட்டம், இன அழிப்பு என்ற யதார்த்தத்தை எதிர்கொள்ளாத தமிழ்நாடு மாநிலத்தின் மக்களையும் போராடத் தூண்டும் என்ற இந்திய அரசின் பயம், அநாவசியமானதாகும் எனினும், இந்தத் தேவையற்ற அச்சத்தின் அடிப்படையிலேயே, ஈழத்தமிழருக்குப்பாதகமான தீர்மானங்களை இதுவரை நாளும் இந்திய அரசு எடுத்து வருகின்றது.

இலங்கைத்தீவில் சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களால் -தமிழ் இனம் இனப்படுகொலைக்கு உட்படுத்தப்படுகின்றது என்பது, இந்திய அரசும் அறிந்த உண்மை. இந்த இன அழிப்பிலிருந்து தற்காத்துக்கொள்வதற்காக ஈழத் தமிழர் நடாத்தும் விடுதலைப் போராட்டத்தைத் தனது தேசிய நலனுக்கு எதிரான செயலாக இந்தியா சித்திரிக்க முயல்வது, ஏற்றுக்கொள்ள முடியாத தொன்றாகும்.

சிங்களப் பேரினவாதத்தின் தமிழ் இன அழிப்புக் கொள்கைக்கு இந்தியாவின் இந்த நிலைப்பாடு உற்சாகம் ஊட்டுவதாகவே உள்ளது.

என்றுமில்லாத அளவுக்கு - இப்போது - தமிழ் இன அழிப்பை இலக்காகக் கொண்ட யுத்தத்தை சிங்கள அரசு தீவிரப்படுத்தி உள்ளது. யாழ்ப்பாணத்தின் ஐந்து இலட்சம் மக்கள் தமது வாழ்விடங்களை இழந்து, அகதிகளாகி அல்லற்படுகின்றனர். வடக்கு-கிழக்கில் தொடர்ந்தும் யுத்த நெருக்கடியும் இன அழிப்பு அபாயமும் தீவிரமடைந்து வருகின்றன. தென்னிலங்கை வாழ் தமிழர்கள் - குறிப்பாக கொழும்பு வாழ் தமிழர்கள் - சந்திரிகா அரசின் இனவாதக் கொள்கைகளாலும், அணுகுமுறைகளாலும் பெரும் துன்பத்தை அனுபவிக்கின்றனர். ஒட்டுமொத்தமாகச் சொல்லப்போனால், ஒரு புறம் இனக்கொலை அபாயத்தையும் - மறுபுறம் வேண்டப்படாத மக்களாகக் கணிக்கப்பட்டு துன்புறுத்தப்படும் அவலத்தையும் இலங்கைத் தமிழர்கள் எதிர்கொள்கின்றனர். இத்தகைய இக்கட்டான வரலாற்றுச் சூழலிலேயே சிங்கள அரசிற்கு இந்திய அரசும் உதவி வருகின்றது.

தமிழரின் பாதுகாப்புக் கவசமான புலிகள் இயக்கத்தின் பலத்தைச் சிதைக்கும் நடவடிக்கைகளில் இந்திய அரசு ஈடுபடும் அதேவேளை, சிங்களப் படைகளின் பற்களையும் - நகங்களையும் கூர்தீட்டிவிடும் வகையில் அதற்கு இராணுவ உதவிகளையும் வழங்குகின்றது.

இது, தமிழினப் படுகொலையை மேலும் அபாயகரமான கட்டத்திற்கு நகர்த்தவே உதவப்போகின்றது. அத்துடன் சிங்களப் பேரினவாத அரசுடன் இணைந்து இந்திய அரசும், ஈழத் தமிழர்களை இனப்படுகொலை செய்கின்றது என்ற வரலாற்று அவப்பெயரையும், இந்தியா சம்பாதிக்கப்போகின்றது.

ஈழத் தமிழரின் அழிவு சிங்களப் பேரினவாதத்திற்கு பெருவெற்றியாக அமையும். ஆனால் அது, இந்திய மக்களுக்கு எந்த ஒரு நன்மையையும் பெற்றுக்கொடுக்க மாட்டாது. அதுபோல இந்தப் போரில் சிங்கள அரசு பெறும் வெற்றி, இந்தியாவின் நலனுக்கு எந்தவகையிலும் உதவப்போவதில்லை. எனவே, இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக, இந்தியா புதிய அணுகுமுறைகளைப் பிரயோகிக்க வேண்டும்.

இந்திய மக்களின் உண்மையான நட்புச்சக்தி ஈழத் தமிழர்கள்தான். ஆகவே, ஈழத் தமிழினத்தின் நலனைப் பேணும் வகையில் இந்திய அரசு தனது வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றங்களை மேற்கொள்ள வேண்டும். மனிதாபிமான அடிப்படையைக் கொண்ட தமிழரின் விடுதலைப் போராட்டத்தை, இந்திய அரசு ஆதரிக்கவேண்டும். பொதுத்தேர்தலை எதிர்கொண்டவாறு நிற்கும் இந்திய அரசியற் களத்தில், வென்று ஆட்சி அமைக்கப்போகும் கட்சி, ஈழத்தமிழரின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யும் நோக்குடன், மேற்குறித்த சாதக அணுகுமுறைகளைக் கடைப்பிடிக்க வேண்டும் என்பதே, தமிழீழ மக்களின் விருப்பமும் - எதிர்பார்ப்புமாகும்! *

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net







எங்கள் சகோதரர்




சுவிஸ் அரசிடம்



அமைதிக்கு உழைத்தவர் மனித உரிமைக்கு
குரல் கொடுத்தவர் கைதாதல் - நியாயமோ
இது சர்வதேச சட்டத்துக்கு ஏற்குமோ
ஐ.நா.வின் மக்களதும் மனிதனதும்
சாசனத்தின் படி அது - அடிப்படை உரிமையே!



விடுதலை பெற



கோருவோம்

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

U.T.O., 211 Katherine Rd,
London E6 1BU, UK.
Tel: 0181 - 503 4294,
Fax: 0181 - 470 8593

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-350 980 F: 22381040

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
Tel: 718-657-9463
Fax: 718-523-7399

L.T.T.E
P.O.Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

T.C.C
Grt. Hertoginnein - 106
2517 EL Den Haag, Nederland
Tel: 070-346 1963, Fax: 070 362 5172

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
Vissingebacken 11 1TR
16364 Spanga, Sweden.

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

Printed by Observer Group Newspapers, Upton Court, Slough, Berks. Tel (01753) 523355